[21st September 1961

III. GOVERNMENT BILL.

THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960) AS AMENDED BY THE JOINT SELECT COMMITTEE—*cont.*

Clause 3—cont.

Sub-clause (42)

SRI N. K. PALANISAMI : Sir, I move—

For sub-clause (42), substitute the following—

" (42) ' Standard acre ' means—

(*a*) One acre of land assessed to land revenue at the rate of Rs. 10 and above but below Rs. 15 per acre. "

I am not moving part (*b*) of the amendment.

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :—

For sub-clause (42) (1), substitute the following : —

" (1) in any area in the State except the transferred territory—

(*a*) 0.75 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 15 and above per acre; or

(*b*) 1.00 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 10 and above but below Rs. 15 per acre; or

(*c*) 1·15 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 8 and above but below Rs. 10 per acre; or

(*d*) 1·25 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 6 and above but below Rs. 8 per acre; or

(*e*) 1·50 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 4 and above but below Rs. 6 per acre; or

(*f*) 1·6 acre of wet land assessed to land revenue below Rs. 4 per acre; or

(*g*) 1·6 acre of dry land assessed to land revenue at the rate of Rs. 2 and above; or

(*h*) 1·75 acre of dry land assessed to land revenue at the rate of Rs. 1.25 and below Rs. 2 per acre; or

(*i*) 2·0 acre of dry land assessed to land revenue below Rs. 1·25 per acre."

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

10·00 a.m. " In sub-clause (42) (1) (*a*), after the words ' land revenue ', add the words ' including water-cess, etc. ' "

21st September 1961]

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

SRI T. SAMPATH : Sir, **I move—**

" In clause 3, sub-clause (42) (1) (*a*) for the letters and figures ' Rs. 10 ', substitute the letters and figures ' Rs. 15. ' "

The amendment was duly seconded.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move—

" In sub-clause (42), omit items (1) (*b*) to (*e*) and substitute the following as (1) (*b*) :—" (*b*) 2 acres of wet land assessed to land revenue at the rate of Rs. 4 and above but not below Rs. 10 and 2·5 acres of wet land assessed to land revenue at any rate below Rs. 4 per acre" and renumber the other items suiatbly.

SRIMATHI HEMALATHA DEVI : I second the amendment.

SRI K. G. PALANISWAMY GOUNDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய திருத்தப் பிரேரேபணையை நான் பிரேரேபிக்கின் றேன்—

" In sub-clause (42), item (1) (*d*), for figures ' 1.75 ', substitute the figure ' 2 '. "

The amendment was duly seconded.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move—

" In sub-clause (42) (1), for items (*d*) to (*h*), substitute the following items :—

' (*d*) 2 acres of wet land assessed to land revenue at any rate below Rs. 6 per acre.

(*e*) 3 acres of dry land assessed to land revenue at the rate of Rs. 2 and above per acre.

(*f*) 4 acres of dry land assessed to land revenue at any rate below Rs. 2 per acre '."

The amendment was duly seconded.

SRI K. G. PALANISWAMY GOUNDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய திருத்தப் பிரேரேபணையை நான் பிரேரேபிக்கின் றேன்—

" In sub-clause (42) (1) item (*h*), for the figure ' 4 ', substistitute the figure ' 6 '. "

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" For sub-clause (42) (2), substitute the following :—

' (2) in the Kanyakumari district—

(*a*) 1 acre of registered wet land irrigated by any source forming part of, or benefited by any project; or

(*b*) 1·2 acres of registered dry land irrigated by any source mentioned in item (*a*); or

(*c*) 1.5 acres of dry land irrigated by any Government source other than a source mentioned in item (*a*) or

(*d*) 2·5 acres of unirrigated dry land. ' "

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" For sub-clause (42) (3), substitute the following :—

' (3) in the Shencottah taluk of the Tirunelveli district—

(*a*) 1·2 acres of wet land irrigated by any river or stream or by tank fed by any river or stream; or

(*b*) 1·5 acres of wet land irrigated by any Government source other than a source mentioned in item (*a*) or

(*c*) 1·75 acres of dry land irrigated by any Government source or

(*d*) 2·5 acres of unirrigated dry land. ' "

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

DEPUTY SPEAKER : I think we can take up the amendments to the Explanation later.

SRI R. SRINIVASA IYER : Sir, I suggest that as the Explanation is connected with the sub-clause and as reference will have to be made to the same while speaking on the other amendments moved to this sub-clause, the amendments to the explanation may also be permitted to be moved now.

DEPUTY SPEAKER : Yes, I have no objection. The hon. Member may move his amendment.

SRI R. SRINIVASA IYER : Sir, I move—

" In sub-clause (42), Explanation IV (*a*) (ii), for the words ' at the rate of Rs. 4 and above but below Rs. 6 per acre ', substitute the words ' at any rate below Rs. 4 per acre. ' "

" In sub-clause (42), Explanation IV (*b*), for the words ' one acre of wet land assessed to land revenue at the rate of Rs. 4 and above but below Rs. 6 per acre ', substitute the words ' one acre of dry land assessed to land revenue at the rate of Rs. 2 and above per acre '."

SRI T. SAMPATH : I second the amendments, Sir.

DEPUTY SPEAKER : The sub-clause and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : கனம் சபைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே திட்டக் கமிஷன் எந்த எந்த முறையிலே பூமியைப் பிரிக்க வேண்டுமென்று திட்டவட்மாகச் சொல்லியிருக்கிறது. ஒரு " எகனுமிக்

யூனிட்" என்றால் ஒரு "ப்ளௌ யூனிட்" என்று சொல்லியிருக்கிறது. ஒரு "ப்ளௌ யூனிட்" என்றால், ஒரு குடும்பம் எந்த அளவு விவசாயம் செய்ய முடியுமோ அந்த அளவைக் கணக்கில் கொண்டு, அதிக பட்சமாக மூன்று "பாமிலி யூனிட்கள்" வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

பூமி சில இடங்களில் தரம் குறைவாக இருக்கலாம். சில இடங்களில் நல்ல தரம் உள்ளதாக இருக்கலாம். எல்லாவற்றையும் ஒரே மாதிரியாக வைக்க முடியாது. வருமானம் எந்த அளவு வருகிறதோ அதை அனுசரித்து இந்தக் கொள்கையின்படி நிலத்தைப் பாகுபாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனால், இந்த மசோதாவில் கண்டிருப்பதைப் பார்த்தால், அந்தக் கொள்கைக்கு நேர்மாறாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

நாற்பது வருஷங்களுக்கு முன்னால் செட்டில்மெண்ட், சர்வே செய்யப் பட்டபோது எட்டணா முதல் ஒரு ரூபாய் வரை நில வரி விதிக்கப்பட்ட பூமி இன்றையதினம் ஏக்கர் ஒன்றில் சுமார் 600 ரூபாய் முதல் 700 ரூபாய் வரையில் வருமானம் எடுக்கக்கூடிய பூமியாக இருக்கிறது. குத்தகை முறையில்கூட 500 ரூபாய் வருகிறது. தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால், காவிரி-மேட்டூர் பாசனப் பிரதேசத்தில் இரண்டு லட்சம் ஏக்கரா பூமி இருக்கிறது. அங்கு பேஸிக் ரெவினியூ எட்டணாவிலிருந்து நான்கு ரூபாய் வரைதான் இருக்கிறது. நான்கு ரூபாய் வரி செலுத்தக் கூடிய பூமியானது சாதாரணமாக பத்து, பதினைந்து ரூபாய் வரி செலுத்தக் கூடிய தரம் என்று பிரித்திருக்கிறோமே அதைவிட அதிகமான தரமுள்ளதாக இருக்கிறது. முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றாலும், அது 12 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாகச் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏக்கரொன்றுக்கு 500 ரூபாய் வருமானம் என்று வைத்துக்கொண்டாலுங் கூட, 15,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நான் சொல்லக்கூடிய கணக்குப்படி அதே பூமி 60,000 ரூபாய் வரையிலும வருமானம் தரக்கூடியதாக இருக்கிறது. நிலத்தின் தரத்தைப் பிரிப்பதிலே தவறான கொள்கை கையாளப்பட்டிருக்கிறது. திட்டக் கமிஷன் சொன்னபடி வருமானம் அடிப்படையில், எந்த அளவு குடும்பம் விவசாயம் செய்ய முடியுமோ அந்த அளவு வைத்துத்தான் பிரிக்கவேண்டும். இங்கே சரியான முறையில் பிரிக்கப்படவில்லை. 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதைக் குறைந்த பட்சம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றாவது குறைக்க வேண்டும். அதற்குத் தகுந்த மாதிரி மற்றவைகளையும் பாதியாக்கவேண்டுமென்பதுதான் திருத்தம். அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கேட்டுக் கொள்கின்றேன்.

SRI T. SAMPATH : Sir, sub-clause (42) defines standard acre. It is defined in sub-clause (42) (1) (*a*) as '1 acre of wet land assessed to land revenue at the rate of Rs. 10 and above per acre'. There are lands in Thanjavur and Tirunelveli districts which are assessed to land revenue at the rate of Rs. 20 and more per acre. To classify all lands under one category, viz., under 'Rs. 10', without any distinction may not be quite reasonable and I would even say, it may not be equitable also. Because, there is a big slab 'Rs. 10 and above'. I think there must be a slab in between Rs. 10 and higher rates. I may even say that it may be discriminatory also. Therefore, I say that there must be a classification in between the two. To give effect to this suggestion, I have moved my amendment. In this connection, I wish to point out that we must also take into consideration the cost of cultivation and everything. Now, the cost of cultivation has gone up. Keeping all these things in view, I have suggested that there must be a slab in between the two.

Sri V. K. KOTHANDARAMAN: கனம் தலைவர் அவர்களே, "ஸ்டாண்டர்டு ஏக்கர்" என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது இந்தப் பிரிவில். இது பெயரளவுக்குத்தான் இருக்கிறது. வெளியிலே பிரசாரம் செய்யும்போதும், பத்திரிகையிலே விளம்பரத்தைப் பார்த்தாலும், "30 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு ஆக்கிவிட்டோம் பார்த்தீர்களா! ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு முப்பது ஏக்கர் மட்டும் வைத்துவிட்டு, மீதியை எடுத்து நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கப்போகிறோம்" என்றுதான் மேலுக்குத் தெரியக் கூடிய அளவுக்கு இருக்கிறது. ஆனால், ஸ்டாண்டர்டு ஏக்கர் எந்த அடிப்படையில் மசோதாவில் நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதைப் பார்த்தால், நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை ஒருவர் அனுபவிக்க கூடிய அளவுக்குப் போய்விடுகிறது. இந்த நிலைமையை நாம் திட்டவட்டமாக ஆராய்ச்சி செய்து, நல்ல முறையில் மாற்றியமைப்பதற்காக வேண்டி இப்பொழுது நான் திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். இவைகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஓரளவு நல்ல நிலைமை ஏற்படும் என்பதற்காகத் தான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். காரணம் எப்பவோ ஹைதர் காலத்தில் போடப்பட்டது நிலத் தீர்வை. நமது பாட்டன் காலத்தில் போடப்பட்ட நிலத்தீர்வையாகக்கூட இருக்கலாம். அந்த நிலத்தீர்வையை அப்படியே இப்போதும் வைத்துக்கொண்டு—சர்க்கார் தண்ணிக்குப் போடக்கூடிய தீர்வையையும் தனியாக வைத்துவிட்டு அது வேறே, இது வேறே என்று பார்த்தால், அதுவும் மிகவும் குறைவாக இருக்கும். உண்மையிலேயே நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்று நினைத்தாலும்கூட நிலத்தீர்வையை மாத்திரம் வைத்து அதை நிர்ணயிப்பதனால் கொஞ்சம்கூட நிலம் கிடைக்காது போய் விடக்கூடும். இரண்டு நாளைக்கு முன்னால் மதிப்பிற்குரிய திரு. சீனுவாசய்யர் அவர்கள்கூட சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் சிலவிடங்களில் தண்ணீர் தீர்வை வேறு, நிலத் தீர்வை வேறு என்று பிரித்துப் போட்டுக் கொண்டிருப்பதனால் ஒரு ஏக்கருக்கு இரண்டும் சேர்த்து போடப்படுகிற வரி மற்ற பகுதியைவிட அதிகமாகப் போய்விடுவதாகச் சொன்னார். ஆகவே, இந்த லாண்டு டாக்ஸ், வாடர் டாக்ஸ் இவற்றை கன்சாலிடேட் பண்ணவேண்டுமென்றால். உண்மையிலேயே ஓரளவு நிலத்தை நாம் பெறவேண்டுமென்றால் இதையெல்லாம் கன்சாலிடேட் பண்ணி கணக்குப் பார்க்க வேண்டும். சும்மா லேசாக விட்டுவிடக் கூடாது.

இதில் என்ன இருக்கிறது என்றால் புஞ்சையை நஞ்சையாக மாற்றியிருக்கிற நிலம் எவ்வளவோ இருக்கிறது. மிகக்குறைவாக அந்த நிலங்களுக்கு வரிபோடப்பட்டிருக்கிறது. அந்தக் குறைந்த தீர்வை அடிப்படையில் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றால் அதிகமான நிலம் போய்விடும். பிரதானமாக இந்தச் சட்டத்தில் குறிக்கோள் ஈடேறவேண்டுமென்றால், நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலம் கிடைக்கவேண்டுமென்றால், இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்கவேண்டும். என்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அப்போதுதான் நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலம் அளிக்க கொஞ்சமாவது கிடைக்கும். ஆகவே சட்டத்தின் கொள்கையை நிறைவேற்றுவதற்குச் சாதகமாகத் திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRI N. MAHALINGAM: கனம் உதவிசபாநாயகர் அவர்களே, ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதைப் பற்றி செலெக்ட் கமிட்டியின் அறிக்கையில் கொடுத்திருக்கக்கூடிய வாசகங்களைத் திருத்தவேண்டுமென்று பல திருத்தங்கள் வந்திருக்கின்றன. அந்தத் திருத்தங்களை நான் எதிர்க்க விரும்புகிறேன். தவிரவும் சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய ஒரு ஏக்கர் வெட் லாண்டுக்கு 10 ரூபாய்க்கு மேல் ரெவின்யு இருக்கும் பூமி என்று அளவு வைத்தோம். என்று சொன்னால்,—இந்தக் கணக்கு அவ்வளவு சரியாக இருக்காது. விலை கூடுதலாக இருக்கிறது. சுமார் ஏழாயிரம், எட்டாயிரம் ரூபாய் வரையிலும் கோவை ஜில்லாவில் இருக்கிறது. இன்னும் சில பிரதேசங்

21st September 1961] [Sri N. Mahalingam]

களில் இன்னும் அதிகமான விலை கூட இருக்கிறது. 1.2 எக்கர், ரூ. 8-ல் இருந்து 10 வரை என்றும், 1·6 எக்கர் ரூபாய் 6-ல் இருந்து ரூ. 8 வரையிலும், 1·75 எக்கர் ரூபாய் 4-ல் இருந்து ரூபாய் 6 வரையிலும் என்பதாக எல்லாம் வரையறுத்திருப்பது அவ்வளவு பொருத்தமாக அமையவில்லை என்று கருதுகிறேன். ஆக இந்தக் கணக்குகளை ஓரளவு மாற்றியமைக்க வேண்டியது அவசியம்.

ஸ்டாண்டர்டு எக்கர் என்பதை 15 ரூபாயாக மாற்றவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் இப்போது இருக்கிற சீர்திருத்தப் படிக்கு பூமி அதிகமாக வந்துவிடாது. அதற்காக 15 ரூபாயாக மாற்றி அமைத்தால் மிக அதிகமாகப் பூமி வந்துவிடும். உழவனுக்குப் பூமி கிடைக்கலாம் என்று சொல்லப்படுகிறது எந்தவிதமாக மாற்றி அமைத்தாலும் நம் தேசத்தில், அதுவும் நம் மாகாணத்தில் சதுர மைலுக்கு 640 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். இதில் பூமி உள்ளவர்கள் குறைவு. பூமி இல்லாதவர்கள் அதிகம் எல்லா நிலத்தையும் பங்கு போட்டாலும் எல்லோருக்கும் நிலம் கிடைப்பது கஷ்டம். ஆகவே ரூ. 15 என்று வைத்தாலும், வேறு எப்படி வைத்தாலும் எல்லோருக்கும் நிலம் கிடைப்பது துர்லபம். ஆகவே சர்க்கார் நிர்ணயித்திருக்கக்கூடிய 10 ரூபாய்க்கு அதிகமாக ஒரு ஸ்டாண்டர்ட் எக்கருக்கு நிர்ணயிப்பது சரி என்று ஏற்றுக்கொண்டால் விகிதங்கள் அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று சொல்லவேண்டியிருக்கிறது. அதுவும் முக்கியமாக ரூ. 4-ல் இருந்து 6 வரை என்று இருக்கிறது அவ்வளவு சரியா என்று கவனிக்கவேண்டும். புதிதாக அணைக்கட்டு வந்திருக்கக்கூடிய இடத்தில் ஒரு போகம் லோயர் பவானி, அமராவதி போன்ற பிரதேசங்களில் 1.75 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அந்தப் பிரதேசங்களுடைய விலை மிகவும் குறைவாக இருக்கிறது. விவசாயத்திற்கு இன்னும் முழுக்க ஏற்றதாகவில்லை. விவசாயத்திற்கு ஏற்றதாகச் செய்ய அதிகச் செலவு செய்தாகவேண்டும். அந்தப் பகுதியில் 1.75 எக்கர் என்று வைத்தால் அது நியாயமாக இருக்காது. ஆகவே அதை ஓரளவு உயர்த்தவேண்டுமென்று லோயர் பவானி பிரதேசம், அமராவதி பிரதேசம் இங்மெல்லாம் உள்ளவர்கள் எண்ணுகிறார்கள். அது சம்பந்தமாக பலர் நேரிலும், மகஜர் மூலமாகவும் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயப் பிரதிநிதிகள் சட்டசபை அங்கத்தினர்களிடமும், பொறுக்குக் கமிட்டியிலும் சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்தினால் அதைக் கவனிக்காமல் விட்டார்கள் என்று தெரியவில்லை. ஆகவே அதையும் ஓரளவு கவனித்து உயர்த்தவேண்டும் என்று சொல்லுகிறேன். பொதுவாக வயலிலே இரு போகம் பயிரிட்டால் ஒரு எக்கருக்கு சுமார் 500, 600 ரூபாய் பெறலாம். அதிலும் கரும்பு பயிரிடும் பூமியாக இருந்தால் 800-ல் இருந்து 900 ரூபாய் வரையில்கூட கரும்பு விவசாயத்தில் வருமானம் வரக்கூடிய வசதி இருக்கிறது. இந்தக் கணக்கை வைத்துக்கொண்டு பார்த்தால் நிச்சயமாக இரண்டு எக்கர் என்பது அதிகம் என்று யாரும் சொல்ல முடியாது.

இது போல மேட்டுப்பூமி சம்பந்தமாக 4 எக்கர் புஞ்சை நிலத்திற்கு ரூபாய் 1.25-க்கு கீழே நிலவரி வருகிறது. அதையெல்லாம் இன்னும் ஓரளவு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் என்று நான் கருதுகிறேன். ஒரு எக்கருக்கு 10 ரூபாய்க்கு மேல் நிலவரி விதிக்கும்பொழுது அந்தப் பூமியிலே என்ன வருமானம் வருகிறது என்பதை சரியானபடி கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். மற்ற தரங்களில் உள்ள பூமியை பார்த்து வந்து அளவு வருமானம் வரக்கூடிய விஸ்தீரணம் அமைத்தால்தான் நியாயமான பங்கீடாக இருக்குமேயல்லாமல் இப்பொழுது போட்டிருக்கிறதாலே அவ்வளவு சரியானதல்ல. இப்போது வருமானத்தின் பேரில் அமைத்திருக்கிறார்களா என்று நிச்சியமாகத் தெரியவில்லை. ஸ்டாண்டர்ட் எக்கர் நிர்ணயித்திருப்பதைக் குறித்து ஓரளவு விசாரணையும் ஆராய்ச்சியும் அவசியமென்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே கொடுத்திருக்கும் திருத்தங்கள் கட்சிக் கொள்கை சம்பந்தமாகவும் ஐடியாலஜிகல் ஆகவும் இருக்கின்றன. பூமி உழைப்பவர்களிடம் இருக்க வேண்டுமென்று சிலர் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் அது

நடை முறையில் காரிய சாத்தியமாக இருக்குமா என்பதைப் பார்க்கவேண்டும். இம்மாதிரி கொள்கை பல ஆண்டுகாலமாக சொல்லப்பட்டு வந்த தேசங்களிலேகூட இன்னும் அம்மாதிரி அமைப்பு ஏற்படவில்லை. ஐரோப்பா கண்டத்தில் பல தேசங்களில் பூமி உழைப்பவர்களுக்கு இருக்க வேண்டும் என்ற கொள்கை கொண்ட அரசாங்கங்கள் இருக்கின்றன. அந்த தேசங்களிலே நிச்சியமாக பூமியெல்லாம் உழைப்பவர்களுக்கு கொடுக்க வேண்டும். அங்கே ஏற்பட்ட விவசாய மாறுதல் காரணமாக விவசாய உற்பத்தி மிகவும் குறைந்திருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. நமக்கு மிகவும் பக்கத்திலிருக்கிற சீனா தேசத்தில்கூட விவசாயிகள் சம்பந்தமாக பிரமாதமான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு விவசாய உற்பத்தி மிகவும் அதிகமாகிவிட்டது என்று பத்திரிகைகளில் பார்த்தோம். நமது மத்திய அரசாங்க விவசாய இலாக்கா அமைச்சர் ஸ்ரீ பஞ்சாப் ராவ் தேஷ்முக் அவர்கள் இங்கு ஒரு ஏக்கரா 350 டன் விளைந்தது என்று அறிக்கை விடுத்தார். சீனா தேசத்திலே பெரிய நிலை என்னவென்றால், அங்கு பெரும் பஞ்சம், விவசாயிகள் உற்பத்தி போதவில்லை. பல வெளிநாடுகளிலிருந்து கோதுமை விலைக்கு வாங்க வேண்டிய நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய் பெருமான உணவு தானியங்கள் கனடா தேசத்திலிருந்தும் ஆஸ்டிரேலியா தேசத்திலிருந்தும் வாங்கக்கூடிய நிலைமையில் அவர்கள் இன்றையதினம் இருக்கிறார்கள். நிலசீர்திருத்தம் என்று சொல்லி ஏதோ கொள்கை அளவிலே போய்க் கொண்டிருந்தோம் என்றால் நடைமுறையிலே பல சிரமங்கள் ஏற்படுமென்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே செய்யக்கூடிய திருத்தங்கள் இப்பொழுது உள்ள உற்பத்தியைப் பாதிக்காமல் மேலும் பெருக்கும்படியாக இருக்க வேண்டும். சோதனை செய்கின்றோம் என்று சொல்லி இருக்கக்கூடிய நிலத்தைவிட மோசமாகப் போய்விட்டால் அதிலும் பிரயோசனமில்லை, சமீபத்தில் பல்வேறு தேசங்களிலே ஏற்பட்ட சீர்திருத்தங்களையும் அந்த சீர்திருத்தங்களினால் எவ்வளவு விவசாய அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் ஓரளவு பார்க்க வேண்டியது அவசியம். பக்கத்திலே இருக்கும் தேசங்கள் அதுவும் சீர்த்திருத்தங்கள் வேகமாக நடக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய தேசங்களில் என்ன நடக்கின்றது என்று பார்த்தால் நடைமுறையிலே அவர்கள் செய்த தப்பிதங்களை தவிர்த்து அவர்கள் சட்டங்களிலே இருக்கும் குறைகளை நீக்கி சரியான முறையில் நம்முடைய சீர்திருத்தங்கள் அமையவேண்டுமேயல்லாமல் நாம் செய்யும் சீர்திருத்தங்கள் ஏற்கனவே இருக்கும் உற்பத்தியை குறைக்கும்படியாக அமைந்தால் அதனால் பிரயோசனமில்லை. ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லுவது சரியான முறையில் கணக்கிட்டு அமைக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். 10 ரூபாய்க்குமேல் நிலவரி செலுத்தக்கூடிய பூமியிலே என்ன வருமானம் வருமோ அந்த அளவுக்கு மற்ற பூமிகளிலும் வரக்கூடிய வருமானத்தை சரியாக கணக்கிட்டு அதன்படி அமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri V. S. MANIKKASUNDARAM : கனம் தலைவர் அவர்களே 42-வது உப பிரிவின் கீழே சில திருத்தங்களில் முக்கியமாக ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் கொடுத்த 53-வது திருத்தத்தை நான் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். செலக்ட் கமிட்டி ரிபோர்ட்டைப் பார்க்கும்பொழுது கீழ் பவானியைபோல் பொதுவாக அபிவிருத்தி திட்டங்களில் சேர்க்கப்பட்டு பூர்த்தி அடைந்து இருக்கும் நிலங்களில் இனிமேல் உடனடியாக வரப்போகிற விவசாய நிலங்களின் ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சிபார்சு செய்யப்பட்ட முறையிலே நிர்ணயிக்கப்படுமானால் குறைந்த அளவுதான் ஏற்படும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதைவிட இன்னும் அதிகப்படுத்தவேண்டும் என்ற காரணத்தினாலே ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் கொடுத்திருக்கும் 53, 54வது திருத்தங்களை ஏற்றுக்கொண்டால் நம் மனதில்கொண்டுள்ள காரியம் ஓரளவு ஈடேறும் என்று நான் நம்புகிறேன்.

உதாரணமாக கீழ் பவானி திட்டம், மேட்டூர் கால்வாய் திட்டம், அமராவதி திட்டம் இவைகளை எடுத்துக்கொண்டு பார்க்கும்போது அங்கே தண்ணீர் பாசனத்திற்கு மிக சமீபத்தில் விடப்பட்டது என்ற காரணத்தினால் அங்கு

இருக்கும் பூமிகள் இதுவரை பூர்ணமாக அபிவிருத்தி அடையவில்லை இன்னும் பெரும்பான்மையான பூமிகள் அபிவிருத்தி அடையவேண்டிய நிலைமையில் இருக்கின்றன. ஈரோட், பவானி, கோபி தாலுக்காவில் மிக அதிகமான நிலப்பரப்பை தங்களுக்குச் சொந்தமாகக் கொண்டுள்ள பெரிய விவசாயிகள் அதிகமாக கிடையாது. கிராமத்திற்கு ஒருவரோ இரண்டு பேரோ அப்படி இருக்கக்கூடுமே தவிர மிகப் பெரும்பான்மையான அளவிலே கிடையாது. அந்த ஒரு இருவரும் தங்களுடைய நிலத்தைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது இங்கு ஏற்படுத்தியிருக்கும் ஒரு உச்ச வரம்பிற்கு மேலே, மிக அதிகமான அளவிலே அவர்களுடைய நிலத்தில் கிடையாது. அவர்கள் எல்லாம் உச்ச வரம்பிக்கு உட்பட்டு வரக்கூடியவர்களோ அல்லது கொஞ்சம் அதிகமாக வைத்திருக்ககூடியவர்களேதான். ஏதோ சில பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பூமியை நல்ல முறையில் தங்களுடைய சக்திக்கு ஏற்ற அளவு வருஷா வருஷம் அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் அவர்களுக்கு ஓரளவுக்கு ஊக்கம் அளிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இதே சமயத்தில் அபிவிருத்தி பொறுத்த வரை நாம் கவனிக்க வேண்டியது மற்றொரு விஷயம் இருக்கிறது. கீழ் பவானி திட்டத்தின் கீழே முதல் முதல் 5 வருஷங்களுக்கு முன்னதாக பாசனத்துக்குத் தண்ணீர் விடப்பட்டது. தண்ணீர் திறந்து விடப்பட்டு மூன்று வருஷ காலம் வரை என்னுடைய கடைகோடி பூமிகளுக்கு தண்ணீர் வரவில்லை. இதனால் எந்த விதமான அபிவிருத்திவேலையும் செய்ய முடியவில்லை. தண்ணீர் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் வரி போடும் அதிகாரம் சர்க்காருக்கு என்ற சட்டத்தை அந்தப் பகுதியில் அமுல் நடத்தின காரணத்தினால் அங்கே அபிவிருத்தி அடைந்துவிட்டதா இல்லையா, தண்ணீர் கிடைத்ததா இல்லையா என்று அறியாமல் அரசாங்கம் பல சமயங்களில் பூரா பூமிகளுக்கும் அபிவிருத்தி அடைந்ததாகவே பாவனை செய்துகொண்டு, அந்த அடிப்படையிலே பல கணக்குகளை தயாரித்து வந்திருக்கிறார்கள். அதே கணக்குகளை வைத்துக்கொண்டுதான் இப்போது ஸ்டான்டர்ட் ஏக்கர் ரேஷியோ தயார் செய்திருக்கிறார்கள். என்று நம்புகிறேன். இம்மாதிரி செய்வது நாட்டில் விவசாய அபிவிருத்தி செய்வதற்கு உள்ள ஊக்கத்தை குறைப்பதாக இருக்கும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களுடைய பூமியை உதாரணமாக எடுத்துக்கொண்டால் 1957, 1958-ம் வருஷம் வரை தண்ணீர் வரவில்லை. 1958-ம் வருஷத்திற்குப் பிற்பாடு அவர்கள் தண்ணீர் பாசன திட்டத்தை மாற்றி அமைத்ததின் பிற்பாடு தண்ணீர் வர ஆரம்பித்திருக்கிறது. இதைக் கொஞ்சம் கொஞ்சமாக பூமியை அபிவிருத்தி செய்துகொண்டுவரும் காரணத்தால் இன்னும் பாதிக்குமேல் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கிறது. இன்று இருக்கும் நிலைமையில் இந்த ரேஷியோ இந்த மசோதாவில் அமைவதினால் அபிவிருத்தி செய்வதற்கு எந்த அளவிலே ஊக்கம் இருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நடுத்தர விவசாயிகளுக்கு, இன்னும் சிறிது தாராளமாக இந்த ரேஷியோவை நிர்ணயம் செய்துகொடுத்தால்தான் அவர்கள் மேலும் நல்ல ஊக்கத்தோடு அபி- 10-30
விருத்தி செய்ய முடியும். அடுத்தபடியாக, கீழ்பவானி போன்று புதிதாகச் a.m.
சேர்க்கப்பட்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் 42-வது உப பிரிவின் கீழ் வரும், 4-வது எக்ஸ்பளனேஷனில் அடங்கியிருக்கக்கூடியதாகயிருக்கிறது. கீழ்பவானித் திட்டத்தை குறிப்பாக மனதில் வைத்துக்கொண்டு பார்த்தால் நஞ்சை பூமிகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதும் அவைகளுக்கு சமமாக இவைகளை வைப்பது எந்தவிதத்திலும் பொருந்தாது என்பதுதான் என் தாழ்மையான அபிப்பிராயம். கீழ்பவானித் திட்டம் புஞ்சைப் பயிருக்காக ஏற்பட்டதென்று சொல்கிறார்கள். பயிர் கட்டுப்பாடு உண்டென்றும் சொல்கிறார்கள். ஓரளவு அங்குள்ள மக்கள் கிளர்ச்சி செய்த பிற்பாடு, தண்ணீர் விநியோகத் திட்டத்தை மாற்றியமைத்த பிற்பாடு தற்காலிகமாக இந்த பயிர் கட்டுப்பாட்டை நீக்கியிருப்பதாகவும் சொல்கிறார்கள். இந்த நிலையில் அதை நஞ்சையோடு ஒப்பிட்டுப் பார்த்து அபிவிருத்தி அடையாத ஒரு நிலையில் அவைகளுக்கு ஒரு ரேஷியோ பிக்ஸ் செய்வது நியாயமாகாது.

(Sri N. S. Ramalingam in the Chair.)

அது, எக்ஸ்பளனேஷன் எ பிரிவின் கீழ் வருமா, 1-வது பிரிவு அல்லது 2-வது பிரிவின் கீழ் வருமா என்பது பற்றி சந்தேமிருக்கிறது. இரண்டு போகங்கள் சாகுபடி செய்வதற்கு யாராவது ஒருவர் எழுதிவிட்டால் அப் பொழுது ஏற்படக்கூடிய ரேஷியோ வேறுவிதமாக அமைகிறது. ஒரு போகம் சாகுபடி செய்வதாகயிருந்தால் அது வேறு விதமாக ஆகிறது. ஆக, இதைக் கொண்டு போய் நஞ்சையோடு ஒப்பிட்டு அவைகளுக்குள்ள தத்துவத்தை அனுசரித்து ரேஷியோ பிக்ஸ் செய்வது சரியாகாது. இவை களுக்கென தனி விதிகள் அமைத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பூமிகள் எல்லாம் நல்லமுறையில் அபிவிருத்தி அடைந் திருக்கிறதா இன்னும் அபிவிருத்தி அடையவேண்டிய விஸ்தீர்ணம் எவ்வளவு இருக்கிறது, பரவலாக இருக்கிறதா என்பதைக் கவனிக்க அதி காரிகளைக் கொண்ட ஒரு குழுவோ அல்லது சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு குழுவையோ அங்கு அனுப்பி அந்தப் பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்து அவைகளைப் பார்த்து வரவேண்டியது மிக அவசியம். அப்படிப் பார்த்து வரும் பட்சத்தில் அங்குள்ள புஞ்சை பூமிகளை நஞ்சை பூமிகளாகவோ அல்லது சாகுபடிக்கு லாயக்கான பூமியாக மாற்றுவதற்கு ஜனங்கள் எவ்வளவு தூரம் பிரயாசை எடுத்துக்கொள்கிறார்கள் என்று பார்த்தும், எவ்வளவு விஸ்தீர்ணம் அவர்கள் அபிவிருத்தி செய்திருக் கிறார்கள் என்பதையும் கவனித்து இந்த சபைக்கு ரிப்போர்ட் செய்வது வசதியாக இருக்கும். இவைகளை வேறு விதமாக அமைக்கவும், இவை களுக்கு ஓரளவு அதிகப்படியாக கொடுப்பதாலும் இந்தச் சட்டம் மூலம் நாம் செய்யும் அல்லது செய்ய இருக்கும் காரியங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தோல்வியடையாது என்று நான் எடுத்துச்சொல்ல விரும்பு கிறேன். மிகச் சிறிய நிலங்கள் பரவலாக இருக்கக் கூடிய பிரதேசத்தில் இந்தமாதிரியான ஒரு மாறுதல் அவைகளை பெருவாரியாக பாதிக்காது. அதேபோன்று பெரிய நிலங்களையும் இது எந்த விதத்திலும் பாதிக்கப் போவதில்லை. ஓரளவு நடுத்தர விவசாயிகளுக்கு அபிவிருத்தி வேலையில் பூர்ணமாக ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு இதை ஓரளவு அதிகப்படுத்திக் கொடுப்பதால் மற்றவர்களுக்கு கிடைக்கும் நிலம் குறைந்து போய் விடு மென்று பயப்படவேண்டியதில்லை. இதற்கு வேண்டிய புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படவில்லை. அப்படி சேகரிக்கப்படாமல் அவைகளைப் பற்றி ஒரு தீர்ப்பு காண்பது நியாயமல்ல. இன்னொரு விஷயம் ஒரேமாதிரியான நில மாகயிருந்தாலும் அந்தந்தப் பகுதிக்கு தக்கவாறு ரேஷியோ நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக எனக்குப்படுகிறது. உதாரணமாக, செங்கோட்டை தாலூகாவில் உள்ள பாசன வசதி பெற்ற பூமி இரண்டு எக்கர் ஒரு (standard acre) என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும்போது இதே விகிதாசாரத்தை வேறு பிரதேசங்களுக்கும் ஏற்படுத்துவதால் என்ன கெடுதல் ஏற்பட்டு விடுமென்று நான் கேட்கிறேன். செங்கோட்டையில் இருக்கக்கூடிய பூமிகளைவிட எந்த வகையில் கீழ்பவானி, அமராவதி, மேட்டூர் போன்ற பிரதேசங்களிலுள்ள பூமிகள் உயர்ந்தவை என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். 4 ரூபாய்க்கு கம்மி யாக தீர்வை செலுத்தக்கூடிய நஞ்சை பூமி 2 எக்கர் கொண்டது ஒரு ஸ்டான்டேர்ட் எக்கர் என்று நிர்ணயத்திருக்கும்போது அவற்றைவிட இன்னும் அபிவிருத்தி அடையாமல் இருக்கும் புஞ்சை பூமிகள் எந்த வகையில் உயர்ந்தவை. ஆகவே. அதைவிட, இவைகளுக்கு ஓரளவு அதிகப்படியாக விகிதாச்சாரத்தை நிர்ணயிக்க வேண்டுமே தவிர அவற்றை விட குறைந்ததாக இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டு கடைசி பட்சமாக ஸ்ரீனிவாஸ ஐயர் அவர்கள் கொடுத்திருக்கும் 53-வது திருத்தத்தை யாவது ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*Sri K. R. NALLASIVAM : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, ஸ்டான்டேர்ட் எக்கர் நிர்ணயிப்பதில் இந்தப் பகுதியை மட்டும் வைத்துக் கொண்டு இதிலுள்ள நியாய அநியாயங்களைப்பார்க்கும்

போது, சர்க்கார் தரப்பிலிருந்து தயங்கித் தயங்கிச் சொன்னதைவிட இன்னும் சில வகையான நிலங்களுக்கு அதிகச் சலுகை கொடுத்தாக வேண்டும். ஒட்டுமொத்தமாக மசோதாவை வைத்துக்கொண்டு அதன் மூலம் பலன் தரும் மக்களின் விகிதாசாரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பார்க்கும்போது இரண்டிலும் உள்ள நியாயத்தை தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த பிரிவிலுள்ள நியாத்தை மட்டும் வைத்துக்கொண்டு நிர்ணயிப்பது சரியல்ல. ஒரு எக்கர் தண்ணீர் வசதி பெற்று, 10 ரூபாய்க்கு மேல் தீர்வை விதிக்கப்படக் கூடிய நிலங்கள் ஒரு எக்கர் என்று சொல்லும்போது அதற்கு சமமாக கடைசியில் குறிப்பிடப் படும் "4 எக்கர்கள்" சமமாகும் என்பது ஒருக்காலமும் சமமாக ஆகவே ஆகாது. இதைத் துணித்து சொல்லலாம். ஏன் சொல்லத் துணிவு இல்லாமல் இருக்கிறார்களோ, தெரியவில்லை. காங்கேயத்திலுள்ள புஞ்சை நிலம் பத்து எக்கரும், காளிங்கராய வாய்க்கால் அல்லது கோபியில் இரண்டு போகம் பாயும் நஞ்சை ஒரு எக்கரையும் வைத்துப்பார்த்தால் அதன் பத்து எக்கர் இந்த ஒரு எக்கருக்கு சமமாகாது. அங்கு புஞ்சையின் விலை எக்கருக்கு 500 என்றால் நஞ்சையின் விலை 10,000 ரூபாயாகும். ஆகவே, இது ஒரு எக்கருக்கு அது 20 எக்கர் சமமாகும். என்று சொன்னால்தான் நியாயத்தின் சகல பகுதியையும் நாம் தொட முடியும். லோயர் பவானி நிலங்களைப் பொறுத்த வரை தயங்கித் தயங்கி சொல்லவேண்டியதில்லை. மூன்று எக்கர் என்று செய்யுங்கள் என்று துணிந்து சொல்லலாம். சர்க்கார் ஜலாதாரங்களிலிருந்து தண்ணீர் இறைத்து இருபோகம் பாய்ச்சி, தண்ணீர் தீர்வை இரண்டு ரூபாய் உள்ளதை வைத்துப்பார்த்தால் ஒரு எக்கர் 60 செண்ட் என்று உள்ளது. இதில் 3 எக்கர்தான் முதல் கூறப்படும் ஒரு எக்கருக்கு சமமாக இருக்க முடியும். ஒட்டுமொத்தமாக வைத்துக் கொண்டு நியாய அநியாயங்களை பார்த்துச் செய்யப்பட்டிருக்கிறதா ? என்றால் அப்படிச் செய்யப்பட்டிருக்கிறதென்பதை நம்ப முடியவில்லை. ஒட்டுமொத்தமாக இம்மசோதா மூலம் எதாவது பலன் கிடைக்க சந்தர்ப்பம் இருக்குமா என்ற அடிப்படையில்தான் இது கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் நிலையில் பல்வேறு பிரிவுகள் மூலம் கொடுக்கப் பட்டிருக்கும் சலுகைகளை வைத்துப் பார்க்கும்போது எதற்காக இச்சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அதற்கு பயன்படாத நிலையில்தான் இருக்கிறது. இதன் அடிப்படையில் கனம் கலியாணசுந்தரம் அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தத்தை நாம் பார்க்க வேண்டும். எந்த விதத்திலும் ஜனங்களின் சௌகரியத்திற்காக நிலங்களை எந்த அடிப்படையிலாவது எடுத்துத்தான் தீரவேண்டும். ஆகவே பூமிகள் எந்த நிலையில் இருக்கிறது என்பதை நாம் கவனமாக எடுத்துப்பார்க்க வேண்டும். காளிங்கராயன் வாய்க்கால் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அந்த நிலங்கள் எல்லாம் மூன்று போகங்கள் விளைகின்றன. ஐந்தரை நாட்களுக்கு ஒரு தடவை தண்ணீர் கிடைக்கின்றது. கீழ்பவானியில் மற்ற பிரதேசங்களை எடுத்துக்கொண்டால் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவைதான் தண்ணீர் கிடைக்கின்றது. இவைகளை அதிக நியாய அநியாயம் பார்த்துக்கொண்டிராமல் ஓரளவுக்காவது இந்த மசோதாவின் மூலமாக விவசாயிகளுக்கு நிலம் கிடைத்து நன்மை ஏற்பட வேண்டும் என்ற அளவில் கனம் கல்யாணசுந்தரம் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*SRIMATHI C. KOLANTHAI AMMAL : கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மூலம் நிலங்களுக்கு உச்ச வரம்பு கொண்டு வருகின்ற நேரத்தில் கீழ்பவானி அணைப் பகுதியில் வாழக்கூடிய பெரும்பாலான விவசாய மக்களுடைய கோரிக்கையாக ஒருசில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். முதலில் நீர்ப்பாசன வசதி பெறக் கூடிய நிலங்களை எடுத்துப்பார்க்கும்போது, கோயம்புத்தூர் ஜில்லாவில் ஈரோடு, கோபி தாலூக்காக்களில் இருக்கும் பாசனவசதி பெற்ற காளிங்கராயன் சானல் நஞ்சை நிலங்களை எடுத்துக்கொண்டால் ஒரு எக்கர் குறைந்தது 15 ஆயிரம் ரூபாய் விலையில் விற்கின்றது. அதற்கும் மேற்பட்டுதான் விற்கின்றதே தவிர அதற்கு குறையவில்லை. ஆனால்

கீழ்பவானி அணை பிரதேசத்தில் இருக்கும் நிலங்களை எடுத்துக்கொள்வோமேயானால் ஒரு எக்கர் 2,000 ரூபாய் விலைக்குப் போவதே கஷ்டமாக இருக்கிறது. இந்த நிலைமையில் அங்கே ஒரு ஸ்டான்டேர்ட் எக்கர் என்பதற்கு கீழ்பவானியில் இருக்கின்ற நிலங்களுக்கும் அமராவதி நிலங்களுக்கும் 1.75 என்றிருப்பதை 2 எக்கர் என்றாவது குறைந்த பட்சம் மாற்றவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். 10 ரூபாய்க்குமேல் நில வரி செலுத்தக் கூடிய நிலங்கள் என்று பார்த்தாலும்கூட, அந்த நிலங்கள் எல்லாம் 3 போகம் விளைகிறது. போதிய தண்ணீர் வசதி கிடைக்கின்றது. ஆனால் கீழ்பவானி பிரதேசத்திலுள்ள நிலங்களை எடுத்துக் கொண்டால் ஒரு போகம் விளைவதற்கே போதிய தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கின்றது. மேலும் அங்கே இருக்கின்ற நிலங்களில் பெரும்பாலானவை புஞ்சைக்காடுகளாகவும், தோட்டங்களாகவும் தான் இருக்கின்றன. இவைகள் எல்லாம் நல்ல முறையில் சீர்பட வேண்டும் என்றால் இன்னும் குறைந்தது பத்து பதினைந்து வருடங்களாவது ஆகும். இதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைக்கொண்டுதான் இவைகளை எல்லாம் முன்னேற்ற வேண்டும். ஆகவே அந்த வட்டாரத்தில் இருக்கக் கூடிய மக்களின் சார்பாக, அங்கேயிருக்கக் கூடிய விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக, இதில் 1.75 என்று ஸ்டான்டேர்ட் எக்கர் என்றிருப்பதை குறைந்தபட்சம் 2 எக்கர் என்றாவது மாற்ற வேண்டும், அதாவது அமராவதி, மேட்டூர், கீழ்பவானி அணை பிரதேசம் இந்த பிரதேசங்களிலுள்ள நிலங்களை இரண்டு எக்கர் என்று மாற்ற வேண்டுமென்று இந்த சபையில வற்புறுத்திக்கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இங்கு ஸ்டான்டேர்ட் எக்கர் என்று சொல்லுவது பெண்களுக்கு ஸ்ரீதனமாக கொடுக்கப்பட்ட சொத்தையும் கணவனுடைய சொத்தோடு சேர்த்து ஒருவர் 30 எக்கர் என்று வைத்துக்கொள்ளலாம் என்னும் தனியாக பெண்கள் மட்டும் சொத்துள்ளவர்களாக இருந்தால் 10 எக்கர் வைத்துக்கொள்ளலாம் என்றும், இரண்டும் சேர்த்து 35 எக்கர்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்றும் இதில் வற்புறுத்தியிருக்கிறார்கள். அதே நேரத்தில் பெண்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும், பெண்களும் ஆண்களோடு சரிநிகர் சமமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லுகின்ற நேரத்தில், பெரும்பாலான குடும்பங்களின் அதிகமாக பெண்களும் படிக்காமல் இருப்பதினால் அதிக அளவில் சொத்தைக் கொடுத்துத்தான் திருமணம் செய்து வைக்கிறார்கள். அம்மாதிரி கொடுக்கப்பட்ட ஸ்ரீதன நிலத்தில் அரசாங்கம் கைவைப்பார்களேயானால், படிப்பு வசதி பெறாத அந்த பெண்கள் எந்தவிதமான வருமானத்திற்கும் வழியில்லாது, அவர்கள் கஷ்டப்பட வேண்டிய நிலையில் ஆவார்கள். அதோடு அவர்கள் வருமானத்தையும் எடுத்துக்கொண்டவர்களாவோம். ஆகவே, இந்தச் சட்டத்தின் மூலம் பெண்களுக்கு முழு சுதந்திரத்தையும் கொடுத்திருக்கிறோமா, அல்லது பெண்களுக்கு போதிய அளவு சொத்துரிமை கொடுத்திருக்கிறோமா என்பதை எண்ணிப் பார்க்கின்றபொழுது இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆண்களுக்கு பள்ளிக்கூடத்தில் செலவழிப்பதைவிட பெண்களுக்கு அதிகப்படியாக செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த ஸ்ரீதன சொத்தை அப்படியே விட்டுவிடவேண்டும் என்று விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாகவும், பெண் சமூகத்தின் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன். இப்போதிருக்கக்கூடிய நிலையில் எல்லோரும் படிக்கவேண்டும், அதிலும் உயர்தரக் கல்வி படிக்கவேண்டும், பலன் தரக்கூடிய முறையில் கல்வி பெற வேண்டும் என்றிருக்கக்கூடிய இந்தக்காலத்தில், பணம் இல்லாத காரணத்தினால் பெண்கள் படிக்க வசதியில்லாமல் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடும். ஆகவே இந்த உச்சவரம்பு கொண்டு வருகின்ற இந்த நேரத்தில் பெண்களுக்கு அவர்களுக்கு ஸ்ரீதனமாக கொடுக்கப்பட்ட சொத்தை அப்படியே விட்டுவிட வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு, கீழ்பவானி, மேட்டூர், அமராவதி போன்ற பிரதேசங்களில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் சார்ப்பாக இதில் 1.75 எக்கர் என்றிருப்பதை மாற்றி 2 எக்கர் என்று நிர்ணயிக்க வேண்டும் என்று

வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஈரோடு, கோபி தாலூக்காக்களில் வசிக்கின்ற விவசாய மக்களின் கோரிக்கையும் இதுவேயாகும் என்பதை இந்த சபை முன்பு தாழ்மையாகத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தை களை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

Sri. K. G. PALANISWAMY GOUNDER : கனம் தலைவர் அவர்களே, இந்தப் பிரிவில், பலதரப்பட்ட நிலங்களின் விவரங்களைப்பற்றி கொடுத்திருக்கிறோம். 10 ரூபாய்க்கு மேல் இருந்தால் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் 1.2 என்றும் 1.6 என்றும் 1.75 என்றும் பலதரப்பட்ட பிரிவுகளை கூறியிருக்கிறோம். இதில் எந்த முறையில் சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை கவனித்துப் பார்ப்போமேயானால் ஒன்றேகால் ஏக்கர் என்றும் இரண்டு ஏக்கர் என்றும் நான்கு ஏக்கர் என்றும் வைத்திருப்பது சரியாக இருக்காது. ஒவ்வொரு விதமாக பாகுபாடு இருப்பதை நாம் அறிவோம். விவசாயத் துறையில், நல்ல முறையில் நீர்ப்பாசன வசதி பெறக்கூடிய நிலமாக இருந்தாலும், கிணற்றுப்பாசன வசதி பெறக் கூடிய நிலமாக இருந்தாலும், மேடுகளாக இருந்தாலும், வாய்க்கால்கள் மூலம் பாசனவசதிப் பெறக்கூடிய நிலமாக இருந்தாலும், வானம்பார்த்த பூமியாக இருந்தாலும் இவைகள் எல்லாம் ஒவ்வொரு விதமாக இருப்பதை நாம் பார்க்கின்றோம். இதைப்பற்றி கனம் நல்லசிவம் அவர்கள் வெகு அழகாகச் சொன்னார்கள். இம்மாதிரியான வித்தியாசங்களைப் பார்க்கும்போது, நிலச்சீர்த்திருத்தத்தையே கைவிடவேண்டிய நிலை தான் ஏற்படும். அந்த அளவுக்கு பூமியின் தரங்கள் இருக்கின்றன எங்களுடைய பகுதியை எடுத்துக்கொண்டால், அதாவது தாராபுரம் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக்கூடிய தாக இருக்கிறது. அதே சமயத்தில் காளிங்கராயன் வாய்க்கால் பிரதேசத்திலுள்ள ஒரு ஏக்கர் நிலத்திற்கு எங்கள் பகுதியிலுள்ள நிலம் 10 ஏக்கர் என்று வைத்துக் கொண்டாலும் சரியாகாது, திரு. நல்லசிவம் அவர்கள் 20 ஏக்கர் சமமாக வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். என்னுடைய கருத்து அந்த இடத்திலுள்ள ஒரு ஏக்கருக்கு சமமாக 100 ஏக்கர் வைத்துக்கொண்டாலும் சமமாகாது. இவைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு இதில் பல மாறுதல்கள் செய்யப்பட வேண்டும். நம் மாகாணம் முழுவதிலும் இருக்கின்ற பலதரப்பட்ட நிலங்களை எல்லாம் எடுத்துப்பார்க்கும்போது, எங்கள் தாலூகாவைப் பொறுத்த வரையில் 1.25 ரூபாய் கிஸ்தி உள்ள பூமி நாலு ஏக்கர் என்று இருப்பதை குறைந்தது 6 ஏக்கராக மாற்றியாக வேண்டுமென்று நான் கொடுத்துள்ள திருத்தத்தை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தி கேட்டுக்கொள்ளுகிறேன். 6 ஏக்கர் என்பது ஒரு ஸ்டான்டேர்ட் ஏக்கருக்கு ஈடு செய்ய முடியாது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

பரம்பிக்குளத் திட்டம் வர இருக்கிறது. அந்தத் திட்டம் வந்து, எப்போது பூமியை மராமத்து செய்து, எந்தக் காலத்திலே ஒரு ஏக்கர் பூமிக்கு 1¾ ஏக்கர் பூமியை சமமாகக் கொண்டுவர முடியும் என்று பார்க்கவேண்டும். அது போக அமராவதி நீர்ப்பாசனத் திட்டம் இருக்கிறது. அதை எடுத்துப் பார்ப்போமேயானால் இன்றைய நிலையிலே தண்ணீர் பாய்ச்சி வெள்ளாமை செய்யக்கூடிய நிலை இல்லாமல் இன்னும் 4,000 ஏக்கரில் பாசனம் ஏற்படுத்த முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதில் வரக்கூடிய வருமானம் போதவில்லை—வரக் கூடிய வருமானம் குறைவாக இருக்கிறது. அந்த பூமியை எடுத்துக்கொண்டால் 10 ஏக்கர் வைத்தாலும் ஒரு ஸ்டான்டேர்ட் ஏக்கருக்குச் சமமாக வராது. அடுத்தபடியாக லோயர் பவானி பிரதேசம் இருக்கிறது. இந்தத் திட்டம் வந்து 4—5 ஆண்டுகளும் ஆகிவிட்டது. இன்னும் மராமத்து செய்யப்படவில்லை. நல்ல முறையில் விவசாயத்தைச் செய்ய முடியாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பார்க்கவேண்டும். இந்த லோயர் பவானி ஏரியாவிலே வாழை மரம் இருந்தால் கூட பெனல்டி போட்ட காலம் இருந்தது. தென்னை மரம் இருந்தால் பெனல்டி போட்டுக்கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் உத்தேசித்து அங்கு இருக்கக் கூடிய

விவசாயிகள் தென்னை மரங்கள் வைக்க பயந்து தோப்புகள் வைக்க பயந்து வைக்காமல் விட்டுவிட்டார்கள். வாழைத் தோப்புகள் வைக்க பயந்து வைக்காமல் விட்டு விட்டார்கள். இந்த நிலையில் அவர்களெல்லாம் தோப்புகள் வைக்காத நிலையில் சட்டம் வந்து விட்டது. இப்போது சட்டத்திலே தோப்புகளுக்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தண்டத் தீர்வை போட்ட காரணத்தினால் இவர்களெல்லாம் பாதிக்கப்பட்டு விட்டார்கள். இப்போது தோப்பு வைக்காமல் போனோமே என்று வருத்தப்படுகிறார்கள். நமக்கு தென்னை மிக மிக அவசியமாக இருக்கின்றது. நாம் தென்னந்தோப்புகளையும், பழச் செடிகளையும் அவசியம் அதிகப்படுத்தியாக வேண்டும். இன்றைக்கு தென்னந்தோப்புகளுக்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற தோப்புகளுக்கும் விதி விலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. 30 ஸ்டான்டர்ட் எக்கருக்கு மேல் 100 எக்கர் வேண்டுமானாலும் தோப்புகள் வைத்துக்கொள்ள வசதி செய்து கொடுத்திருக்கிறோம். இருப்பினும் இவர்களுக்கு 30 ஸ்டான்டேர்ட் எக்கருடன் அதிகப்படி வைத்துக்கொள்ள வசதி இல்லாவிட்டாலும் 10 ஸ்டான்டார்ட் எக்கராவது வைத்துக்கொள்ள வசதி செய்து கொடுத்தால் தான் தோப்புகள் வைக்க தைரியமாக முன் வந்து பற்றாக்குறையைப் போக்கவும் அவர்கள் நல்வாழ்வு வாழவும் வசதி ஏற்படும். ஆகவே இந்த நிலையை அனுசரித்து எங்கள் பிரதேசத்தில் இருக்கக்கூடிய பூமிகள் மட்டுமல்லாமல் மற்றும் மாகாணத்தில் இருக்கக்கூடிய அத்தனை பூமிகளின் தராதரத்தை எடுத்துப் பார்த்து, (42)-வது பிரிவில் 1.75 என்று இருப்பதை 4 எக்கர் வைக்கவேண்டும் என்று சொன்னார்கள், அவ்வளவு இல்லாவிட்டாலும் $2\frac{1}{2}$ அல்லது 2 எக்கர் என்றாவது வைக்கவேண்டும். நான் 2 எக்கர் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன், அதை ஏற்றுக்கொண்டு அதை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், திருநேல்வேலி ஜில்லாவில் செங்கோட்டை தாலுகாவில் இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறோம்—சட்டத்திலேயே கொடுத்திருக்கிறோம். அவர்கள் 2 போகம் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ள வழிவகை செய்திருக்கிறோம். ஆனால் லோயர் பவானி, அமராவதி, இன்னும் வரப் போகிற பரம்பிக்குளம் இங்கெல்லாம் ஒரு போகத்திற்குத் தான் தண்ணீர் கொடுக்கிறோம். அதுவும் 4 மாதம், 3 மாதம் என்று பிரித்து தண்ணீர் கொடுக்கிறோம். ஒரு போகத்துக்குக் கூட ஈடு செய்ய முடியாதிருக்கிறது. இவைகளைப் பற்றி யோசித்தாகவேண்டும். வருவாயில் கிட்டத் தட்ட 10 மடங்கு வித்தியாசம் இருக்கும் நிலை இருந்தாலும் ஓரளவு கிட்டத்தட்ட 4-ல் ஒரு பங்காவது, அல்லது பாதியாவது வருவாய்வர சௌகரியம் செய்யக்கூடிய முறையில் இதை மாற்றி அமைக்க வேண்டும். எக்ஸ்ப்ளனேஷன் 4-ல் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டால் எங்களுடைய கோரிக்கை நிறைவேறும். எக்ஸ்ப்ளனேஷனில் இருக்க கூடிய முறையை மாற்றி 1·75 என்பது வெட் லாண்ட் பற்றி கவலை இல்லை, புஞ்சை நிலங்களுக்கு தண்ணீர் பாயக்கூடியதற்கு 1.75 என்று இருக்கக் கூடாது, எக்ஸ்ப்ளனேஷன் 4-ல் இருக்கக் கூடியதை மாற்றி அமைக்க வேண்டும் என்று ரூ. 1.25-க்குக் குறைவான புஞ்சை பூமியை 6 எக்கர் என்றும் சட்டம் திருத்தப்படவேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறிக் கொண்டு எனக்கு சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI T. T. DANIEL: Sir, so far as item 2 of sub-clause (42) is concerned, it is not comprehensive enough so as to include all categories of lands in Kanyakumari district. Item 2 deals with four categories of lands. Sub-item (*a*) speaks about wet lands irrigated by any source forming part of or benefited by any project. Sub-item (*b*) deals with registered dry land irrigated by any source mentioned in sub-item (*a*). Sub-item (*c*) speaks of dry lands irrigated by any Government source other than a project. Sub-item (*d*) speaks of unirrigated dry lands. Coming

21st September 1961] [Sri T. T. Daniel]

to sub-item (*d*) it does not make clear whether lands irrigated by well water or stream water in a private property are also included. It speaks only about unirrigated dry lands. The word "irrigated" is not defined. In the absence of a specified definition of the word 'irrigated' it creates difficulties. So I would suggest that sub-item (*d*) may be so amended as to include all dry lands cultivated by well water or streams flowing from any private property. In other words it may be amended in this way: four acres of dry land cultivated by sources other than those mentioned in sub-items (*a*), (*b*) and (*c*). I would like to bring to the notice of the Hon. Minister that besides these categories of lands, there are other uncultivable lands also. Sub-item (2) should deal with these lands provided some limit is also fixed for these uncultivable lands. One standard acre might be fixed to be equivalent to 8 or 10 acres of such land. I think the Hon. Minister will bestow his thoughts especially to sub-item (*d*) of item 2. As the clause now stands at present it appears that lands which are irrigated or cultivated by well water or rain water or by streams flowing from private property are not coming under the definition.

* SRI K. N. PALANISWAMI GOUNDER : கனம் தலைவர் அவர்களே, அன்றைய தினம் நில உச்ச வரம்பு விஷயமாகப் பேசப்படுகிறது. முக்கியமாக இந்த மசோதாவிலே உச்ச வரம்பு விஷயமாகத்தான் மெம்பர்கள் அதிகமாகப் பேச வேண்டும், சர்க்காரும் நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டும். கனம் கே. ஜி. பழனிசாமி கவுண்டர் போன்றவர்களும், கனம் ஆர். சீனிவாச அய்யர் போன்றவர்களும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அமராவதி, கீழ் பவானி பிரதேசங்களில் ஒரு போகத்திற்கு 4 மாதம் அல்லது 3 மாதம் தண்ணீர் பாயக் கூடிய நிலங்கள் விஷயத்தில் 2 ஏக்கராவது வைக்கவேண்டும். முக்கியமாக தஞ்சைபோன்ற இடங்களை எடுத்துக்கொண்டால் மூன்று போகம் விளைகிறது. ஆயிரம் ரூபாய் வரையில் வருமானம் வருகிறது. ஆகையால் கீழ்பவானி, அமராவதி பிரதேசங்களைப் பொறுத்த வரையில் $1\frac{1}{4}$, $1\frac{3}{4}$ என்றில்லாமல் குறைந்தது 2 ஏக்கர் என்றாவது வைக்கவேண்டும். இதைப் பற்றி சர்க்கார் நன்றாகப் பரிசீலனை செய்து அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைய தினம் கோயம்புத்தூரை எடுத்துக்கொண்டால், நேற்றுக்கூட பல நண்பர்கள் பேசினார்கள். 30 ஏக்கர் என்றால்கூட விவசாயம் செய்யும்போது போதுமான வசதி இல்லாமல் இருக்கிறது. சாதாரணமாக பெரும் விவசாயிகள் தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடிகின்றது. அதாவது சிறிய விவசாயிகள் என்று 11-00 a.m.
சொல்லப்படுவோர் 10 ஏக்கர் வைத்திருந்தாலும், அவர்கள் அதைப் பயிர் செய்வதிலே கஷ்டப்படுகிறார்கள். இன்றையத்தினம் 100, 200 ஏக்கராக்கள் வைத்துள்ள பெரிய மிராசுதாரர்கள்தான் பெரிய பெரிய யந்திரங்களையும், ட்ராக்டர்களையும் நல்ல உரங்களையும் போட்டு நல்ல முறையில் பயிர் செய்து கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சொன்னால் எப்படி முடியும்? கோயம்புத்தூர் ஜில்லாவிலே 1-க்கு 4 ஏக்கர் என்று சொன்னாலும் அது எப்படிப் பொருந்தும்? தஞ்சாவூரிலே ஒரு ஏக்கர் 1,000 ரூபாய் என்றால், கோயம்புத்தூர் ஜில்லாவிலே ஒரு ஏக்கர் 100 ரூபாய்க்குத் தான் போகும். ஆகவே 1-க்கு 4 என்று சொல்வதை விட 10 என்றுகூட வைக்கலாம். இதையெல்லாம் சர்க்கார் நன்கு பரிசீலனை செய்து முடிவு செய்யவேண்டும். அடுத்தபடியாக, தரத்தைப் பார்க்கும்போது, வருவாயையும் பார்க்க வேண்டும். நான் சொன்ன கருத்துக்களை அனுசரித்து, 1-க்கு 4 என்று இருப்பதைப் குறைந்தது 10 பங்கு என்று வைப்பது மிகவும் நல்லது.

அதைத் தவிர, இன்றையத் தினம் முக்கியமாக நண்பர் கே. ஜி. பழனி சாமிக் கவுண்டர் சொன்னபடி, கரும்புத் தோட்டங்கள், தென்னந்தோப்பு கள் ஆகியவற்றிற்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும். முக்கியமாக கீழ் பவானிப் போனற புதிய நீர்ப்பாசனப் பகுதிகளில் கரும்புத் தோட்டங் களுக்கும், தென்னந் தோட்டங்களுக்கும் விதிவிலக்கு அளிப்பது மிகவும் நல்லது. இதையெல்லாம் சர்க்கார் கவனித்து வேண்டியதைச் செய்ய வேண்டும். சர்க்கார் இதையெல்லாம் நன்கு பரிசீலனை செய்து, நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும்.

இன்றையத் தினம் விவசாயம் எந்த முறையில் செய்யப்படுகிறது என் பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நிலத்தின் சொந்தக் காரர் தன் நிலத்தைக் குத்தகைக்கு விடுகிறார். அந்தக் குத்தகைக்காரர் கூடதான் நகரத்தில் இருந்துகொண்டு, விவசாயக் கூலியிடம் சாகுபடி செய்யும்படி சொல்லிவிட்டு, அதிலிருந்து வரும் குத்தகையை தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயத் தொழிலாளர்கள்தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். நம்முடைய ராஜ்யத்திலே பல தொழிலாளர் களுக்கு சர்க்காரால் பாதுகாப்பளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவர்கள் மட்டும் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையிலே தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். மில் தொழிலாளர்களை எடுத்துக்கொண் டால், அவர்களுக்குப் பலவகையான சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகப்படியாக ஒரு நாளைக்கு இவ்வளவு கூலி தரப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அவர்கள் மாதம் ஒன்றுக்கு குறைந்தது 100, 150 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். தவிர, அவர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம் பிராவிடன்ட் பண்டு திட்டம் போன்ற பல திட்டங்கள் இருக்கிறது. ஆனால், அந்த வகையிலே பார்க்கப்போனால், அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்து விட்டு, நடுவிலே உள்ள குத்தகைகாரன்தான் பணம் சம்பாதிக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கும் அந்த வகையிலே ஒரு திட்டம் கொண்டு வருவது அவசியமென்று நினைக்கிறேன். ஆகவே, அடுத்து இதுபற்றி ஒரு சட்டம் கொண்டு வரும்போது, இவர்களுக்கும் உதவிபுரிகின்ற வகையிலே, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகின்ற முறையிலே, நடுவிலே உள்ள குத்தகைக்காரன் பணத்தை எடுத்துக்கொள்ளாத வகையிலே, உழைப்பவனே பலன் அடையும்படியான வகையிலே சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இப்போது முக்கியமாக இங்கே பரிசீலனை செய்ய வேண்டியது புதிய புதிய நீர்ப்பாசனப் பிரதேசங்களிலிலே குறைந்தது 2 எக்கர் என்று கொடுத்துள்ள திருத்தத்தை ஏற்றுக் கொள்வது என்பது. அதேபோல் மற்ற இடங்களிலே கொடுத்துள்ளதுபோல், கரும்புத் தோட்டங் களுக்கும், தென்னந் தோப்புகளுக்கும் இந்த ஏரியாவில் விதிவிலக்குக் கொடுப்பது என்பதாகும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, பண்டார சந்நதி நிலங்களுக்கும், கோவில் நிலங்களுக்கும் கொடுத்துள்ள விதிவிலக்கை மாற்றி ஒரு சட்டம் கொண்டு வர இருக்கிறார் கள். அந்தச் சட்டம் கொண்டுவரும்போது, அவசியம் இந்த விவசாயக் கூலிகள் விஷயத்திலும் சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டு ஒரு சட்டத்தை கொண்டுவர முயற்சிக்க வேண்டும். இன்றையதினம் பூமியைப் பெரும் பாலும், அரிஜனங்களும், மற்ற உழவர்களும் தான் நிலத்தில் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். நடுவிலே குத்தகைக்காரன் பணம் சம்பாதிக்கிறான். ஆகையினாலே, இதற்குத் தகுந்த முறையிலே சட்டம் கொண்டு வருவது அவசியம் என்று கூறிக்கொண்டு, அதோடு இந்தத் திருத்தத்தையும் ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*Sri R. SWAMINATHA MERKONDAR : கனம் தலைவர் அவர் களே, மன்றத்திலே தற்போது நடந்து வரும் விவாதத்திலே நான் கலந்துகொள்ள விரும்புகிறேன். 42-வது விதியிலே விளக்கம் கொடுத் திருப்பதை, இதுவரையிலும் விளக்கிப் பேசி வந்தார்கள். அதிலே ஸ்டாண் டர்டு எக்கர் என்பதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விளக்

21st September 1961] [Sri R. Swaminatha Merkondar]

கம் கூடுமான் வரையிலே நல்ல முறையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டு, இதை ஆதரித்து சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன்.

சில நண்பர்கள் தீர்வை தரத்தின் அடிப்படையிலே கூடாது, வருமானத்தின் அடிப்படையிலே இருக்கவேண்டுமென்று சொன்னார்கள், எனக்குத் தெரிந்தவரையிலே நான் சொல்கிறேன், ராமநாதபுரம், சேலம் போன்ற சில வறண்ட பிரதேசங்களில் வருமான அடிப்படையில் எடுத்துக்கொள்வது என்றால், எவ்வாறு எடுத்துக்கொள்ள முடியும் என்பதைப் பற்றி சற்று நன்கு உணர வேண்டும். அது மட்டுமல்ல, டெல்டா என்று சொல்லிக் கொள்ளக்கூடிய தஞ்சை ஜில்லாவில்கூட திருத்துறைப்பூண்டி, தஞ்சை, அரந்தாங்கி தாலூகா, நாகப்பட்டிணம், ஒரத்தநாடு போன்ற சில பகுதிகளிலே மானுவாரிப் பிரதேசங்கள் இருக்கின்றன. அப்பகுதிகளிலே பல ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் விவசாயத்தில் அவர்கள் வருமானத்தைக் காண முடியும். தற்போது 5 ஆண்டுக் காலமாகக்கூட அங்கு விவசாயமே கிடையாது. அதற்கு சர்க்காரிலேயும் ரெமிஷன் கூட கொடுக்கப்பட்டு வருகிறது. இம்மாதிரி இருக்கும்போது, வருமானத்தின் அடிப்படையில் எப்படி நிர்ணயிப்பது என்பதை நான் தாழ்மையுடன் தலைவர் அவர்கள் மூலமாக இந்தச் சபையிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு முன்பு பேசிய நண்பர் ஒருவர் தீர்வையுடன், செஸ்ஸையும் சேர்க்கவேண்டுமென்று சொன்னார். அதாவது தண்ணீர் தீர்வை, இதர செஸ்கள் என்று சொன்னார். இவர்கள் எதைப் புரிந்து கொண்டு இப்படிச் சொன்னார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. தீர்வை என்பது வேறு. செஸ் என்பது வேறு. தண்ணீர் தீர்வை என்பது வேறு, தண்ணீர் உபயோகித்தால் தான், அதற்குத் தீர்வை செலுத்த வேண்டும். செஸ் என்பது பல ரூபத்திலே போடும் தீர்வையாகும். படிப்புக்காக, ரோடு விஸ்தரிப்புக்காக போடுவதை செஸ் என்று சொல்வார்கள். இதைக் கொண்டு வந்து இதிலே இணைப்பது எப்படிப் பொருந்தும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தற்போது சி.எம்.பி., கட்டளை வாய்க்கால், புள்ளம்பாடி வாய்க்கால் என்று பல புது வாய்க்கால்கள் ஏற்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த வாய்க்கால் பகுதிகளில் தீர்வை சற்று அதிகமாகத்தான் இருக்கிறது. பழைய டெல்டாப் பிரதேசத்தில் 10 ரூபாய், 8 ரூபாய், 7 ரூபாய் என்றிருக்கிறது. இப்பகுதிகளிலே 15 ரூபாய், 17 ரூபாய் என்றிருக்கிறது. ஆனால் நமது உச்ச வரம்பு விதியிலே 10 ரூபாய், அதற்கு மேற்பட்டது என்று சொல்லி இருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்கது தான். ஆனால் சி.எம்.பி. பகுதியிலே கடகால் பாசன **tail end** பகுதியிலே தண்ணீர் சேருவதில்லை. இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கு வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் அப்பகுதிகளிலே இம்முறை முடியாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வரண்ட பிரதேசம் என்று சொன்னேனே, அங்கு ஒரு புஞ்சை ஏகருக்கு 10 அணா, 12 அணா, 15 அணா, 1 ரூபாய் தீர்வை இருக்கிறது. தற்பொழுது 10 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தீர்வை இருந்தால் அது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு பார்க்கப் போனால் ஏகருக்கு ஒரு ரூபாய்க்கு மேற்பட்டு புஞ்சை தீர்வை கிடையாது. ஆகவே 10 ஏகர் புஞ்சை நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏகர் என்ற முறையில் கணக்கிடலாம் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். புஞ்சைப் பகுதிகளில் பருவ மழை பெய்யும்போதுதான் விளையும். மழையை எதிர் பார்த்துத்தான் அங்கு பயிர் செய்ய முடியும். மழை இல்லாமல் பயிர்கள் பாதிக்கப்படுவதால் அடிக்கடி பல ஆண்டுகளில் அந்தப் பகுதிகளில் விதைத்த பயிர்களுக்கு நல்ல மகசூல் கிடைக்காது போய்விடும். ஆகையால் புஞ்சைப் பிரதேசங்களுக்கு ஒரு தனிப்பட்ட விலக்கு அளிக்கவேண்டும். டெல்டா பிரதேசம் என்றால் ஸ்டாண்டர்டு ஏகர் எப்படி நிர்ணயிப்பது, புஞ்சை பிரதேசம் என்றால் ஸ்டாண்டர்டு ஏகர்

எப்படி நிர்ணயிப்பது என்று பார்த்து நிர்ணயிக்கவேண்டும். ராமனுத புரம், சேலம், வட ஆற்காடு ஜில்லாக்கள் போன்ற புஞ்சை பிரதேசங்களில் ஸ்டாண்டர்டு ஏகர் எந்த முறையில் அமைக்கவேண்டும் என்பதைச் சற்று சர்க்காரே நன்கு கவனித்து அதற்கேற்றவாறு செய்தால் நல்ல பலன் அளிக்கும். அந்தப் பகுதிகளில் 400, 500 ஏகர் புஞ்சை நிலம் வைத்திருந் தால் கூட, நஞ்சைப் பகுதியில் 4 ஏகர் நிலத்திற்கு உள்ள மதிப்பு அந்தப் பகுதியில் இல்லே, அந்த வருமானமும் கிடையாது. இது என்னுடைய அனுபவத்தில் தெரிந்த விஷயம். காடாரம்பப் பிரதேசங்களுக்கும், புஞ் சைப் பிரதேசங்களுக்கும் நல்ல முறையில் அதிக சலுகை கொடுத்து, ஒரு ஸ்டாண்டர்டு ஏகர் என்பதை கூடுதலான ஏக்கரைக் கொண்டதாக ஆக்கிச் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* Sri M. P. SUBRAMANIAM : கனம் அவைத் தலைவர் அவர் களே, இந்த 42-வது உட்பிரிவின் மேல் நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த உட்பிரிவில் ஒரு ஸ்டாண்டர்டு ஏகர் என்ன என்பதைப் பற்றியும், தரம் வாரியாக எவ்வளவு நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏகராகக் கருதப்படும் என்பதைப் பற்றியும் இங்கே குறிப்பிடப்பட்டிருக் கிறது. இதிலே ரூ. 10-க்கும் அதற்கு மேலும் நிலவரி செலுத்தக்கூடிய ஒரு ஏகர் நஞ்சை நிலமானது ஒரு ஸ்டாண்டர்டு ஏகர், அதற்குப் பின் னுலே ரூ. 8-க்கு மேலே ரூ. 10-க்கு கீழே நிலவரி செலுத்தக்கூடிய 1.2 ஏகர் ஒரு ஸ்டாண்டர்டு ஏகர் என்ற முறையில் இப்படி வரிசைப்படுத் தப்பட்டிருக்கிறது. பொதுவாகப் பார்க்கப் போனுல், நஞ்சை நிலங்களை எடுத்துக்கொள்ளுவோமானுல் பெரும்பாலான இடங்களிலே ரூ. 10-க்கு மேலே நிலவரி செலுத்தக்கூடிய நஞ்சை நிலங்கள் இல்லை என்று நான் கருதுகிறேன். ஒரு சில பகுதிகளைத் தவிர, மற்ற பெரும்பாலான இடங் களிலே ரூ. 10-க்குக் கீழே நிலவரி செலுத்தக்கூடிய நஞ்சை நிலங்கள் தான் மிகுதியாக இருக்கின்றன. 1 (பி)-ல் 1.2 ஏகர் என்று சொல்லப் பட்டிருக்கிறது ஒரு ஸ்டாண்டர்டு எக்கர். அதற்குப் பின்னுல் புஞ்சை நிலங்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் நிலைமை என்ன ஏற்படுகிறது என்றுல், பொதுவாக உச்ச வரம்பு 30 ஏகரா என்பதற்குப் பதிலாக, நஞ்சை நிலங்களாக இருந்தால் 36 ஏகராவிலிருந்து ஏறக் குறைய 60 ஏகரா வரையிலே வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமை ஏற்படுகிறது. காரணம் ரூபாய் 4-க்கு கீழே நிலவரி செலுத்தக்கூடிய நஞ்சை நிலங்கள் 2 ஏகரா கொண்டது ஒரு ஸ்டாண்டர்டு ஏகர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. புஞ்சை நிலம் 60 எக்கர் முதல் 120 எக்கா வரை ஒருவர் வைத்துக்கொள்ளவும் இந்த பிரிவு இடமளிக்கிறது.

மற்றொன்று நான் குறிப்பிடவிரும்புவது என்னவென்றுல், இதிலே இரண்டு விதமான வாதங்கள் சொல்லப்படுகின்றன. தஞ்சாவூர் போன்ற பகுதிகளிலே இருப்பவர்கள் என்ன சொல்லுகிறுர்கள் என்றுல், புஞ்சையில வரக்கூடிய வருமான அளவுக்கு நஞ்சையில் வருவதில்லை, அது என்னுடைய சொந்த அனுபவம், என்று ஒரு பக்கம் சொல்லுகிறுர்கள். மற்றொரு பக்கத்தில் புஞ்சைப் பகுதியிலுள்ளவர்கள் என்ன சொல்லுகிறுர்கள், என்றுல், சேலம், வட ஆற்காடு முதலிய மாவட்டங்களில் ரூபாய் 1, ரூபாய் 2 நிலவரி செலுத்தக்கூடிய புஞ்சை நிலங்கள் 10 ஏகரா வைத்தி ருந்தால் கூட ஒரு ஏகரா நஞ்சை வைத்திருப்பதற்கு ஈடு ஆகாது. மானம் பொய்த்துவிட்டால் சில வருஷங்களில் விளைச்சல் வெகுவாக பாதிக்கப் படும், வருமானம் வராது என்ற வாதத்தைச் சொல்லுகிறுர்கள், இரண்டு வாதங்களும் சரி என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஏனென் றுல், பல இடங்களில் புஞ்சையைவிட நஞ்சையில் வருமானம் வரக் கூடிய பகுதிகள் இருக்கின்றன. ரூபாய் 1-25 க்கு கீழே நிலவரி செலுத் தக்கூடிய புஞ்சை நிலங்கள் 4 ஏகர் கொண்டது ஒரு ஸ்டாண்டர்டு ஏகர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நிலவரி எவ்வளவோ நாட்களுக்கு முன்பு ஏற்பட்டது. ஒரு கிராமத்தில் ஒரு பக்கத்தில் கிணறு வெட்டி என்ஜின் வைத்து, மோட்டார் வைத்து பாசன வசதி செய்யக்கூடிய இடங் களில் ஒரு ஏகர் நிலத்தில் ரூபாய் 1,000 வருமானம் வரக்கூடிய நிலை

21st September 1961] [Srī M. P. Subramaniam]

யும் இருக்கிறது. சில இடங்களில் புகையிலை போன்ற பணம் தரக்கூடிய, வருவாய் தரக்கூடிய பயிர்களின் மூலம் இம்மாதிரி அதிக வருமானம் வரலாம். ஜாஸ்தியாக ரூபாய் 1,000 வருமானம் வராவிட்டாலும், குறைந்தது ரூபாய் 500 வரலாம். அதேபோன்று, சில இடங்களில் கிணறு வெட்ட முடியாதுபோனால், கிணறு வெட்ட சக்தியில்லை என்றால், ஏகருக்கு ரூபாய் 50 கூட வருமானம் வராத நிலைமை இருக்கிறது. இரண்டும் புஞ்சை தான் ஆனால் எப்படி ஒன்றாகும் என்று எனக்குத் தெரியவில்லை. அதிலே வேறுபாடுகள், முரண்பாடுகள் நிச்சயமாக ஏற்படப்போகின்றன. இதுபற்றி எந்தவிதமான ஆலோசனையும் கூறப்படவில்லை. நிச்சயமாக பல பகுதிகளுக்கு இந்த பிரிவின் மூலம் நியாயம் வழங்கியதாக இருக்காது. ஆங்காங்குள்ள நிலங்களை, தரம் பிரித்து ஸ்டாண்டர்டு ஏகர் நிர்ணயிப்பதற்காக, அந்தந்தப் பகுதியிலே ஒரு சிறு குழுவை ஏற்படுத்தி, தராதரத்தைப்பொறுத்து ஸ்டாண்டர்டு ஏகர் நிர்ணயித்தால் தான் ஓரளவுக்கு நியாயம் வழங்கியதாகும் என்று நினைக்கிறேன். இப்பொழுதுள்ள அடிப்படையில் ஸ்டாண்டர்டு ஏகர் கணக்கிடப்பட்டால் பல பகுதிகளுக்கு அநியாயம் வழங்கப்படும், சில பகுதிகளுக்கு சலுகைகள் அதிகமாக கிடைக்கும் என்பதை நான் குறிப்பிட்டுவிட்டு, ஆகவே இந்த அடிப்படையையே மாற்றவேண்டுமென்று நான் கருதுகிறேன் என்று கூறிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

SRI. P. G. KARUTHIRUMAN : கனம் அவைத் தலைவர் அவர்களே, பூமியினுடைய தராதரத்தைப் பொறுத்து எப்படி ஸ்டாண்டர்டு ஏகர் நிர்ணயம் செய்யப்படும் என்பதுபற்றி இந்தப் பிரிவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சுமார் கால் நூற்றாண்டு, அரை நூற்றாண்டுக்கு முன்னால் ஏற்பட்ட செடில்மெண்டுப் பிரகாரம் நிலத் தீர்வை அமைந்திருக்கிறதே தவிர, 1940-ம் ஆண்டுக்குப் பின்னால் ஏற்பட்ட விலைவாசியை அனுசரித்தோ அல்லது பூமியினுடைய தராதரத்தைப் பொறுத்தோ வரி விகிதம் அமையவில்லை என்பதை நாம் அறிந்து காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதிலே ஏகருக்கு ரூபாய் 10-க்கு மேலே நிலவரி இருக்கக்கூடியது ஒரு ஸ்டாண்டர்டு ஏகர் என்று வைக்கப்பட்டிருக்கிறது. வருமான அடிப்படையில் வைத்தால் கஷ்டமாக இருக்கும் என்று கருதி, பூமியினுடைய தாரதம்யத்தைப்பொறுத்து ஸ்டாண்டர்டு ஏகர் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அயன் நஞ்சை பூமி அதாவது நீர்ப்பாசன வசதி பெற்ற பூமி, கிணற்றுப் பாசன வசதி பெற்ற பூமி, மானவாரி, அதாவது மழையை நம்பியிருக்கும்படியான பூமி இப்படி தாரதம்யம் இருப்பதை ஓரளவுக்கு இங்கே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இது மிகவும் சிக்கலான பிரச்னை. பாசனவசதி பெற்ற பூமியை வைத்துக்கொண்டிருப்பவர்கள் வருமானமும், மானவாரி பூமியை வைத்துக்கொண்டிருப்பவர்கள் வருமானமும் ஓரளவுக்கு பக்கத்தில் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் உத்தேசமாக இந்த ஸ்டாண்டர்டு ஏகர் அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இது எவ்வளவு தூரம் காரியத்திலே நிறைவேறும் என்று பார்க்கவேண்டும். இது மிகவும் கஷ்டமான சிக்கலான பிரச்னை. இப்பொழுது இருக்கும்படியான நிலங்களை 3 பகுதிகளாகப் பிரிக்கலாம் அதாவது தோட்டக்கால் பூமி, மானவாரி பூமி, பாசனவசதி பெறக்கூடிய பூமி என்று பிரிக்கலாம். பாசன வசதி பெறுகிற பூமியிலே கூட, முன் காலத்திலே பாசன வசதி பெற்ற பூமி, 50, 100 வருஷங்களுக்கு முன்பு பாசன வசதி பெற்று பூமிக்கு பூரணமான பலன் கிடைக்கும். ஆனால், புதியதாக பாசன வசதி பெற்ற பூமி சம்பந்தப்பட்டமட்டில், அதாவது புதிய ப்ராஜெக்ட் ஏரியாக்களில், சீர்திருத்தம் செய்து அங்கே தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது அந்த பூமியிலிருந்து வருகிற வரும்படியைவிட மானவாரி பூமியிலிருந்து அதிகமாக வரும்படி வரலாம். அந்த மாதிரி நிலைமை கீழ்பவானி பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி பேசும்பொழுது கீழ்பவானி பிரதேசத்தில் எனக்கு ஒரு செண்டு நிலம் கூட இல்லை என்பதை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கீழ்பவானி பிரதேசத்தில் நிலம் இருக்கிறது, அதனால்

இம்மாதிரி பேசுகிறேன் என்று நினைக்க வேண்டிய அவசியமில்லை. விவசாயி என்ற முறையில் சொல்லுகிறேன். மானுவாரி பூமியில் நிலக்கடலை (வேர்க்கடலை) பயிரிலிருந்து எவ்வளவு வருமானம் வருமோ, அவ்வளவு கூட இம்மாதிரி புதியதாக பாசன வசதி பெற்ற சில இடங்களில் வருவதில்லை. இதை எண்ணிப்பார்க்கவேண்டுவது அவசியம் என்று நான் கருதுகிறேன். ஏதோ அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு சலுகை கொடுக்கவேண்டு மென்பதற்காக நான் சொல்லவில்லை.

(Deputy Speaker in the Chair).

உண்மை நிலை என்னவென்றால், பாசன வசதி பெறுவதற்காக, அந்தத் தண்ணீரை பூமிக்கு சரியானபடி பாய்ச்சுவதற்கு பூமியை சமதளப்படுத்த வேண்டியிருக்கிறது. இம்மாதிரி சீர்திருத்துவதற்கு ஒரு ஏகருக்கு ரூபாய் 1,000 வரை செலவாகிறது. சமதளப்படுத்தும் பொழுது மேலேயுள்ள பூசார சத்துள்ள மணல் அகற்றப் பட வேண்டியிருக்கிறது. அடியில் இருக்கும் மணலில் பூசாரம் குறைவாக இருக்கிறது. அதனால் எதிர்பார்த்த அளவுக்கு வருமானம் வருவதில்லை. மேலே இருக்கும் பூசார சத்துள்ள மணல் அகற்றப்படுவதன் காரணமாகவும், பூமிக்கு அடியிலே இருக்கும்படியான மணலில் பூசாரம் குறைவாக இருப்பதன் காரணமாவும், சமதளப்படுத்தவேண்டியதன் காரணமாகவும், இரண்டு வகையிலும் அங்கிருக்கும்படியான பல விவசாயிகள் அல்லலுறுகிறார்கள். சீர் திருத்தம் செய்ய என்று செலவு செய்ய வேண்டும், பிறகு வரும்படி வருவதோ மிக்கக் குறைவு. ஆகவே, மேல் மண்ணை எடுத்த பிறகு, மீண்டும் புது மண்ணைப் போட்டு பூசாரத்தை உரம் போட்டும் அதிகப்படுத்த வேண்டும். அதன் பிறகு 10 வருஷங்கள் கழித்துத்தான் நல்ல வரும்படி வரும். அது 10, 20, வருஷங்கள் கூட ஆகலாம். ஆகவே, அந்தக்காலம் வரையில் வரும்படியைக் கூடக் கவனிக்காமல், செலவு செய்தால்தான் ஓரளவுக்கு பின்னால் வரும்படி வரும். ஆகவே, பழைய பாசன வசதி பெற்ற நிலங்களுக்கும், புதிய பாசன வசதி பெற்ற நிலங்களுக்கும் உள்ள தாரதம்மியத்தை ஒன்றுக்கொன்று இரண்டுபங்கு, மூன்று பங்கு என்று வைத்தால் தான் விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்தவர்களாவோம். ஆகவேதான் சலெக்ட் கமிட்டியிலும், இங்கேயும், கனம் அங்கத்தினர்கள் சொல்லும் அபிப்பிராயங்களையும் சிந்தித்துப் பார்த்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிணற்றுப் பாசனம் உள்ள நிலத்தில் பருத்தி போட்டால், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்தான் தீர்வை. அதே பவானிப் பிரதேசத்தில் பருத்தி போட்டால், ரூபாய் 15, 20 என்று வரி. புதுப்பாசன வசதி பெற்ற நிலங்களுக்கு இன்றைக்கு திட்டங்களுக்கு அதிகச் செலவாகிறது என்ற அடிப்படையில் அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களுக்கு பூசாரத்தைப் பார்த்தோ அல்லது வளத்தைப் பார்த்தோ தீர்வை விதிக்கப்படவில்லை. புதுப் ப்ராஜெக்ட்டுகளுக்கு, 46-ம் வருஷம் பாசனவசதி பெற்ற பிராஜெக்ட்டுகளில் உள்ள ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு சரியாக வைக்கவில்லை. அதைப் பற்றி யோசனை செய்ய வேண்டும். புதுப் ப்ராஜெக்ட்டுகளால் பாசனவசதி பெற்றவர்களுக்கு, சர்க்கார் ரூல் போடுவதால் இவ்வளவு என்று வைக்கப்படும் என்று இருந்தாலும், இப்பொழுதே திட்ட வட்டமாகச் செய்து விடவேண்டும். ரூலில் போடலாம் என்றால், கூட, சொல்லுவார்கள், வேண்டியவர்களுக்கு செய்வார்கள், வேண்டாதவர்களுக்குச் செய்ய மாட்டார்கள் என்று. ஆகவே, இப்பொழுதே, அமைச்சரவர்கள் அங்கத்தினர்கள் ஆலோசனையை கவனித்து, புதுப்பிராஜெக்ட்டுகளில் குறைந்தது ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு 2 ஏக்கருக்கு மேல் இவ்வளவு இருக்க முடியும் என்று தீர்மானித்து விடவேண்டும். அப்படிச் செய்தால் தான் ஏழை எளிய விவசாயிகளைக் காப்பாற்ற முடியும். இந்தச் சலுகையையும் விவசாயிகளுக்குச் கொடுக்க வேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவிலேயே ஸ்டாண்டர்ட் ஏக்கராதான் மிக முக்கியமான பிரச்னை என்றால் யாரும் மறுக்க முடியாது. எப்படி

21st September 1961] [Srimathi T. N. **Anandanayaki**]

ஸ்டாண்டர்ட் ஏக்கரை நிர்ணயிக்கிறோமோ அதைப் பொருத்துத்தான் யாருக்கு எவ்வளவு இருக்கலாம், உச்ச வரம்பு எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயிக்க முடியும்; சொந்த சாகுபடிக்கு எவ்வளவு என்பவை போன்றதெல்லாம் ஸ்டாண்டர்ட் ஏக்கரைப் பொருத்துத்தான். பல அங்கத்தினர்கள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். இருப்பதைக் குறைக்க வேண்டும், இருப்பதை அதிகப்படுத்த வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். குறைக்க வேண்டும் என்ற கட்சியைச் சேர்ந்தவரே அதிகப்படுத்த வேண்டும் என்றும் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் திருத்தம் பிரேரேபிக்கப்படவில்லை. அச்சில் வந்தது. உச்ச வரம்பு என்பதை ஒரு பெரிய சீர்திருத்தக் கருத்தோடு அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது; விவசாயிகளுக்கு எல்லாவிதமான சலுகைகளும் கொடுக்க வேண்டும், தனியொரு மனிதன் கையில் அதிகமான சொத்து குவிந்து, உற்பத்திக் குறைபாடே ஏற்படக்கூடாது என்ற காரணத்தினால், அந்த விதமாக திட்டக் கமிஷனும் முடிவு கட்டி, பல அரசாங்கங்களும் அம்மாதிரிச் சட்டங்களை அமுல் நடத்துகிறார்கள். நம் அரசாங்கமும் இந்த சபையிலே அம்மாதிரியான சட்டத்தை நம் ஆலோசனைக்கு வைத்திருக்கிறது. இன்றைக்கு 30 ஏக்கர் போதாது என்று சொல்லக் கூடியவர்களும் இருக்கிறார்கள். அப்படிப் போதாது என்று சொல்லுவதிலும் நியாயம் இருக்கிறது. இவ்வளவு தூரம் நிலச் சீர்திருத்தம் கொண்டுவரும் போதே கூடவே க்ராப் இன்ஷூரன்ஸும் கொண்டு வந்தால், அதில் பொருள் உண்டு. இன்றைக்கு நாம் செய்ய இருப்பது 30 ஏக்கருக்கு மேலே எந்த தனி மனிதனும் சொத்தை அனுபவிக்கக் கூடாது, ஆயிரக் கணக்கான, பத்தாயிரக்கணக்கான ஏக்கரா நிலங்களை ஒரு தனி மனிதன் கையில் வைத்திருக்கக் கூடாது என்ற பெரிய சீர்திருத்தக் கொள்கையை செயல்படுத்தும் பெருமை காங்கிரஸ் அரசாங்கத்தையே, காங்கிரஸ் கட்சியையே சாரும் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது. எதிர்க் கட்சியினர் உழவனுக்கு நிலம், விவசாயிகளுக்குச் சலுகைகள் என்று போடும் கோஷங்களுக்கு உயிர் கொடுத்தது காங்கிரஸ் கட்சிதான் என்பதை எதிர்க்கட்சிகள் கூட மறுக்க முடியாது. இப்படி நாங்கள் சட்டம் கொண்டு வந்த பிறகு, அது ஐந்து ஏக்கராக இருக்க வேண்டும், மூன்று ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கராக இருக்க வேண்டும் என்று தீவிரமாகப் பேசலாம், திருத்தங்கள் கொடுக்கலாம் . . .

DEPUTY SPEAKER: This is not a general discussion. The hon. Member should restrict her speech only to the relevant sub-clause. She can speak about the ceiling area when clause 5 is taken up.

SRIMATHI T. N. ANANDANAYAKI: This is the most important sub-clause in the entire Bill and on it depends the entire Bill.

DEPUTY SPEAKER: But the hon. Member's speech is not relevant to the sub-clause under discussion.

SRIMATHI T. N. ANANDANAYAKI: I am restricting my speech only to agriculture and I am not speaking about industry. We are concerned with what is a standard acre . . .

SRI M. KALYANASUNDARAM: Sir, does this not amount to disregarding the ruling of the Chair?

SRIMATHI T. N. ANANDANAYAKI: The Chair has not given any ruling. I will be the last person to disobey any ruling. I need not learn from the Opposition member. I am not crossing my boundary. I am speaking only within the limit. Because 30 standard acres have been fixed as the ceiling limit, we have to

speak on the ceiling policy also. முப்பது ஏக்கர் நஞ்சை என்ருல், அவற்றில் சில விளையலாம், சில விளையாமல் இருக்கலாம்; சில இந்த வருஷம் விளையலாம், அடுத்த வருஷம் விளையாமல் போகலாம். ஆகவே, ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைக்கும் போது, கூடவே க்ராப் இன்ஷூரன்ஸையும் கொண்டு வந்தால் அது சரியாக இருக்கும். இதெல்லாம் ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிர்ணயிப்பதில் சம்மந்தப் பட்டது என்பதால் சொல்கிறேன். ஏதோ இந்த மசோதாவின் மற்ற அங்கங்களைப்பற்றிச் சொல்ல வில்லை. இப்பொழுது இருக்கும் ஸ்டாண்டர்ட் ஏக்கர் ரூ. 10-க்குமேல் கிஸ்தி செலுத்திஞல், ஒரு ஏக்கர் நஞ்சைக்கு சரியாகும் என்பது. சிலபேர் 30 ஏக்கர் என்ருலே வரும்படி போதாது என்று சொல்லுகிருர்கள். நகரத்தில் இருக்கும் வியாபாரிகள் போன்ற மக்களுக்கு அவர்கள் வருமானத்திற்கு உச்ச வரம்பு கட்டியிருக்கிருர்களா என்று கேட்கிருர்கள். அதைப் பார்க்கும்போது, ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ன என்று முடிவு கட்டும்போது, தீர ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். ரூ. 10-க்கு மேல் இருந்தால் ஒரு ஏக்கர் என்றும், ரூ. 8-க்கும் 10-க்கும் நடுவில் இருந்தால், 1·2, ஏக்கர். அதற்கும் கீழே வந்தால், 1·0, 1·75 என்றெல்லாம் இருக்கிறது. இப்படியெல்லாம் விவசாயிகள் கணக்கு வைத்துப் போடுவது மிக்க கஷ்டம். அதன்படி யெல்லாம் கணக்குப் போட்டு தன்னிடம் எவ்வளவு ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் இருக்கின்றன என்றெல்லாம் ஆபீசருக்குக் கணக்கு, லிஸ்டு கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால் பெனல்டி, பைன் என்றெல்லாம் இருக்கிறது. விவசாயி கள் என்ன கணக்கில் நிபுணர்களா? ப்ராக்ஷன் போட்டுக் கணக்கு வைத்துக் கொள்ள முடியுமா? அதுவும் டெஸிமலில் இருப்பதையெல் லாம் கணக்குப் போட்டுச் செய்வது என்பது அவர்களுக்கு முடியாத காரியம். அப்படிச் செய்தாலும் ஆபீசர்கள் அது சரியில்லை யென்ருல், வக்கீலிடம் போய் வாதாட வேண்டி வரும்; எது சரி, எது தப்பு என்றெல்லாம் தீர்மானிக்க வேண்டி வரும். ஆகவே, ஒரு ஏக்கரை டிவைட் பண்ணிஞல் ரொம்பக் கஷ்டமாக இருக்கும். என் திருத்தப்படி ரூ. 10-க்கு மேல் கிஸ்தி என்ருல், ஒரு ஏக்கர் கீழே ரூ. 4 வரை எல்லா அளவிலும் மொத்தமாக இரண்டு ஏக்கர். அப்படிச் செய்துவிட்டால் கணக்கு வைத்துக்கொள்வது சுலபமாக இருக்கும். ப்ராக்ஷனிலே போட் டால், விவசாயிகளுக்கு தொந்தரவாகப் போய்விடும். ஆகவேதான் நான் என் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இன்னும் சில திருத்தங் களைப் பார்த்தால் 1·75, 1·15, 1·25, 1·50, 1·6 என்றெல்லாம் இருக்கிறது.
11-30 a.m. அதிலும் கனம் கலியாணசுந்தரம் அவர்களுடைய கணக்கைப்பார்த்தால் இது நன்ருகத் தெரியும். அவர் கொடுத்திருக்கக்கூடிய கணக்கை வைத்துக் கொண்டு எப்படிக்கணக்குப் பார்ப்பது என்றுதான் தெரியவில்லை. சாதா ரணமானவர்களுக்கு கணக்குப் போடுவது என்பது முடியாத காரியம். நம்மாலேயே கணக்குப் போட முடியவில்லையே மற்றவர்களுக்கு எப்படி போட முடியும். நமக்குத்தான் நன்ருகத் தெரியவில்லை. ஆப்ஷனல் மாத மாடிக்ஸ் எடுத்துக்கொண்டிருக்கிறவர்கள் எப்படிக் கணக்குப் போடுகிருர்கள் என்று. ஆகவே இப்படி ப்ராக்ஷனை வைத்தால் எப்படி விவசாயிகள் அதிலும் ஏழை விவசாயிகள் எப்படி கணக்குப் போடுவார்கள்? இது அவர்களுக்கு தொல்லையைத்தான் விளைவிக்கும். அவர்களை இப்படிப்பட்ட தொல்லைக்கு ஆளாக்குவதில் பிரயோசனம் இல்லை.

இன்னும் சில திருத்தங்கள் எல்லாம் இருக்கின்றன. அதாவது "இன்க்ளுடிங் வாட்டர் செஸ்" அதாவது தண்ணீர் தீர்வையைப்பற்றி யெல்லாம் திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ப்ராஜெக்ட் ஏரியாவில் இருக்கிறவர்களுக்கு எப்படி கணக்கிடுவது என்பதைப்பற்றி யெல்லாம் திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ப்ராஜெக்ட் ஏரியாவில் புஞ்சை யாக இருந்த நிலங்கள் எல்லாம் நஞ்சையாக மாறுகிறது. அப்படி மாறுதல் ஏற்பட்டு விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்குக் கொஞ்ச நாளாகலாம். அதற்குள் தண்ணீர் தீர்வை போட்டு அதன்படி கணக் கிடுவது சரியல்ல. அங்கே யெல்லாம் 1·75 என்றெல்லாம் போடாமல் இரண்டு ஏக்கர் என்று ஒரு கணக்காகப் போடலாம். ஆகவே என்

னுடைய திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னுடைய திருத்தங்களை ஏற்றுக்கொள்ளாமல் அதைப்போலவே சர்க்காரே அவைகளை தங்களுடைய திருத்தங்களாகக் கொண்டு வந்தாவது அந்த திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதை அரசாங்கத் திருத்தமாகக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI R. SRINIVASA IYER : ஸார், இந்த மசோதாவிலேயே ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதைப்பற்றிய இந்த டெபனிஷனுனது ரொம்பவும் முக்கியமானது. இதற்குப் பின்னுல் ஐந்தாவது க்ளாஸ், அதற்குப் பின்னுல் ஏழாவது க்ளாஸ் இவைகளை பாதிக்கக்கூடிய டெபனிஷனுக இருப்பதால் இந்தக் க்ளாசைப்பற்றியும் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அநேக திருத்தங்களைப்பற்றியும் விவரமாக சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது. மற்றவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களைப்பற்றி முதலில் சொல்லிவிட்டு அதன் பிறகு என்னுடைய திருத்தங்களைப்பற்றி சொல்லுகிறேன்.

கனம் பழநிசாமி அவர்கள் தன்னுடைய நாற்பதாவது திருத்தத்தில் 'ஏ' யை மட்டும் பிரேரேபித்து விட்டு 'பி' யை விட்டு விட்டார். (ஸ்ரீ என். கே. பழநிசாமி: அது க்ளரிகல் மிஸ்டேக்.) அது க்ளரிகல் மிஸ்டேக்காக இருந்தாலும் அது க்ளரிகல் மிஸ்டேக் என்று சொல்லிவிட்டு பிரேரேபித்திருக்கலாம். ஆனுல் அதையே அவர் விட்டு விட்டார். ஒருக்கால் நேற்று அதைப்பற்றி ஸ்ரீமதி அனந்தநாயகி சொன்னதால் விட்டு விட்டாரோ என்று தெரியவில்லை. ஆகவே பத்து முதல் பதினைந்து ரூபாய் வரையில் ஒரு ஏக்கர் என்று சொல்லிவிட்டு பதினைந்து ரூபாய்க்கு மேல் இருப்பதை விட்டு விட்டதற்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. பதினைந்து ரூபாய்க்கு மேற்பட்டு இருக்கக்கூடிய நிலம் என்னவாகிறது. எந்த நோக்கத்துடன் அதை விட்டுவிட்டார் என்பது தெரியவில்லை. ஆனுல் அதைப்பற்றி மற்றவர்கள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறுர்கள். இவர் கொடுக்கவில்லை. அதனுல்தான் அதைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. 'ஏ' யை மூவ் பண்ணிவிட்டு 'பி' யை மூவ் பண்ணுமல் இருப்பது சரியல்ல, அர்த்தமில்லை.

அடுத்தபடியாக 41, 42, 43-ஆவது திருத்தங்களைப்பற்றி பேசும்போது நோக்கம் என்ன என்பது தெரியவில்லை. நம்முடைய நோக்கம் என்ன ? உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்பது. அதிக ஏரியா நிலம் ஒரு சிலரிடம் குவிந்திருப்பதைக் குறைக்க வேண்டும் என்றுதான் நோக்கம். முப்பது என்பதை பதினைந்தாக ஆக்க வேண்டும் என்பதுதான் திருத்தம். அதற்குத்தான் ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைக்கிறோம். ஒரு குடும்பத்தின் அவசிய வரும்படியை நிர்ணயம் செய்து அதன்படி குறைக்க வேண்டும் என்பதுதான். ஒரு குடும்பத்திற்கு ஐந்தாயிரம் ரூபாயாவது வரும்படி இருக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் அங்கத்தினர் செலக்ட் கமிட்டியில் சாட்சி கொடுத்ததைக்கூட ஏற்றுக்கொள்ளாமல் ஆயிரம் ரூபாய் வரும்படி வரும் அளவில் திருத்தம் கொடுத்திருக்கிறுர்கள். அப்படி ஆயிரம் ரூபாய்க்கு வரும்படி குறையும் அளவில் 41, 42, 43-ஆவது திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் ஆட்சேபிக்கிறேன். நிலவரி ஏக்கர் 1-க்கு பதினைந்து ரூபாய்க்கு மேற்பட்டு நிலம் இருந்தால் அதற்கு ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிர்ணயிக்கும்போது, நாம் முப்பது என்று வைத்திருப்பதில், திருத்தல்படி முப்பதுக்கும் முக்கால் 22½ ஏக்கர்தான் சீலிங் வருகிறது. உச்ச வரம்பு பதினைந்து ஏக்கர் வைத்தால் 15-க்கு முக்கால் 11¼ ஏக்கர்தான் வரும். அதனுல் இப்படி திருத்துவது சரியல்ல. இந்தச் சட்டத்தை 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதியிலிருந்து அமுலுக்கு கொண்டு வரலாம், 1955-லிருந்து கொண்டு வரலாம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஸ்டாண்டர்ட் ஏக்கர் பதினைந்து என்று வைத்தால் 11¼ ஏக்கர்தான் வரும். எந்த விதத்திலும் அது சரியல்ல. அவைகளை ஏற்றுக்கொண்டால் சட்டத்தினுடைய நோக்கமே போய்விடும். இந்தத் திருத்தங்கள் எல்லாம் சட்டத்திற்கு மாறுபட்ட அபிப்பிராயமாகத்தான் இருக்கிறது.

[Sri R. Srinivasa Iyer] [21st September 1961

பின்னால் இருக்கிற திருத்தங்களைப் பார்த்தால் நிலத் தீர்வை பத்துக்கும் பதினைந்தும் உட்படி ஒரு ஏக்கர் என்றும், அதன் பிறகு எட்டுக்கும் பத்துக்கும் ஒரு ஏக்கர், ஆறுக்கும் எட்டுக்கும் 1·25 ஏக்கர், நாலுக்கும் ஆறுக்கும் 1·50 ஏக்கர், இந்த மாதிரி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி அதற்குப் பின்னால் 'எப்', 'ஜி', 'எச்' என்றெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் பெரிய திருத்தங்கள் 'எச்', 'ஐ' இவைகள்தான் ரொம்பவும் பாதகமானவை. அவைகளுக்கு 1·75 என்றும் 2 ஏக்கர் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, செலெக்ட் கமிட்டியில்கூட இதைப்பற்றி சொன்னார்கள். அதாவது உடன்காடு நிலங்கள் என்று. அங்கே பயிரே கிடையாது. அவற்றில் ஏக்கர் 1-க்கு தீர்வை 1·25 ரூபாய்க்கு கீழ் புஞ்சை நிலம் இருந்தால் அதை என்ன செய்வது. அதில் பனை மரம் இருக்கும், உடன்காடு நிலத்தில் மேய்ச்சல் நிலம்கூட கிடையாது. புல்கூட அங்கே முளைக்காது. அவற்றில் இரண்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வதா ? இப்படி யெல்லாம் திருத்தங்களை ஒப்புக்கொண்டால் சீலிங் நோக்கமே போய்விடும். இதைக் கொஞ்சம் கவனித்துப் பார்க்க வேண்டும். (சிலர் குறுக்கிட்டு பேச்சுக் கொடுத்தார்கள்.) இப்படி ஒருவர் பேசும்போது குறுக்கே பேசுவது என்பது வழக்கமாகப் போய்விட்டது. அதிலும் இந்தச் சட்ட சபையில் கனம் கோதண்டராமன் அவர்கள் மற்றவர் பேசும்போது குறுக்கே பேசுவது என்பது பழக்கமாகவே போய்விட்டது. இப்படி குறுக்கே குறுக்கே பேசினால் கொடுத்திருக்கக்கூடிய குறைந்த அவகாசமும் போய் விடுகிறது. வேண்டுமென்றால் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாமேயொழிய உட்கார்ந்துகொண்டே பேசுவது சரியல்ல.

DEPUTY SPEAKER: The hon. Member should not interrupt his speech.

SRI R. SRINIVASA IYER: The objectives for imposing a ceiling are found in the Report of the Committees on Land Reforms :—

(1) Meeting widespread desire to possess land.

(2) Reducing glaring inequalities in the ownership and use of agricultural land.

(3) Reducing the inequalities in agricultural income.

(4) Enlarging the sphere of self employment.

இதன் நோக்கம் என்ன என்பது ப்ளானிங் கமிஷனின் ரிபோர்ட்டில் இருக்கிறது. திட்டக் கமிஷனைப்பற்றி எல்லோரும் சொல்லுகிறார்கள். திட்டக் கமிஷனுடைய ரிபோர்ட்டை ஆதாரவாக வைத்துக்கொண்டு உச்ச வரம்பு, கொண்டுவரப்படுகிறது. அதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக் கிறார்கள். அதில் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. அதாவது எகனமிக் ஹோல்டிங் என்பதைப்பற்றி இருக்கிறது. ஒரு ஏரை வைத்துக் கொண்டு எவ்வளவு நிலம்தான் உழுது சாகுபடி பண்ணலாம், அதில் மிச்சம் வருமா ? இதை யோசிக்க வேண்டும். ஏராளமான மிச்சம் வரு வதற்கு இல்லை. ஐந்து பேர்கள் இருக்கக்கூடிய ஒரு குடும்பத்திற்கு அதை நல்லபடி நிர்வகிக்க எவ்வளவு எகனமிக் ஹோல்டிங் வேண்டும் என்பதைப் பற்றி திட்ட கமிஷனில் முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே ஒரு பாமிலிக்கு எகனமிக் ஹோல்டிங் எவ்வளவு இருக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not think elaborate arguments are necessary either to object to it or to approve it.

21st September 1961]

Sri R. SRINIVASA IYER : ஜாஸ்தி சொல்ல வேண்டும் என்பதில்லை. சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அதைப்பற்றி பேச வேண்டியதாக இருக்கிறது. சிலர் ஆமோதித்து பேசுகிறார்கள். ஜாஸ்தி பண்ணலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள், சிலர் குறைக்க வேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் 1,200 ரூபாய் வரும்படி வரக்கூடிய அளவில் எகனமிக் ஹோல்டிங் வைத்திருக்கிறார்கள். அதற்கு மூன்று பங்கு இருந்தால்தான் பாமிலி ஹோல்டிங் அதாவது 3,600 ரூபாய் நிகர வரும்படியாக இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த அளவில் சீலிங் வைக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் உச்ச வரம்பு வைக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் ப்ளானிங் கமிஷனில் போட்டார்கள். அது 1955-ல் ஏற்பட்ட ரிபோர்ட்டை 1955-ஐப்பற்றி ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசி என்ன அன்று இருந்த விலைவாசி என்ன என்பதைப் பார்க்க வேண்டும். விலைவாசி அடிப்படையில் இன்றைக்கு இருக்கும் அளவில் பார்த்தால் அதாவது 3,600 என்று பார்த்தால் நிலம் குறையும். அந்த அடிப்படையில் அடுத்த வருஷம் விலைவாசி அதிகப்பட்டால் நிலம் இன்னும் அதிகமாகும். குறைந்தால் அப்பொழுது இருக்கக்கூடிய நிலத்தைப் பிரித்துக்கொடுக்க முடியாது. ஜாஸ்தி பண்ணவும் முடியாது. ஏனென்றால் சட்டத்தில் போட்டு விடுகிறோம். வரும்படி அடிப்படையும் பார்க்கவே முடியாது. ஒரு நபரிடம் அல்லது குடும்பத்தினரிடம் ஆயிரம் ஏக்கர் இருந்தால் அதைக் குறைப்பதற்கு நாம் வருகிறோம். அதை நல்ல முறையில் குறைக்க வேண்டும். உயர்ந்த அளவில் இருக்கிற நிலத்தை இன்றைக்கு நாம் குறைக்கிறோம். அப்படிக் குறைப்பதில் ஒரு அளவு இருக்கிறது. 'ரீஸனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்' என்ற முறையில் எவ்வளவு செய்யலாம் என்று யோசிக்க வேண்டும்.

கனம் அங்கத்தினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் க்ளாஸ் 42, ஸப்-க்ளாஸ் (1) (a)-க்கு "Including water cess, etc.," என்று திருத்தம் கொடுத்திருக்கிறார். என்ன அபிப்பிராயத்தில் அப்படிக் கொடுத்திருக்கிறார் என்று தெரியவில்லை. 42-வது க்ளாஸ், ஸப்-க்ளாஸ் (1)-இல் குறிப்பிட்டுள்ள "லாண்ட் ரெவினியூ" என்பதற்கு விளக்கம் தரும் வகையில் எக்ஸ்ப்ளனேஷன் 1 இருக்கிறது. லாண்ட் ரெவினியூ அடிப்படையில் நாம் ஸ்டாண்டர்டு ஏக்கர் தீர்மானித்திருக்கிறோம். அதன் விவரமெல்லாம் கொடுத்திருக்கிறோம். "Land revenue including watercess, etc.," என்று சொன்னால், நிலத்திற்குப் புஞ்சைத் தீர்வை. தண்ணீர் பாய்ச்சினால் தண்ணீர் பாய்ச்சினதற்கு "Water rate for service rendered" என்ற வகையில் தீர்வை இருக்கிறது—எல்லாவற்றுக்கும் சேர்த்து 100-க்கு ரூ 1-க்கு ஐந்தண cess தீர்வை—இது தவிர பஞ்சாயத்து, 100-க்கு 25 சர்ச்சார்ஜ் தீர்வை விதிக்கலாம் என்று பஞ்சாயத்துச் சட்டத்தின் 116-வது செக்ஷன் படி அதிகாரம் இருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்துப்பார்த்தால், ஸ்டாண்டர்ட் ஏக்கர் கணக்கின்படி உச்ச வரம்பு பத்து ஏக்கர் கூட வராது. ஐந்தாறு ஏக்கர் கணக்குக்கு வந்துவிடும். "வாட்டர் செஸ், எக்ஸெட்ரா" என்று சொன்னால் என்ன என்ன அதில் சேர்ந்திருக்கிறது என்பது புரியவில்லை. ரோடு வரி சேர்ந்ததா? படிப்பு வரி சேர்ந்ததா? இதற்கெல்லாம் கனம் அங்கத்தினர் விளக்கம் கொடுக்கவில்லை. இதற்காகத்தான் எக்ஸ்ப்ளனேஷன் 4-ல் தனியாக கொடுத்திருக்கிறோம். "ட்ரை லாண்டில்" ப்ராஜெக்ட் ஜலத்தைப் பாய்ச்சி நஞ்சை சாகுபடி செய்யக்கூடிய சில நிலங்களுக்கு தனி விதி ஏற்படுத்தியிருக்கிறோம். வரும்படி வரக்கூடியதைப்பார்க்கிறோம். தண்ணீர் தீர்வை செலுத்தினால் மட்டும் வரும்படி வந்ததாக ஆகாது. 6-ம் நெ. கணக்கு எழுதுகிறார்கள் கணக்குப் பிள்ளை. இரண்டணா மட்டம் விளைந்தால், மாவுக்கு இரண்டு கலம் விளைந்தால், ஏக்கராவுக்கு ஆறு கலம் விளைந்தால், தீர்வை கொடுத்தாக வேண்டும். அதற்குக் குறைவாக விளைந்தால் தான் வஜா. இம்மாதிரி நிலங்களை ஸ்டாண்டர்டு ஏக்கரில் கொண்டு வந்தால் அது நியாயம் இல்லை. அவைகளுக்கு ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயிக்கும் வழி இப்பொழுது போட்டிருப்பது நியாயமானது.

[Sri R. Srinivasa Iyer] [21st September 1961

அதைப்பற்றி இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். கெஜூட் பதிவில்லாத ஆபிசர்களும் மற்றவர்களும் குடும்பத்தை நடத்த முடிய வில்லை. விலை வாசி உயர்வு காரணமாக, என்று சம்பளக்கமிஷனிலே வாதாடி, அவர்களுக்கு ஜாஸ்தி சம்பளம் கொடுத்தோம். அதே மாதிரி விவசாயிகளையும் பாவிக்க வேண்டும். நிலச் சுவாந்தார்களையும் பாவிக்க வேண்டும். அவர்கள் குடும்பமும், மிடில் க்ளாஸ் அளவுக்காவது ஜீவிக்க வேண்டும். சொத்து இருக்கிறவர்களை ஒரேயடியாகத் தாழ்த்தி, அவர்கள் ஜீவிக்க முடியாமல் கஷ்டப்படுகிற நிலையிலே கொண்டு வருகிற நோக்கம் இல்லை, இந்த சட்டத்திற்கு. அதே நேரத்தில், விவசாயிகளுக்கும் சாகுபடி யாளருக்கும் பாதுகாப்பு இருக்கிறது—நிலம் இருக்கிறது இல்லை ; அது பற்றி இப்பொழுது பிரச்னை இல்லை—கொஞ்ச நாட்களுக்கு முந்தி, சபையிலே கேள்வி ஒன்றுக்குப் பதில் வைக்கப்பட்டிருந்தது. 1910-லும் 1921-லும் ஏற்பட்ட ரயத்துவாரி, செட்டில்மெண்ட் பற்றி. அதெல்லாம் எப்படிப் போட்டார்கள் ? நிலத்தைத் தர வாரியாகப் பிரித்து. அதிலே நஞ்சை, புஞ்சை, மானுவாரி என்று உள்வாரியாகப் பிரித்து, வளத்தைப் பார்த்து, விளைவைப் பார்த்து, இருபது வருஷ சராசரி வருமானத்தைப் பார்த்து, மார்க்கெட் நிலவரத்தையும் கவனித்து, ரொம்ப நியாயமான முறையில் செய்யப்பட்டது. பதினைந்து சத விகிதம் " ஆப் ஸீஸனுக்காகக் குறைத்து, மிச்ச வருமபடி வரக்கூடியதைக் கணக்கில் எடுத்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் போர்ட்ஸ் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் 1-லிருந்து 3-வரை பார்த்தால் தெரியும். உச்ச வரம்பு கொண்டு வரப் போகிறோம் என்று நினைத்தா அப்பொழுது நிர்ணயித்தார்கள் ? நிலம் நல்ல நிலமா, கெட்ட நிலமா, ஜாஸ்தி வரும்படி வரக்கூடியதா நடுத்தர நிலமா, குறைவாக வரும்படி வரக்கூடிய நிலமா என்று பார்த்து, லாண்ட் ரெவினியூ அடிப்படையில் ஸ்டாண்டர்ட் எக்கர் " நிர்ணயிக்கப் பட்டிருப்பதுதான் முறையாகும். கரும்பு சாகுபடி, கடலை சாகுபடி இருக் கிறதென்றால், அது எப்பொழுது வந்தது ? பருத்தி சாகுபடி எப் பொழுது வந்தது ? இந்த வருஷம் ஒரு க்ராப், அடுத்த வருஷம் இன்னொரு க்ராப் வைப்பார்கள். அதற்கும் அடுத்த வருஷம் இரண்டு க்ராப்பும் போட முடியாமல் வெள்ளாமை எடுக்க முடியாத காலம் ஏற்படலாம். ஆக லாண்டு ரெவினியூ அடிப்படையில் இப்பொழுது வைத் திருப்பது சரி.

கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னதுபோல், டெஸிமல் புள்ளி போடும்போது சுலபமான முறையில் இருக்கலாம். பின்னக் கணக்குக் வைக்கவேண்டிய அவசியம் இல்லாமல், முழுதாகக் கணக்கு இருக்கலாம். சாதாரணமாக, பாதிக்கு மேல் இருந்தால், அதை முழு தாக எடுத்துக் கொள்கிறோம், பாதிக்கு குறைவாக இருந்தால் அதை விட்டு விடுகிறோம். அதன்படியே இதிலும் இருந்தால்தான் நன்றாக வரும்.

கனம் அங்கத்தினர் திரு. கே. ஜி. பழனிசாமி கவுண்டர் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தைப் பற்றியும் என்னுடைய திருத்தத்தைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எக்ஸ்ப்ளனேஷன் 4-ஐப் பொறுத்தவை அவை. புது ப்ராஜெக்ட்டினாலே தண்ணீர்ப் பாசனம் ஏற்படக்கூடிய நிலங்களைப் பொறுத்த வரையில் ஒரு விதி இருக்கிறது; அதாவது

' Explanation IV.—In any area in the State, except the transferred territory, one acre of dry land—

(a) irrigated by direct flow of water from any Government source of irrigation supplying water—

(i) for two crops and above, shall be deemed to be equivalent to one acre of wet land assessed to land revenue at the rate of Rs. 8 and above but below Rs. 10 per acre.', etc.

42 (1) (பி)-இன்படி பார்த்தால் 1.2 எக்கர் வரும். இதிலே ஒரு சிரமம் என்ன வென்றால், " supplying water for two

crops and above " என்று இருக்கிறது. செப்டம்பர் மாதத்தில் தண்ணீர் விடக்கூடிய பிராந்தியத்தில் ஜூனில் விடுகிறோம். இனிமேல் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கும் நேரத்திலே அம்மாதிரி கொடுக்காமல் இருக்க முடியும். ஜாஸ்தி பிரயாசைப்படக்கூடிய குடியான வர்கள், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டு மென்ற எண்ணத்தோடு, கிணறு வைத்து, அதிலிருந்து தண்ணீர் இறைத்து, நாற்று தயாராய் வைத்திருக்கிறார்கள். தண்ணீர் வந்தவுடன் நடவு நடுகிறார்கள். இப்படி யாக சாகுபடிக் காலம் ஒரு மாதம் முந்துகிறது. முன்னாடி நடவு நட்டால் இரண்டு க்ராப் போட்டு உணவு உற்பத்தியைப் பெருக்க முடிகிறது. வாட்டர் பர்மிட்டைப் பார்த்தால் ஒரு க்ராப்புக்கு வாட்டர் பர்மிட் இருக்கிறது. உணவுப் பெருக்கம் ஏற்பட வேண்டுமென்ற ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது. விலைவாசி ஜாஸ்தி இருக்கக்கூடிய நேரத்தில், கூலி ஜாஸ்தியாக இருந்தாலுங் கூட, விவசாயிகள் இரண்டு போகம் பிரயாசைப்பட்டு சாகுபடி செய்கிறார்கள். ஒரு போகம் சாகுபடி பண்ணினால் என்ன, இரண்டு போகம் சாகுபடி பண்ணினால் என்ன! ப்ராஜெக்டிலே "கமாண்ட்" ஆகக்கூடிய எல்லா நிலத்திற்குமே இரண்டு க்ராப்புக்கும், அதற்கும் மேலே சாகுபடி செய்தால் 1·2 என்பதை மாற்றி இரண்டு என்றுபோட வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

பல பேர் பல காரணம் சொல்கிறார்கள். மேட்டூர் பிராஜெக்டை எடுத்துக் கொள்வோம். வி.எம்.பி. டெல்டாப் பிரதேசம் ரொம்ப மணற் பாங்காக, "போரஸ் ஸாயில்" உள்ளதாகவும் இருக்கிறது. இதற்கு 73 ட்யூடி என்று போட்டிருக்கிறார்கள். கணக்கு ஜாஸ்தியாக இருந்தாலும், கொடுக்கும் தண்ணீர் குறைவு. பழைய டெல்டாவில் 50 ஏக்கரிலே பாய்ச்சக் கூடிய தண்ணீரை நாங்கள் 73 ஏக்கருக்கு பாய்ச்ச வேண்டும் என்று ஒரு அந்தாஸ் வைத்துக் கொள்ளலாம். அதுவும் வேலை செய்யவில்லை. தண்ணீர் வரவில்லை ஜி. ஏ. கனல் ஸிஸ்டத்தில் குறுவை கதிர் பறிந்து முற்றி 15 நாளைக்குள் அறுவடை செய்யத்தக்க நிலையில் இருக்கும்போது நாற்றுப் பாவாமலே இருக்கும் பிராந்தியமும் இருக்கிறது.

கனம் அமைச்சர் சொல்லலாம், "ப்ரொவைஸோ போட்டிருக்கிறோம் நோடிபிகேஷன் பண்ணலாம்" என்று. அப்படி ஒவ்வொரு ஸர்வே நெம்பராக ஒரு காலத்திலும் செய்ய முடியாது.

கனம் அங்கத்தினர் திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னதுபோல், ப்ராஜெக்ட் ஏரியாவில், நிலத்தைச் சரிப்படுத்துவதற்கு, மண்ணை எடுத்துச் சரி செய்வதற்கு, இருபது, இருப்பத்தைந்து வருஷம் ஆகிறது. டெல்டாப் பிரதேசம் 8 ரூபாய்க்கும் 10 ரூபாய்க்கும் நஞ்சை நிலத்திலே ஈடாக வராது. அது மட்டுமல்ல.

(ii) ' **for only one crop, shall be detmed to be enquivolent to one acre of wet land assessed to land revenue at the rate of Rs. 4 and above but below Rs. 6 per acre.'** என்று இருக்கிறது. அதாவது 1·75 ஏக்கர் என்று வரும். 1·75 என்பது ஒரு க்ராப்புக்குத்தான். சில வருஷங்கள் விளையும். சில வருஷங்கள் விளையாது. இந்த வருஷம் கரை புரண்டு போகிற காவேரியில் உடைப்பு ஏற்பட்டுவிட்டது. ஜி. ஏ. கால்வாயில் 4,300 க்யூசெக் வர வேண்டிய இடத்தில் 2,600 க்யூசெக் தான் வருகிறது. கிணற்றடிப் பிள்ளையார் என்று சொல்வது போல், விளைகிறதோ இல்லையா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாத பிராந்தியம். என்னுடைய திருத்தங்களாவது—

" In sub-clause (42), Explanation IV (*a*) (ii), for the words ' at the rate of Rs. 4 and above but below Rs. 6 per acre,' substitues the words ' at any rate below Rs. 4 **per acre** '."

" In sub-clause (42), Explanation IV (*b*), for the words ' one acre of wet land assessed to land revenue at the rate of Rs. 4 and above but below Rs. 6 per acre ' substitute the words ' one acre of dry land assessed to land revenue at the rate of Rs. 2 and above per acre '."

அந்தமாதிரி திருத்தத்திஞல்தான் இது நியாயமான முறையாக இருக்கும். இது லோயர்பவானி புராஜக்ட்டுக்கு மட்டுமல்ல, வீடூர் புராஜக்ட்டு இருக்கிறது, மணி முத்தாறு இருக்கிறது. அங்கெல்லாம் தண்ணீர் இருக்கும்பொழுதுதான் தண்ணீர் கொடுக்கலாம். தண்ணீர் இல்லாவிட்டால் விடுவதில்லை. நம்முடைய ராஜ்ஜியத்திலே வருட முழுவதும் தண்ணீர் விடக்கூடிய பாசன வசதி மதாராஸ் ஸ்டேட்டிலேயே கிடையாது. ஆகவே தான் இந்த விளக்கம் 4-ல் திரு. பழனிசாமி கவுண்டர் அவர்களின் திருத்தப்படி 1·75 என்பதற்கு 2 ஏக்கர் என்ருவது வைக்க வேண்டும்.

'(b) irrigated by lifting water from any Government source of irrigation shall be deemed to be equivalent to one acre of wet land assessed to land revenue at the rate of Rs. 4 and above but below Rs. 6 per acre.'

இது ப்ராஜெக்ட் தண்ணீரை இறைத்து பயிரிடுவதற்கு தண்ணீர் தீர்வை வேறு தனியாக வாங்கப்படுகிறது. இறைத்துப் பாய்ச்சிஞல் இரண்டு ஏக்கர் இருந்தால் கூட போதாது. 4 ஏக்கர் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இறைத்துப் பாசனம் செய்யக்கூடிய இடங்களில் செலவு அதிகமாகத்தான் ஆகிறது. புராஜெக்ட் ஏரியாவில்கூட மான்யுவல் பவர் போட்டுத்தான் பயிரிட வேண்டியிருக்கிறது. ஆகவே என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது முக்கியமான கிளாஸ். மற்ற திருத்தங்கள் 51,56 கூட கன்யாகுமரி, தென்கோட்டை பகுதிக்கு பொருத்தமாக இருக்கிறது. இதே நோக்கத்தோடுதான் அங்கே பேஸிக் ரெவின்யூ வித்தியாசமாக இருப்பதஞல் இது கொண்டு வரப்படுகிறது.

இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். செட்டில்மெண்ட் ஆகாத நிலமாஞலும், ஆன நிலமாஞலும் தீர்வையை எடுத்துக் கொள்ள வேண்டும். இஞமாக இருந்து ரயத்துவாரியாக மாற்றப்பட்டவைகளுக்கு அதிகத் தீர்வை போடப்பட்டது. பழைய தீர்வையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று போடப்பட்டிருக்கிறது. இந்த முதல் பிரிவைப் பார்த்தால் புதிதாக போடக்கூடியதை எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இது அதில் சரியல்ல. இதில் கூட போக போகச் செட்டில்மெண்டில் நஞ்சை தீர்வையும், புஞ்சைத் தீர்வையும் சமரசப்பட்டது. இன்னென்று சமீபத்தில் போடப்பட்ட உத்திரவு மூலம் பட்டுக்கோட்டை, அறந்தாங்கிக்கு மட்டும் போட்டார்களோ, என்னவோ ? ஐந்து வருடங்களுக்கு நிரந்தரமாக தண்ணீர் பாய்ச்சி வரக்கூடிய நிலத்தை வெட் லாண்டாக நிர்ணயிக்க வேண்டுமென் கிருர்கள். இஞம் கிராமமாக இருந்தால் கிடையாது. செக்ஷன் 42-க்காக இவற்றை யெல்லாம் சொன்னேன். ஆகவே என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, எனக்கு பேச இவ்வளவு நேரம் கொடுத்ததற்காக நன்றி செலுத்துகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் தலைவர் அவர்களே, இந்த உப பிரிவு மிகவும் முக்கியமானது. நான் கொடுத்திருக்கும் திருத்தங்களின் நோக்கம் உச்ச வரம்பு விஸ்தீரணத்தை எவ்வளவு குறைக்க வேண்டுமோ அவ்வளவு குறைக்க வேண்டுமென்பது. ஆஞல் இங்கே நடக்கிற விவாதத்தைப் பார்த்தால் உச்ச வரம்பு விஸ்தீரணத்தை எவ்வளவு அதிகப்படுத்த வேண்டுமோ அவ்வளவு அதிகப்படுத்துவதற்கு அனுசரணையாகவே இருக்கிறது. அதற்கான திருத்தங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆஞல் இந்த மசோதாவில் பிரியாம்பிள் சொல்லப்பட்டுள்ள நோக்கத்திற்கு அனுசரணையாக இருக்கும். உச்ச வரம்பு விஸ்தீரணத்தை குறைக்க வேண்டுமென்பதற்காக நான் திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். அவைகள் தான் மசோதாவின் அடிப்படைக்கு மிகவும் பொருத்தமானவை. உதாரணமாக 15 ரூபாய்க்கு அதிகமாக தீர்வை செலுத்தக் கூடிய நிலத்தை 0·75 செண்ட்டாக குறைக்க வேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதே பிரச்னையைப் பற்றித்தான் தஞ்சாவூர் மிராசுதார் பிரதிநிதியும் செலக்ட் கமிட்டியில் சாட்சியம் கொடுத்திருக்கிருர்கள். பத்து ரூபாய்க்கு மேல் என்ருல் எல்லா நிலமும் ஒரே தரம் என்று சொல்ல

21st September 1961] [Sri M. Kalyanasundaram]

முடியாது. மூன்று போகம் விளையும் நிலமும் இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். அதை வைத்து தீர்வை போடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். நான் கொடுத்திருக்கும் திருத்தம் இந்த அளவுக்கு குறைந்திருக்கிறது.

நான் கொடுத்திருக்கிற திருத்தத்தின் அடிப்படையில் பார்த்தால் உயர்ந்த பட்ச நிலமாக இருந்தால் சீலிங் ஏரியாவில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அடிப்படையில் வைத்து 15 ரூபாய்க்கு அதிகமாகத் தீர்வை செலுத்தினாலும் 22½ ஆகும். அதிகமாகப் போகக் கூடியது 60 ஏக்கர்தான். ஆக 22½ யிலிருந்து 60 ஏக்கர் வரை உச்சவரம்பு விஸ்தீரணம் நிர்ணயிக்கப்படும். ஆனால் நான் கொடுத்திருக்கிற திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெரியும். அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் என்னுடைய கருத்துக்களை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். உச்சவரம்பு விஸ்தீரணத்தை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக பல முறையினும் பல விதமான வகையிலும் இந்தச் சட்டத்தில் ஸ்டாண்டர்டு ஏக்கரைப் பற்றிய விளக்கம் அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கிறது. 30 ஏக்கரிலிருந்து 120 ஏக்கர் வரை போகும். 30 ஏக்கருக்கு குறைவாக நம் ராஜ்யத்தில் இருக்கவே இருக்காது. 4-லிருந்து 8 ரூபாய் 10 ரூபாய் என்று இவர்கள் வரையறை செய்திருப்பதின் காரணமாக 48-ஏக்கரிலிருந்து 120-ஏக்கர் வரைதான் அதிகமாக இருக்கும். அதற்கு கீழே போகாது. அதையெல்லாம் பார்த்துத்தான் நாங்கள் இந்த திருத்தங்களை கொடுக்க வேண்டியிருக்கிறது. வருமானம் எவ்வளவு இருக்கலாம் என்பதைப்பற்றி என் கட்சியின் சார்பாகவும், சொந்த முறையிலும் 5,000 ரூபாய் வரையில் வருடத்திற்கு வருமானமிருந்தால் போதும் என்று சொன்னது உண்மை. அந்த கோட்பாடுகளை மாற்றவில்லை. அந்தக் கோட்பாடுகளின் விதியில் இந்த திருத்தங்கள் அமைய வேண்டுமென்பதுதான் என்னுடைய குறிக்கோள். நான் கொடுத்திருக்கிற திருத்தங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டால் முதலில் 11½ என்பதை பன்னிரண்டுஎன்றே வைத்துக்கொள்ளலாம். வருட வருமானம் 2,000 ரூபாய்க்கு குறையாது. குறைவதற்கு சந்தர்ப்பமும் இல்லை. 6000, 7000 ரூபாய் வருமானம் வரும் அளவில் தான் வைத்திருக்கிறேன். அதே அடிப்படையில் பூராவும் இருக்கவேண்டும். 12 noon
இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால்தான் திட்டக்கமிஷனின் நோக்கத்தை நாம் அமுல் நடத்துவதாகும். திட்டக்கமிஷன் சாப்டர் பூராவையும் படிக்க வேண்டும். குடியானவர்களுக்கு நிலம் சொந்தமாக வேண்டுமென்ற நோக்கத்தோடு உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, குடியானவர்கள் நிலத்தை, எடுத்து நிலப் பிரபுக்களுக்கு சொந்தமாக்கி குத்தகை விவசாயி வர்க்கத்தை ஒழிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்ல வில்லை. கம்யூனிஸ்ட் கட்சி சொல்வதை செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. திட்டக் கமிஷன் சொல்லும் யோசனைப் படி நடக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறேன். திட்டக்கமிஷன் சொல்கிற யோசனையை நிறைவேற்றுகிற மாதிரி நடித்து அதை நிறை வேற்ற தவறுகிறது என்பதுதான் என் அபிப்பிராயம். திட்டக்கமிஷனை ஒரு பக்கத்தில் ஏமாற்றி ஜனங்களுக்கு இதுவரை சொன்ன வாக்குறுதியையும் மீறுவதாக இருக்கிறது. காங்கிரசுக்குத்தான் இப்பெருமை சாரும் என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். காங்கிரசுக்கு அந்தப் பெருமை உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் எப்பொழுது? இப்பொழுது பேசிய கனம் அங்கத்தினர்கள் காங்கிரஸில் சேருவதற்கு முன்னால்தான் அது. அவர்கள் சேர்ந்த பின்னர் காங்கிரஸ் லட்சியம் மாறி விட்டது., அப்போதைய காங்கிரஸின் உண்மை வாரிசு இந்த சபையில் யாராவது இருந்தால் அது நானே தவிர வேறு யாரும் கிடையாது. (ஸ்ரீ ஸ்ரீனிவாஸ ஐயர் குறுக்கிட்டுப் பேசினர்.) ஸ்ரீனிவாச ஐயர் அவர்கள் காங்கிரஸைப் பற்றி பேசுவதற்கு இன்னும் அதிகம் படித்தாக வேண்டும். சட்டத்தைப்பற்றி அவர் பேசலாம். பழைய காங்கிரஸின் லட்சியம் என்ன என்பதைப் பற்றிப் பேச அவர் இன்னும் படிக்க வேண்டும். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று காங்கிரஸ் முதன் முதலாகச் சொன்னது உண்மை. ஆனால் அதை வைத்துக் கொண்டு நாங்கள் அந்த இலட்சியத்தை நிறை

வேற்றுகிறோம் என்று சொல்லி, நீங்கள் கோஷம் போடாதீர்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. விவசாயிகள் தங்களுக்கு நிலம் வேண்டுமென்பதை இப்பொழுது உணருகிறார்கள். விவசாயத்திற்கு அவசியம், நிலம், உழைப்பு. விவசாயி இதன் முக்கியத்துவத்தை உணர உணர அதை மேலும் மேலும் வற்புறுத்துகிறான். தூரதிருஷ்டியோடு, இதை உணர்ந்துதான் நிலச் சீர்திருத்தம் தேசத்தின் முன்னேற்றத்திற்கு அவசியம் என்று சொல்லப்பட்டது. நிலப்பிரபுக்களாக இருப்பவர்களை ஒழித்து விட வேண்டுமென்பதல்ல. அவர்களைப் பட்டினி போட வேண்டுமென்று சொல்லவில்லை. 15 ஏக்கர் இருந்தால் போதும். அதனால் அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிவராது. மழையிலும் வெய்யிலிலும் கஷ்டப்பட்டு உழைத்து பாடுபடக்கூடியவன், மூன்றுவேளை சோற்றுக்கு இல்லாமல் இருக்கும் போது, 5,000 ரூபாய் வருமானம் எப்படி போதும் என்றால் நான் சொல்லும் யோசனையும் ஏற்றத் தாழ்வை போக்க வேண்டுமென்பதுதான். இப்பொழுதுள்ளபடி நிறைவேறினால், நிலப்பிரபுக்களுக்குத்தான் அதிகமான நிலம் கிடைக்குமே தவிர, ஒரு குடியானவனுக்குக் கூட நிலம் சொந்தமாகும் நிலை ஏற்படாது. இந்த உண்மையை நான் வெளியில் சொல்வதால் என்மீது வருத்தப்பட்டு பயன் இல்லை. இது தேர்தல் ஸ்டண்ட் அல்ல. அதற்காகச் சொல்ல வில்லை. இந்த மசோதா வருவதற்கு முன்பே 15 ஏக்கர் இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆகவே, இந்த திருத்தத்தை நான் தேர்தல் ஸ்டண்டாக கொண்டு வந்திருக்கிறேன் என்று யாரும் கருத வேண்டாம். இந்த மசோதாவில்தான் தேர்தல் ஸ்டண்ட் இருக்கிறதே தவிர, மக்களிடம் சொல்வதற்காகத்தான் சட்டம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். பின்னால் வருவதை முன்னாலே சொல்வது இச்சபையின் கடமை. எந்தெந்த இடங்களில் என்னென்ன திருத்தங்கள் கொடுக்க வேண்டுமோ அவைகளைக் கொடுத்திருக்கிறேன். இதை அதிகரிக்க வேண்டுமென்பவர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். பின், புஞ்சை நிலத்தின் அளவை அதிகரிக்க வேண்டுமென்று சொன்னால் பவானி திட்ட பிரதேசம், பட்டுக் கோட்டை போன்ற இடங்களில் தனித்தனியாக இரண்டு ஏக்கர் என்று இருக்க வேண்டுமென்று சொன்னால் பாசன வசதியே இல்லாத புஞ்சைகளுக்கு எவ்வளவு ஏக்கர் என்று வைப்பது? வைத்திருப்பதே தாராளம். அதையும் இன்னும் தாராளமாக்க வேண்டுமென்று சொன்னால் இந்த சட்டத்திற்கே அவசியமில்லை. இதைவிட அதிகச் சலுகை கொடுக்க வேண்டுமென்பதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இதன் விவாதத்தை முடிக்க வேண்டாம் என்று சொல்வதைப் பார்த்தால் இன்னும் "கன்ஸஷன்" கொடுக்கலாமா என்று நினைக்கிறார்களோ என்னவோ சந்தேகமாயிருக்கிறது. இதை விட அதிகமாகக் கொடுப்பதை ஒப்புக்கொள்ளவே கூடாது. நான் கொடுத்திருக்கும் திருத்தத்தின் அடிப்படையில்தான் திருத்த வேண்டுமென்று கூறிக்கொண்டு, மற்ற திருத்தங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது, என் திருத்தத்தை மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI P. U. SHANMUGAM : ஸ்டான்டேர்ட் ஏக்கரை எந்த முறையில் தீர்மானிப்பது என்பதில், எனக்கு எழும் ஒரு சிறு சந்தேகத்தை விளக்குமாறு அமைச்சர் அவர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சட்டச் சுருக்கத்தில், 42-வது உப பிரிவில் சொல்கிறபோது, ஸ்டான்டர்ட் ஏக்கர் தீர்மானிப்பது நிலத்தீர்வையை வைத்துத்தான், தண்ணீர் தீர்வையை சேர்க்காதுதான் ஸ்டான்டேர்ட் ஏக்கர் நிர்ணயிக்கப்படவேண்டுமென்று சட்டச் சுருக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தண்ணீர் தீர்வையும் சேர்த்துத்தான் போட்டிருக்கிறோம் என்று நிதியமைச்சர் அவர்கள் தனிமையில் எனக்கு விளக்கம் தந்தார்கள். முதலில் சொல்லப்பட்டிருப்பது தண்ணீர் தீர்வையைச் சேர்த்துத்தான், அதை பின்னால் சட்டத்தில் சேர்த்திருக்கிறோம் என்று எனது ஐயத்தை தெளிவு படுத்தினார்கள். திரு. கோதண்டராமன் அவர்கள் திருத்தத்தை ஆமோதித்து, வழி மொழிந்து இந்த கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நிலத்திற்கு ஜீவனாக அமை

வது தண்ணீர் தீர்வை. தண்ணீர் தீர்வையை சேர்த்துத்தான் ஸ்டான்டேர்ட் ஏக்கர் நிர்ணயிக்கப்பட வேண்டுமே தவிர அடிப்படைத் தீர்வையை வைத்து நிர்ணயிப்பது நியாயமாகாது. தண்ணீர் தீர்வையைச் சேர்த்துத் தான் சட்டத்தில் போட்டிருக்கிறதென்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுருக்கத்தில் சொல்லும்போது,—

" the Committee decided that it should be taken to mean the basic 'land assessment' "

என்று சொல்லியிருக்கிறார்கள். கமிட்டியார், அடிப்படைத் தீர்வையை வைத்துத்தான் சட்டம் இயற்ற வேண்டுமென்று சொல்லி அதற்கொப்ப சட்டத்தில் திருத்தியிருக்கிறோம் என்று சுருக்கத்தில் சொல்லி பின்னால் மாற்றியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்வதைக் குறித்துள்ள சந்தேகத்தை தயவு செய்து அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். தண்ணீர் தீர்வையைச் சேர்க்காது ஸ்டான்டேர்ட் ஏக்கர் நிர்ணயிப்பது முறையல்ல, நீதியல்ல. அடிப்படைத் தீர்வையை வைத்துக்கொண்டு ஸ்டான்டேர்ட் ஏக்கர் நிர்ணயிப்பது நியாயமல்ல என்று கூறி, அடிப்படைத் தீர்வையோடு தண்ணீர் தீர்வையும் சேர்த்து ஸ்டான்டேர்ட் ஏக்கர் நிர்ணயிக்க வேண்டுமென்று திரு. கோதண்டராமன் அவர்களின் திருத்தத்தை வழிமொழிந்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, எனது 47-வது திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சுருக்கமாகச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். விவசாயி எவ்வளவோ கஷ்டப்பட்டு, பாடுபட்டு உழைத்து பாடுபடவேண்டுமென்பதைப் பற்றி அதிகமாக சொல்ல வேண்டியதில்லை. 30 ஏக்கர் இருந்தால் ஏக்கருக்கு 100 ரூபாய் வீதம் 30 ஏக்கருக்கு ஒரு குடும்பத்திற்கு 3,000 ரூபாய் வரும். இதை வைத்துக் கொண்டு ஐந்து பேர்கள் உள்ள ஒரு குடும்பத்தை நடத்த வேண்டுமென்றால், அது மிகவும் கஷ்டமான காரியமாகும்.

" Two acres of wet land assessed to land revenue at any rate below Rs. 6 per acre,

Three acres of dry land assessed to land revenue at the rate of Rs. 2 and above per acre,

Four acres of dry land assessed to land revenue at any rate below Rs. 2 per acre ".

என்று நான் "மாடரேட்டாக", குறைவாகத்தான் கொடுத்திருக்கிறேன். அநேக இடங்களில் சரிவர மழை பெய்வதில்லை. முக்கியமாக எங்கள் மாவட்டத்திலும், சேலம், ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் எல்லாம் நாலைந்து வருடங்களாக நிலங்கள் எல்லாம் நல்ல முறையில் சாகுபடிக்கு வராமல் இருக்கின்ற காரணத்தினால் அங்குள்ள விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதைப் பற்றி நன்றாக ஆலோசிக்க வேண்டும். அதோடு தண்ணீர் தீர்வையையும் இதோடு சேர்க்கவேண்டும் என்று கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களையும், இன்னும் இதை குறைக்க வேண்டும் என்று கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களையும் நான் ஆட்சேபிக்கிறேன். என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ஸார், இந்தப் பிரிவு மிகவும் முக்கியமான பிரிவு. இதை அடிப்படையாக வைத்துத்தான் பல ஷரத்துக்கள் வரவிருக்கின்றன. இதில் பல்வேறு திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு கனம் டானியல் அவர்கள் lacuna, fraction எல்லாம் இருப்பதாக குறிப்பிட்டார்கள். பவானிப் பிரதேசத்தைப் பற்றியும் சிலர் பேசினார்கள். ஆகவே இவைகளைப் பற்றியெல்லாம் சற்று நிதானமாக ஆலோசிக்க வேண்டும். ஆகவே இந்த

சப்-கிளாஸ் நிறைவேற்றுவதை நாளைக்கு ஒத்திவைக்கலாம் என்று அபிப்பிராயப்படுகிறேன். இன்று இதன் பின்னால் உள்ள கிளாஸ்களை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : So the discussion on sub-clause (42) will be continued to-morrow. Now we will take up sub-clause (43).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I would suggest that the discussion on the entire clause 3 may be continued tomorrow. Let us now take up clauses 4 and 5. To-morrow we can go back to clause 3.

DEPUTY SPEAKER : Yes. I think the House agrees to it.

Clause 4.

Clause 4 was put and carried.

Clause 5.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 5 do stand part of the Bill.'

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move the following amendment :—

'In the clause, for the figures and words "30 standard acres", wherever they occur, substitute the figures and words "50 standard acres", and make consequential alterations in the 'Illustrations'.'

SRI B. DORAISAMI REDDIAR : Sir, I second it.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendments :—

'*For* sub-clause (1) (*a*), *substitute* the following :—

"(1) (*a*) The ceiling area in the case of every family consisting of not more than five members shall be 15 standard acres".'

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I second the amendment.

SRI R. SRINIVASA IYER : Sir, I move the following amendment :—

'In sub-clause (1) (*a*), after the words "every person", *add* the words "other than a tenant".'

SRI A. R. SUBBIAH MUDALIAR : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER. As Sri Kalyanasundaram has moved a similar amendment, Sri N. K. Palanisami, Sri N. Marudachalam and Sri M. P. Subramaniam need not move their amendments.

21st September 1961]

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :—

' *For* sub-clause (1) (*b*), *substitute* the following :—

" (1) (*b*) The ceiling area in the case of every family consisting of more than five members shall be 15 standard acres together with an additional two standard acres for every member of the family in excess of five :

Provided that any adult person who was a member of a family at the commencement of this Act, shall be entitled for separate property not exceeding five standard acres;

Provided further that the ceiling area of a family in excess of five members shall not exceed a maximum of 25 standard acres in any case ".'

SRI N. K. PALANISAMI : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER : Sri N. K. Palanisami and Sri M. P. Subramaniam need not move their amendments as a similar amendment has been moved.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move the following amendment :—

' In clause 5—

(i) in sub-clause (3)—

(*a*) in item (*b*), for the words ' individual member ' in the two places where they occur, substitute the words ' individual person ';

(*b*) in the Explanation, in item (*b*), *for* the words ' individual member ', *substitute* the words ' individual person '.

(ii) in Illustration (*e*), after the sentence " Each of the two minor sons can hold additional 10 standard acres ", *insert* the brackets, word and figures " [section 5 (4)] ".

SRI R. SRINIVASA IYER : Sir, I move the following amendment.

After sub-clause 1 (*b*), *add* the following as sub-clause 1 (*c*) :—

" (*c*) The ceiling area in the case of every tenant shall be five standard acres ".'

SRI A. R. SUBBIAH MUDALIAR : Sir, I second the amendment.

SRI M. KALYANASUNDARAM : Sir, on a point of order. The amendment just now moved, I think, should come in Chapter VIII and not in Clause 5. This is not the proper place for it.

SRI R. SRINIVASA IYER : Sir, this is the proper place. I have moved an amendment to sub-clause (1) (*a*) and this is a consequential amendment.

DEPUTY SPEAKER : He wants to add something as sub-clause 1 (*c*) and I do not think there need be any objection to it.

SRI M. KALYANASUNDARAM : Sir, tenancy is dealt with only in Chapter VIII.

DEPUTY SPEAKER : There need not be any objection to it. It is for the House to decide.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

'In clause 5, delete sub-clause (4) and the " illustration " thereunder.'

SRI N. MARUDACHALAM : Sir, I second the amendment.

SRI M. P. SUBRAMANIAM : Sir, I move the following amendment :

" In Clause 5, omit sub-clause 4 (*a*) and the proviso. "

The amendment was duly seconded.

SRI M. P. SUBRAMANIAM : Sir, I move the following amendment :

" In Clause 5, delete sub-clause (4) (*b*) and the illustrations (*a*), (*b*), (*c*) and (*d*)."

The amendment was duly seconded.

SRI M. P. SUBRAMANIAM : Sir, I move the following amendment :

'In Clause 5, sub-clause (5) for the figures " 60 " occuring in the last line of the sub-clause, *substitute* the figures "30".'

The amendment was duly seconded.

SRI N. MARUDACHALAM : Sir, I move the following amendments :

'In Clause 5, sub-clause (2) *omit* the words " individually by the members of a family or ".'

'In Clause 5, sub-clause (3) (*a*) *omit* the words " or by an individual person " and the words " or of the individual person " and make suitable changes in the Explanation and illustrations.'

'In Clause 5, sub-clause (3) (*b*) *omit* the words " or by an individual member " and make suitable changes in the Explanation and illustrations.'

'In Clause 5, delete sub-clauses (5) and (6).'

The amendments were duly seconded.

DEPUTY SPEAKER : The Clause and the amendments are before the House for discussion.

21st September 1961]

SRI S. RAMAKRISHNA THEVAR : தலைவர் அவர்களே, இப்போது 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் ஒருவர் வைத்துக்கொண்டால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் நான் நேரிடையாகவே விவசாயம் செய்யக்கூடிய ஒரு சம்சாரி. என் நிலைமை யிலே பார்க்கப் போனால் எந்த வழியிலே 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்துக் கொண்டு நாம் ஜீவனம் செய்வோம் என்ற அச்சத்திற்கு உள்ளாகின்றேன். முப்பது ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு 3 லட்சம் ரூபாய் மதிப்பு உள்ள நிலமும் இருக்கிறது, $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் மதிப்பு உள்ள நிலமும் இருக்கிறது, 1 லட்சம் ரூபாய் மதிப்பு உள்ள நிலமும் இருக்கிறது, 10 ஆயிரம் ரூபாய் கூட மதிப்பு இல்லாத நிலம் இருக்கிறது. என்னுடைய ஏரியாவை எடுத்துக் கொண்டால் முதல் தரமான ஒரு நிலத்தை எடுத்துக்கொண்டால், அது ஆயிரம் ரூபாய்க்கு விலை போகுமா என்று பார்ப்போமானால் அத்தகைய நிலையில் அது இல்லை. இந்த நிலையில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர்தான் வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தால், என் போன்ற விவசாயி கள் பரிதாபகரமான நிலையில் சிக்கிக்கொண்டு கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்படும்.

பொதுவாக ராமநாதபுரம் ஜமீனை எடுத்துக்கொண்டால், சிவகங்கை ஜமீனை எடுத்துக்கொண்டால் விவசாயிகள் எப்பொழுதும் ரொம்பவும் கஷ்ட நிலையில் இருக்கக்கூடியவர்கள். இந்த நிலையில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வேறு வைத்தால் அவர்களுடைய நிலை ரொம்பவும் பரிதாபகரமாக முடியும். முன்பு பேசிய மதிப்புக்குரிய அங்கத்தினர் ஸ்ரீ சீனிவாச அய்யர் அவர்கள் சொன்னார்கள், நிலங்களின் வருமானத்தை வைத்து முடிவு கட்ட முடியாது, தீர்வையை வைத்துத்தான் முடிவு கட்ட முடியும் என்று. அதே நிலையில் ரெவின்யூ தீர்வையை வைத்துக்கொண்டு பார்த்தால் தஞ்சை ஜில்லாவில் அரந்தாங்கி தாலூகாவை எடுத்துக்கொண்டால் எத் தகைய நிலையில் இருக்கிறது, திருவாடானை தாலூகாவை எடுத்துக்கொண் டால் எத்தகைய நிலையில் இருக்கிறது, ராமநாதபுரம் தாலூகாவை எடுத்துக் கொண்டால் எத்தகைய நிலையில் இருக்கிறது என்று அவர்கள் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அவசரப்பட்டு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தால் அந்தப் பகுதியிலுள்ள எண்ணற்ற விவசாயிகள் நாடு கடந்து தஞ்சை ஜில்லாவை நாடிப் போகவேண்டிய நிலை ஏற்படும் என்று ரொம்பவும் உறுதியாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டாவது, வருமானத்தை வைத்துக்கொண்டு முடிவு கட்டவேண்டு மென்று நான் சொல்லுகிறேன். தண்ணீர் பாயக்கூடிய இடத்தில் மூன்று போகம் விளைகிறது. குறைந்த பட்சம் பார்த்தாலும், அது 20 மூட்டைகள் வரை ஒரு போகத்தில் கிடைத்தாலும், மூன்று போகத்திலும் ரொம்பக் குறைச்சலாகப் பார்த்தாலும் 50 மூட்டைகள் நிச்சயமாகக் கிடைக்கும். எங்கள் ஏரியாவிலே எடுத்துக்கொண்டால் ஒரு வருஷத்தில் ஒரு ஏக்கருக்கு 10 மூட்டை கிடைத்தால், அடுத்த மூன்று வருஷங்களுக்கு நாங்கள் அந்த நிலத்திலிருந்து எந்த தானியத்தையும் எதிர்பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு நிலத்தை யும், 10 ஆயிரம் ரூபாய்கூட மதிப்பு இல்லாத ஒரு நிலத்தையும் ஒரே அளவில்தான் வைத்துக்கொள்ளலாம் என்றால் அது ரொம்பவும் கூடாத ஒரு நியாயமாக இருக்கிறது. ஆனால், இதில் அவர்களுக்கு சிக்கல் இருக் கிறது என்பதை நான் உணருகிறேன். எந்த வகையில் செய்யலாம் என்று ரொம்பவும் யோசனை செய்திருக்கிறார்கள். நிபுணர்களெல்லாம் சேர்ந்துதான் முடிவு செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. வேறு வழியில்லை என்று இப்படித்தான் வைக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தால் மானத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடிய சம்சாரிகள் எத்தகைய முறையில் வாழ்க்கை நடத்த முடியும் என்று பார்க்க வேண்டும். முப்பதாயிரம் ரூபாய் பெருமானமுள்ள முதல் தர நஞ்சையாக இருந்தாலும்கூட எத்தனை காலத்திற்கு ஜீவனம் செய்ய முடியும். மூன்று வருஷத்திற்கு ஒரு முறைதான் விளையக்கூடிய பகுதியில் என்ன நிலை ஏற்படும் என்று அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு பழமொழி சொல்லுவார்கள். அதாவது " இரண்டு

பெண்டாட்டிக்காரனுக்கு மண்டையில் மயிர் இல்லே " என்று. மூத்தவள் கருப்பு மயிரையெல்லாம் பிடுங்கி எடுத்துவிடுவாள். இளேயவள் வெள்ளே மயிரையெல்லாம் பிடுங்கி யெடுத்துவிடுவாள், ஆகையால் தலேயில் மயிர் இல்லாமல் போய்விடும் என்று கதை சொல்லுவார்கள். சட்டத்திற்கு இது சரியாக வரவில்லே, சூழ்நிலேக்கு இது சரியாக வரவில்லே, ஆகையால் இப்படித்தான் செய்ய வேண்டுமென்று, வருமானத்தை வைத்துப் பார்ப் பதற்கு முடியவில்லே என்றுல் மானவாரி பிரதேச மக்களுக்கு, 30 எக்கர் நல்ல முதல் தர நஞ்சையாக இருந்தாலும் மூன்று வருஷம்கூட காலம் தள்ள முடியாது. இதிலே என்னுடைய அனுபவத்தையே சொல்லு கிறேன். நாளடைவில் இருக்கக்கூடிய நிலத்தை விற்று விற்று, ஜீவனம் செய்யவேண்டிய நிலே ஏற்படுகிறது. வாங்குவதற்கான நிலே எப்படி ஏற் படுகிறது பஞ்சப் பிரதேசத்தில் என்று கேட்கலாம். மலேயா போன்ற இடங்களுக்குச் சென்று சம்பாதித்துக்கொண்டு வந்திருப்பவர்கள் வாங்கு கிருர்கள். அந்த நிலேயில் இருக்கிறேம் நாங்கள். மதிப்புக்குரிய அமைச் சர்கள் எங்கள் பிரதேசத்தை வந்து பார்த்திருக்கிருர்கள். அவர்களுக்கு அங்கு இருக்கக்கூடிய நிலே நன்றுகத் தெரியும். இந்த நிலேயில் முப்பது ஏக்கர் என்று வைத்தால் நாங்கள் நிச்சயமாக பாதிக்கப்பட்டவர்களாவோம். கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி சொன்ன மாதிரித்தான் நானும் சொல்ல வேண்டியிருக்கிறது. சிலர் சொன்னுர்கள் 2 ஏக்கர் வைக்கலாம் என்று. ஐந்து ஏக்கர் வைத்தால்கூட அந்தப் பகுதியிலுள்ள நிலத்தில் ஒரு ஏக்கருக்குச் சமமாக இருக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றுல் அத்தகைய வருமானக் குறைச்சலான பூமி யில் இருக்கிறேம். ஏதோ வரி போடுகிறேம். பத்து ரூபாய் வரி தஞ்சை ஜில்லாவிலும் போட்டிருக்கிருர்கள். இந்தப் பகுதியிலும்கூட 10 ரூபாய் வரி போட்டிருக்கிருர்கள். இந்த நிலேயில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத் தால் ரொம்பவும் பாதகம் ஏற்படும், ஆகையால் இன்னும் நன்றுகப் பரி சீலனே செய்து, அவசரமாக எங்கள் தலேயில் இந்தச் சுமையைச் சுமத் தாது, முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளு கிறேன். வணக்கம்.

12-30 a.m. *SRI T. ARUNACHALA THEVAR: தலேவர் அவர்களே, எனக்கு இப்போதாவது இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். உச்சவரம்பு சம்பந்தமாய் கொண்டு வந்த சட்டத்திலே, 30 ஸ்டாண்டர் ஏக்கர் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனுல், திருச்சி ஜில்லா, தஞ்சாவூர் ஜில்லா, கோயம்புத்தூர் ஜில்லா போன்ற சில ஜில்லாக்கள் நம்முடைய தமிழ் நாட்டிலே இருக்கின்றன. ஆனுல் எடுத்ததற்கெல்லாம் தஞ்சாவூர் ஜில்லாவை ஒப்பிட்டுக்கொண்டு, அந்தக் கணக்கிலேயே இந்தசபையிலே நிர்ணயம் செய்வதென்றுல், அது மிகவும் மனவருத்தப்பட வேண்டிய விஷயமாகும். தஞ்சாவூரில் உள்ளவர்களுக்கும் 30 ஏக்கரா, அதேபோல் புதுக்கோட்டையிலே உள்ளவர்களுக்கும் 30 ஏக்கரா என்றுல், அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும் என்று நான் கேட்கிறேன். தஞ்சாவூரில் எத்தனேயோ ஆறுகள் ஓடி, அங்கு முப்போகம் விளேயக்கூடிய பிரதேசமாக இருக்கிறது. அங்குள்ளவர்களுக்கும் 30 ஏக்கரா, புதுக்கோட்டை திருச்சி ஜில்லாவிலே இருக்கிறது என்பதற்காக அங்குள்ளவர்களுக்கும் 30 ஏக்கரா என்று சொல்வது எப்படிப் பொருந்தும் ? புதுக்கோட்டைப் பிரதேசத்தில் பத்து வருஷத்திற்கு ஒருமுறை மழை பெய்து விளேயக்கூடியதாக இருக்கிற தால், அந்தப் பகுதிக்கும் இதே கணக்கிட்டால், அதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும் ? ஜில்லா ஒன்றுக இருந்தாலும், அந்தந்த டிவிஷன், அந்தந்த தாலூகாவிலே மாறுதல் இருக்கிறது. அந்த முறையில் திருச்சி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், புதுக்கோட்டை வேறு, மணப்பாறை வேறு, அதேபோன்று திருச்சியில் உடையார்பாளேயம், முசிறி பிரதேசங்கள் வேறுகக் கருதப்படுகிறது. ஆனுல் அதற்கும் ஒரே சட்டம்தான் என்று நிர்ணயம் செய்வது பொருத்தமல்ல. உதாரணமாக 60—40 என்ற சட்டம் வகுத்த காலத்திலே, எங்கள் பிரதேசமாகிய புதுக்கோட்டையில் குத்தகை என்றே பேச்சே கிடையாது. தஞ்சாவூரில் குத்தகை என்ற பழக்கம்

இருந்தது. திருச்சியில் கையேர்வாரம், மாட்டேர்வாரம் என்பது பழக்கத்தில் இருந்தது. அந்தப் பிரதேசங்களிலே 60—40 என்று சட்டம் வகுத்தார்கள். காரணம் என்னவென்றால், அவர்கள் குத்தகை எடுத்துக் கொண்டால், அந்தக் குத்தகைதாரரே தீர்வை உள்பட எல்லாச் செலவையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் புதுக்கோட்டைக்கு குத்தகை என்பதே கிடையாது. எப்போதும் பாதி வாரம்தான் எடுத்துக் கொள்வது வழக்கம். அதன்படி 10 வருஷம் விளையாமல் போய்விட்டாலும், சாகுபடி செய்யாவிட்டாலும், அதைப்பற்றி அவர்களை கேட்பது கிடையாது. விளையும் காலத்தில் மட்டும் செம்பாதி பங்கிட்டு எடுத்துக் கொள்வது வழக்கம். அங்கு 60—40 என்று சட்டம் வந்த காலத்திலும், இதே பழக்கவழக்கத்தைத்தான் கையாண்டு வந்தார்கள். ஆனால் திருச்சியில் எல்லா இடங்களுக்கும் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தபோது, பல கிராமங்களிலே மக்களிடையே கலகங்களும், பலவிதமான இன்னல்களும் ஏற்பட்டது. ஆனால் எங்கள் பகுதியைப் பொறுத்த வரையிலும், இந்தச் சட்டம் சட்டமாகவே இருந்தபோதிலும்கூட, அங்குள்ள மக்கள் இப்போதும் விளைவில் செம்பாதியைத்தான் பங்கிட்டுக் கொள்கிறார்கள். குடியானவர்கள் சாகுபடி செய்தால், அவர்கள் செம்பாதி எடுத்துக்கொள்வதோடு, அவனுடைய மனைவி வந்து கொஞ்சம் அள்ளிக்கொள்வாள். அவனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் வந்து கொஞ்சம் அள்ளிக்கொள்வார்கள். கோவிலுக்குக் கொஞ்சம் அள்ளிக்கொள்வார்கள். களத்திலே வேறு கொஞ்சம் போட்டுக் கொள்வார்கள். இந்த அளவிலேதான் நிலச்சுவான்தார்கள் குடியானவர்களிடையே பழக்க வழக்கங்கள் இருந்து வந்தது. எங்கள் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இந்த 60—40 என்பதே கிடையாது. கலகமும் கிடையாது. சுமுகமாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். சரியான ரெப்பரசென்டேஷன் இல்லாத காரணத்தினாலே, கமிட்டிகளில் எடுத்துச் சொல்ல ஆள் இல்லாத காரணத்தினாலே, இப்படியெல்லாம் சட்டங்களை வகுத்துவிட்டார்கள். ஆனபடியினாலே, குளத்துப் பாசனம் உள்ளப் பிரதேசங்களுக்கும் 10 ரூபாய், ஆற்றுப்பாசனமுள்ள இடங்களுக்கும் 10 ரூபாய் என்று இந்த 10, 12 ரூபாயை ஒரு நிர்ணயமாக வைத்துக்கொண்டு, அதிலிருந்து 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்று சொல்வது மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயமாகும். இது எதிர்காலத்திலே விவசாயியையும், விவசாயத்தையும் எந்த அளவுக்கு பாதிக்கும், விரோதங்கள் எல்லாம் ஏற்படும் என்பதைக் கவனிக்க வேண்டும். இப்போதே சில பகுதிகளில், சில தலைவர்கள், சில கிராமங்களிலே புகுந்து கலகங்கள் உண்டுபண்ணக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் எங்கள் பகுதியில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் பல வருஷங்களாக இந்த மாதிரியான பழக்கவழக்கத்தில் இருந்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் இப்போது ஏழைக் குடியானவர்களுக்கு 1 எக்கர், 2, 3, 4 எக்கர் என்று விற்பனைகூட செய்து வந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அரை எக்கர்கூட இந்த மாதிரிகூட விற்கப்பட்டிருக்கிறது. மேலூர், சத்தியமங்கலம், இறையூர் போன்ற கிராமங்களில் சுமுகமான முறையில் குடியானவர்களிடம் நிலங்களை விற்றுவிட்டார்கள். இந்த முறையிலே எங்கள் பிரதேசத்தில் இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் நாம் இப்போது இந்தச் சபையில் ஸ்டாண்டர்டு எக்கர்பற்றி சர்ச்சை செய்துகொண்டிருக்கிறோம். அப்படி செய்யும்போது, தஞ்சாவூர் ஜில்லா, திருச்சி ஜில்லா, கோயம்புத்தூர் ஜில்லா போன்ற ஜில்லாக்களை அதாவது பாசன வசதியுள்ள ஜில்லாக்களை மனதிலே வைத்துக்கொண்டு, பாசன வசதியற்ற பிரதேசங்களிலே உள்ள பழக்க வழக்கங்களையும் வைத்துக்கொண்டு, அந்த அடிப்படையிலே நிலம் ஒதுக்கப்பட வேண்டுமே தவிர, 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்று சொல்வது சரியல்ல. அந்த அடிப்படையில் வறண்ட புஞ்சைப் பிரதேசத்தில் நிலம் ஒதுக்கப்பட்டால், ஒரு குடும்பத்தில் ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தால் அல்லது அந்த இரண்டு பிள்ளைகளுக்கும் இரண்டு பிள்ளைகள் பிறந்தது என்று வைத்துக்கொண்டால், அவர்கள் பாகம் பிரித்துக்கொண்டு விவசாயமே செய்ய முடியாது. இப்படி ஏற்பட்டால், அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்துவது என்ற முறையில் இதை உணர்ந்து, அதற்குத் தகுந்த முறையிலே இந்தச்

சட்டத்தை அமைக்க வேண்டும். எப்படி ஒரு ஜில்லாவிலே, பல தாலுகாக்கள் அல்லது பல பகுதிகள் என்றிருக்கிறதோ, அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு சட்ட திட்டங்கள் செய்யவேண்டும். முன்காலத்திலே ஆங்கிலேயர்கள் இங்கு வந்தபோது, அவர்கள் அங்கிருந்தே சட்டத்தையும் கொண்டு வரவில்லை. அவர்கள் என்ன செய்தால் நல்லது என்பதற்காக ஆங்காங்குள்ள பழக்க வழக்கங்களை அனுசரித்தே, அந்தந்த ஜாதி, மதம் முதலியவற்றிற்குத் தகுந்த முறையிலேயே சட்டத்தை இயற்றினார்கள். அவர்கள் முஸ்லிம்கள், கிருஸ்துவர்கள், இந்துக்கள் ஆகியோருக்கு ஏற்ற முறையிலே, தனித்தனியாக அவர்கள் சவுகரியத்திற்குத் தகுந்த முறையிலேதான் எல்லாச் சலுகைகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த முறையிலேதான் நாம் இந்த 30 எக்கர்கள் கொடுப்பதை செய்ய வேண்டுமே தவிர, ஆற்றுப்பாசனமுள்ள பிரதேசத்திற்கும் ஒரே மாதிரி, ஆற்றுப் பாசனம் இல்லாத புஞ்சைப் பிரதேசத்திற்கும் ஒரே மாதிரி என்று செய்யக் கூடாது. இதை யெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, எங்கள் பிரதேசம் போன்ற பகுதிகளுக்கு 60 ஏக்கர்கள் என்று கொடுத்தால்கூட போதாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், வருங்கால சந்ததியைப் பற்றியும், பின்காலத்தைப் பற்றியும் யோசனை செய்து சட்டம் போட வேண்டும். பிற்காலத்திலே வரக்கூடியவர்களுக்கு நாம் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். ஆகவே அந்த அளவில் இந்தச் சட்டத்தை யோசனை செய்து, அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* SRI M. P. SUBRAMANIAM : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஐந்தாவது பிரிவு இந்தச் சட்டத்திலே மிகவும் முக்கியமான பிரிவு என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், உச்ச வரம்பு எவ்வளவு இருக்க வேண்டுமென்பதை இந்தப் பிரிவிலேதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இதிலே கண்டுள்ளபடி 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நானும், மற்றும் சிலரும் கொடுத்த திருத்தத்தின் முக்கியமான நோக்கம் 30 ஏக்கர் என்றிருப்பதை, 15 ஏக்கர் என்று குறைக்க வேண்டுமென்பதாகும். ஆனால் இந்த நேரத்தில் ஏற்கனவே ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றால் என்னவென்று நிர்ணயிக்காமல், இவ்வளவு ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்று விவாதம் செய்வது உண்மையிலேயே அர்த்தமற்றது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றால் என்ன என்பதைப்பற்றி இங்கே ஆலோசனை செய்வதற்காக, அந்தப் பிரிவு இப்போது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றால் எவ்வளவு என்பதை முடிவாக நிர்ணயிக்காமல், இப்போது நம் சர்க்கார் விவாதத்தில் இறங்குவதானது ஓரளவுக்கு சரியான அடிப்படையில் இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், இப்போது இந்தப் பிரிவானது விவாதத்திற்கு வந்துவிட்டதால், ஏற்கனவே மூன்றாவது பிரிவில் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ன என்று குறிப்பிட்டிருப்பதை மனதிலே வைத்துக்கொண்டு, நான் என்னுடைய கருத்தை சொல்ல விரும்புகிறேன்.

பதினைந்து ஏக்கர் இருக்க வேண்டுமென்று சொல்வதற்கு முக்கியமான காரணம் பலர் இங்கே பல நேரங்களில் அதாவது பொது விவாதத்தின்போதும், பல பிரிவுகளின்மீது நடத்திய விவாதத்தின்போதும் எடுத்துக் கூறியதுபோல், ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் போதும் என்பதை நானும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். போதுமா, போதாதா என்றப் பிரச்னை பல நேரங்களிலே, குறிப்பாக 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று நிலம் வைத்துள்ள பிரமுகர்களிடத்திலே இருந்து எழுந்தது. அப்படி பெருமளவில் நிலம் வைத்திருப்பவர்கள் நிலத்தை விட்டுக் கொடுப்பது என்பது அவர்களுக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால், பொதுவாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது போதுமா, போதாதா என்றப் பிரச்னைக்கே இடம்

ஏற்படாது. அந்த வகையிலே ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமே தவிர, பல இடத்திலே ஒரு மாதத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் இருந்தால்கூட, போத வில்லை, அதை அனுசரித்து 15 ஏக்கர் நிலம் என்பது போதாது என்று சொல்வது சரியல்ல. பொதுவாகப் பார்க்கும்போது, 15 ஏக்கர் நிலம் போதுமானது என்றுதான் தோன்றுகிறது. பலர் சுட்டிக் காட்டுவதுபோல், திட்டக்குழு, இன்னும் மற்ற பல இடங்களிலும் அங்கீகரிக்கப்பட்டிருப்பது ஆண்டுக்கு சராசரி வருமானம் ரூ. 4,000 அல்லது 5,000 தேவை என்பதுதான். அதுதான் நியாயமான அடிப்படை, சரியான அடிப்படை என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது ஸ்டாண்டர்டு ஏக்கர் பிரகாரம் 15 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருந்தால், உறுதியாக ரூ. 4,500 5,000 வருமானம் வரும், மேட்டுப்பாங்கான நிலமாக இருந்தாலும் சரி, நஞ்சை நிலமாக இருந்தாலும் சரி, நஞ்சை நிலத்தில் ஏகருக்கு குறைந்தது ரூ. 300 வருமானம் கட்டாயம் வரும். ரூ. 300-க்கு குறைந்த வருமானம் வரும் நஞ்சை நிலம் நிச்சயமாக இல்லை. தஞ்சாவூர், திருச்சி முதலிய இடங் களில் பொறுக்கு கமிட்டி சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நிகர வருமானம் குறைந்தது ஒரு ஏகராவுக்கு ரூ. 300 வரும் என்று சாட்சியம் சொன்னார்கள். ரூ. 300-லிருந்து ரூ. 1,000 வரை நிகர வருமானம் வரலாம் என்று கூறி யிருக்கிறார்கள். ரூ. 1,000 வருமானம் வரக்கூடிய சில பகுதிகள் நிச்சய மாக இருக்கின்றன. ஏராளமான இடங்களில் இல்லை என்றாலும், ஒரு சில பகுதிகளில் 1,000 ரூபாய் நிகர வருமானம் வரக்கூடிய இடங்கள் இருக் கின்றன. எனக்குத் தெரிந்தமட்டில் சேலம் மாவட்டத்தில் காவேரிக்குப் பக்கத்தில் வேலூர், சேலம் பகுதியில் குத்தகை மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,200 வருகிறது. கொடிக்கால் பயிர் செய்கிறார்கள். உழுது, பயிர் செய்து, பிறகு நிகர வருமானம் கணக்கிடுவதற்குப் பதிலாக இம்மாதிரி குறிப்பிட்ட இடங்களில் ஒரு ஏக்கருக்கு ரூ. 1,200 குத்தகை மாத்திரம் நிகரமாக கொடுத்துவருகிறார்கள். இரு போக நஞ்சையை எடுத்துக் கொண்டால் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு நெல் உற்பத்தி செய்ய முடியும், செலவு போக எவ்வளவு மீதி ஆகும் என்று கணக்குப் போட்டால் ஒரு ஏகருக்கு ரூ. 300-லிருந்து ரூ. 1,000 வரை நிகர வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதே மாதிரி பல இடங்களில் புஞ்சை நிலங்களில் குச்சி வெள்ளிக்கிழங்கு, மிளகாய், புகையிலை போன்ற பணப் பொருள்கள் விளைவிப்பதாக இருந்தால், நிச்சயமாக ஆண்டு ஒன்றுக்கு ஏகருக்கு ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை வருமானம் கிடைக்கும் நல்ல புத்திசாலித் தனமாக உழுது பயிரிடுகிற குடும்பத்திற்கு. சோம்பேரியாக இருப்பவர் களாக இருந்தால், அல்லது நிலத்தில் பயிர் செய்வதற்கு, சாகுபடி செலவு செய்வதற்கு காலாகாலத்தில் பணம் போடுவதற்கு வசதி இல்லாதவர் களாயிருந்தால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்காமல் இருக்கலாம். ஆனால் போதுமான வசதி இருந்து, கிணறு சாகுபடி உள்ள புஞ்சை நிலத்தில், மின்சார மோட்டார் வைத்து பாசனம் செய்தால் குறைந்தது ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை வருமானம் வரும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். ஆகவே, 30 ஏக்ரா என்று இருப்பதை 15 ஏக்ராவாக குறைத்தால் ஒன்றும் ஆபத்து வந்துவிடாது. உண்மையை உணராத காரணத்தினால்தான் சிலர் அப்படி கருதுகிறார்கள் என்று எண்ணுகிறேன். உச்ச வரம்பை 15 ஏகராவுக்கு நாம் குறைத்துவிட்டாலும், ரூ. 4,000 முதல் முதல் ரூ. 6,000 வரை வருமானம் வரக்கூடிய வசதியும் வாய்ப்பும் இருக்கிறது.

மற்றொன்று, விவாதத்தில் திரும்பத் திரும்பச் சொல்லப்படுவது என்ன வென்றால், கொஞ்சமாவது உபரி நிலம் கிடைப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்பதுதான். பரம்பரை பரம்பரையாக, தலைமுறை தலைமுறை யாக, தங்களை முழுதும் 24 மணி நேரமும் நிலத்தில் அற்பணித்துக் கொண்டிருப்பவர்கள் 3 வேளையும் சாப்பிட முடியாதவர்களுக்கு, ஓரளவுக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ளவர்களுக்காவது வாழ வகை செய்ய வண்டும். உச்சவரம்பு 30 ஏக்ரா என்று வைத்தால் நிச்சயமாக ஒன்றும்

செய்ய முடியாது. எல்லோருக்கும் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, நாடு தொழில் மயமாகி, தொழில் ஸ்தாபனங்களில் ஏராளமான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்பொழுது, நிலத்தை நம்பி வாழக்கூடியவர்கள் தொழிலிலே ஈடுபடமுடியும் என்ற நிலைமை வரும் காலத்தில் வேண்டுமானால், 30 ஏகராவாக உயர்த்திக்கொள்ளலாம். மற்ற தொழில் துறையிலே வாழ்க்கைத் தரம் உயரும்பொழுது, விவசாயத்துறையில் உள்ளவர்களுக்கு அந்தஸ்தை உயர்த்தவேண்டுமென்றால், அப்பொழுது வேண்டுமானால், 30 ஏக்ரா, 50 ஏக்ரா என்று வைத்துக்கொள்ளலாம். அமெரிக்கா போன்ற நாடுகளில் 10 சதவிகித மக்கள் தான் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நமது தொழில் துறையிலே, முன்னேற்றம் ஏற்படும்பொழுது வேண்டுமானால் அப்பொழுது உச்ச வரம்பை மாற்றிக்கொள்ளலாம். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் நிச்சயமாக 15 ஏகராவாக உச்ச வரம்பை குறைப்பதுதான் எல்லா விதத்திலும் பொறுத்தமானது என்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மற்றொன்று. குடும்பம் என்பதற்கு இப்பொழுது விளக்கம் மாற்றப்பட்டிருக்கிறது. இப்பொழுது குடும்பம் என்பது திருமணமான எல்லோருமே தனித் தனி குடும்பமாக கருதப்படுகிறது. புருஷனும், மனைவியும், அவர்களுடைய வயதுவராத குழந்தைகளும், கலியாணம் ஆகாத பெண்களும் சேர்ந்து குடும்பம் என்று கருதப்படுகிறது. ஒரு பெரிய குடும்பத்தில் 4 பிள்ளைகள் இருந்தால், 4 பேர்களும் திருமணம் ஆகியிருந்தால் அது ஒரு குடும்பமாகக் கருதப்படவில்லை. நான்கு குடும்பங்களாக கருதப்படுகிறது. ஆகவே, இந்த விளக்கத்தின்படி ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு 300, 400 ஏக்ரா வரை கிடைப்பதற்கு இந்த மசோதாவில் இடம் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குடும்பம் என்பதற்கான விளக்கத்தை இப்பொழுது அந்த, வகையில் மாற்றியிருக்கிறோம். திரு கலியாணசுந்தரம் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல், ஒவ்வொரு மாற்றமும் எப்படி இருக்கிறது என்றால், உச்ச வரம்பை எந்த வகையில் அதிகப்படுத்துவது என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு எந்தெந்த வகையில் எவ்வளவு அதிகப்படியான நிலம் கிடைக்க முடியுமோ அந்த வகையில் தான் பொறுக்குக் குழுவில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் அமைந்திருந்தன என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். குடும்பம் என்பதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருப்பது முதல், தனிப்பட்ட சொத்து "செப்ரேட் ப்ராபர்டி" என்று விலக்கு அளிக்கப்பட்டிருக்கிற வரையில் பார்த்தால், 30 ஏக்கரா என்ற அடிப்படையை வைத்துக்கொண்டு எவ்வளவு தூரம் அதை அதிகப்படுத்த முடியுமோ அந்த அளவிலேதான் இந்த மசோதா உருவாகியிருக்கிறது. குடும்பம் என்பதற்கு இப்படி விளக்கத்தை அமைத்துவிட்டு, உச்சவரம்பையும் 30 ஏகராவாக வைத்துவிட்டால், நிச்சயமாக கொஞ்சம்கூட உபரி நிலம் கிடைக்கப்போவதில்லை. ஏற்கெனவே செலக்ட் கமிட்டி சுற்றுப்பிரயாணம் செய்து சாட்சியங்களை பதிவு செய்த பொழுது 30 ஏக்கரா என்ற அடிப்படையில் பார்த்தால் பல இடங்களில் நிலம் உபரியாக இல்லை என்று சாட்சிகள் கூறியிருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் லட்சம் சில்லரை ஏக்ரா இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதுவும் பெரும்பாலும் மடங்கள், கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள். இப்பொழுது அந்த நிலங்களுக்கும் விலக்கு அளிக்கப்பட்டுவிட்டது. ஆகவே, 30 ஏக்ரா உச்ச வரம்பு என்று வைத்தால் நிச்சயமாக உபரி நிலம் கிடைக்காது. ஆகவே, அதை 15 ஏகராவாக குறைப்பதற்கு திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதற்குப் பின்னாலே 4-எ என்ற உட் பிரிவானது தனிப்பட்ட சொத்தைப் பற்றிச் சொல்லுகிறது. இதை அடியோடு நீக்கிவிடவேண்டுமென்று கருதுகிறேன். முதலிலேயே ஸ்ரீதன சொத்து என்று சொல்லி பெண்கள் குறிப்பிட்டளவு வரம்புக்கு மேல் நிலம் வைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது ஆண்களுக்கும் தனிப்பட்ட முறையில் செருவாட்டுச் சொத்து இருந்தால் அதற்கும் விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும்

தனிப்பட்டு சம்பாதித்துச் சேர்த்த சொத்து என்று சொல்லி ஒரு குடும்பத்திற்கு 10 எக்ரா 20 எக்ரா வரம்புக்குமேல் சேர்த்துக்கொள்ளுவார்கள். முப்பது ஸ்டாண்டர்டு எக்கரை எவ்வளவு தூரம் ஏற்றுவதற்கு வழி வகை செய்யவேண்டுமோ அவ்வளவு தூரம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு ஆளுக்கு இவ்வளவு வருமானம் தேவை என்பதை ஒரு தேசீயப் பிரச்னையாக மனதில் வைத்து இதைக் கவனிக்கவேண்டும். தனிப்பட்ட முறையில் சம்பாதித்த சொத்து, ஸ்ரீதன சொத்து என்றெல்லாம் சொல்லி விதி விலக்கு அளிப்பது உச்ச வரம்பை உண்மையிலேயே அதிகப்படுத்துவது ஆகும். ஒரு குடும்பத்திலுள்ள ஆண், பெண் எல்லோரையும் சேர்த்து எண்ணிக்கை அடிப்படையில்தான் உச்ச வரம்பு நிர்ணயிக்கவேண்டுமே தவிர, இப்படி தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் விலக்கு அளிப்பது கூடாது. ஆகவே, இந்த 4-எ உட்பிரிவே கூடாது என்று சொல்லும்பொழுது, அதற்குப் பிறகு வரும் "ப்ரொவிஸோ" மற்ற விளக்கங்கள் அவ்வளவும் தேவையில்லே, அடியோடு நீக்கப்படவேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். இவைகளையெல்லாம் மனதில் கொண்டு 30 எக்ரா என்பதை 15 எக்ராவாக நிச்சயம் குறைக்கவேண்டும். அப்படிக் குறைப்பதற்கு ஒத்துக்கொள்ளாவிட்டாலும், "செபரேட் ப்ராபர்டி" போன்ற பிரிவுகளை நிச்சயமாக அடியோடு நீக்கிவிடவேண்டுமென்றும், அதுதான் மிகவும் நியாயம் என்று குறிப்பிட்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

* Sri B. DORAISAMI REDDIAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நில உச்ச வரம்பு மசோதாவைப்பற்றி பல கட்சி அங்கத்தினர்கள் பல மாதிரியான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆனல் சில பேர்கள் 15 எக்ரா இருக்கவேண்டுமென்று சொன்னர்கள். சில பேர்கள் 50 எக்ராகூட இருக்கலாம் என்று ஆசைப்பட்டார்கள், சில தனிப்பட்ட நபர்கள். அதில் நானும் ஒருவன், 50 எக்ராவாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். ரெட்டியாராக இருக்கிறர், ஆகவே கொஞ்சம் நிலம் அதிகமாகக் கேட்கிறர் என்று சில பேர்கள் எண்ணலாம். அப்படியில்லை. உலகத்தில் எல்லாத் துறைகளிலும் அனுபவம் வேண்டும். அதுதான் முக்கியம். ஒரு ஆபீஸராக இருந்தால்கூட அவருக்கு அனுபவம் வேண்டும். எந்தத் தொழிலே எடுத்தாலும், அனுபவம் இல்லாதவர்கள் வேலைக்கு லாயக்கில்லை என்று சொல்லிவிடுகிறர்கள். வக்கீல் பட்டம் பெற்றபிறகு, இன்னெரு வக்கீலிடத்தில் "டிரையினிங்" எடுத்துக் கொண்டால்தான் வக்கீலாக இருப்பதற்கு லாயக்கு என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்த அடிப்படையில் நிலத்தைச் சுற்றிப் பார்க்காத, ஒரு செண்ட் நிலம்கூட இல்லாமல் இருந்த ஒரு நபருக்கு இன்றைக்கு நிலம் கொடுத்தால், எப்படிச் சாகுபடி செய்ய முடியும் ? இதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை பலபேர்கள். இன்றைக்கு நிலத்திற்கு உச்ச வரம்பு என்று சொல்லும்போது, இன்னும் இங்கே எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன அதிலிருந்து வரும்படி வருகிறது ; அதற்கெல்லாம் ஒரு வரம்பையும் காணேம். ஏதோ அவர்களெல்லாம் சரிக்கட்டி விடுகிறர்கள். ஆனல், நிலத்தை அப்படிச் சரிகட்ட முடியாது. எற்கனவேயே நிலம் பட்டா செய்யப்பட்டு, இன்னருக்கு இவ்வளவு நிலம் இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். என்னுடைய கருத்து என்னவென்றல், பல சட்டங்களை வைத்துக்கொள்வதற்குப் பதிலாக, ஒரே சட்டத்தில் பல சட்டங்கள் அடிப்பட்டு போகும்படி ஒரே சட்டத்தைச் செய்துவிடலாம். நீலகிரி தொகுதியிலே ஒரு வகுப்பினர் இருக்கிறர்கள். அவர்களில் ஒரு குடும்பத்தில் முதல் பிள்ளை, ஒரு நபர்தான் கல்யாணம் செய்துகொள்ளலாம். அதேபோல எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து இங்கே தமிழ் நாட்டிலே, முதல் பிள்ளை ஒருவனுக்குத்தான் கல்யாணம், மற்றவர்களுக்கு ஒன்றும் கிடையாது என்று ஒரு சட்டத்தைப் போட்டுவிட்டால், பல கஷ்டங்கள் நிவர்த்தியாகும். இந்த லாண்ட்ஸீலிங் சட்டமும் வேண்டாம், "கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள்" என்று சொல்வது போல, குடும்பக் கட்டுப்பாடு, உணவு உற்பத்திக் குறைவு, ரேஷன் கடைகள் எங்கள் பகுதியில் வேண்டும், என்பதெல்லாம் தீர்ந்து போகும். டாக்டர்

வேண்டாம், அறுவை சிகிச்சை வேண்டாம்; எல்லாம் அடிபட்டுப் போகும். அப்படி நமக்கு நீலகிரியார்கள் வழிகாட்டியாக இருக்கிறார்கள். அந்த சமுதாயத்தை போல, ஒரு சட்டத்தைச் செய்துவிட்டால், இந்த மாதிரி மந்திரிகள் எழுந்து, எழுந்து பதில் சொல்லிக்கொண்டு இருக்கவேண்டாம்; இவ்வளவு பெரிய புத்தகமும் இதற்காக வேண்டாம். புத்தகமே இரண்டு ரூபாய் இருக்கும்போல் இருக்கிறது. இதையெல்லாம் சுருக்கமாக இரண்டே வரியில் இந்த சட்டத்தைச் செய்திருக்கலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

SRI N. K. PALANISAMI : எப்படி இரண்டே வரியில் சட்டம் போடுவது என்று சொன்னால் தேவலை.

SRI B. DORAISAMI REDDIAR : கனம் பழனிசாமி சொன்னார்கள் அவிபக்த குடும்பமாக இருந்தால், 300 எக்ரா வரை போய்விடும் என்று. ஆனால் இன்றைக்கு நாம் போடுவது ஒரு குடும்பத்திற்கு 30 எக்கர் என்றும், அதிலே 5 நபர்களுக்கு மேலே இருந்தால் ஒவ்வொரு நபருக்கும் 5 எக்கர் என்றும் ஆகும். குழந்தைகள் உற்பத்தி செய்யக்கூடாது என்று ஒரு சட்டம் செய்துவிட்டால் இந்தத் தொந்தரவெல்லாம் இருக்காது. அதற்கெல்லாம் சட்டமே இல்லாமல், நாமே நிறுத்திக்கொள்ளலாம். ஆனால் சொல்லலாம், வயதானவர்களாக இருந்தால் அது முடியும், இளம் வயதுள்ளவர்களுக்கு முடியாது என்று. நாமாகவே செய்துகொள்வதால் எல்லோருக்கும் லாபம்தான், நஷ்டம் ஒன்றுமில்லை. இப்பொழுது இருக்கும் விலைவாசியில் குழந்தைகள் அதிகம் பிறந்தாலும் கஷ்டந்தான். ஆறு அணா எண்ணெய் நாலு ரூபாய் விற்கிறது; அப்புறம் காபி பொடி இருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு காபிக்கு ரூபாய் 40, 50, பிறகு விறகு, அரிசி என்று எவ்வளவோ செலவுகள். ஆகவே சட்டமில்லாமல் நாமே செய்துகொள்ளலாம்.

இன்றைக்கு 30 எக்கர் என்பதை 15 என்று குறைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதை ஒரு எக்கர் என்று போட்டாலும் சரிதான். ஆனால், அனுபவம் இல்லாதவர்களாக இருந்தால் ஒன்றும் செய்யமுடியாது. நெல் சாகுபடி செய்ய மிக்க அனுபவம் வேண்டும். நிலத்தை உழுவது எப்பொழுது, விதை விதைப்பது எப்பொழுது, எத்தனை சால் ஓட்டுகிறது, எத்தனை விதை என்றெல்லாம் தெரிய வேண்டும். அதற்கு அனுபவம் வேண்டும். 15 எக்கரே என்று வைத்துக்கொண்டாலும், அதைப் பயிர் செய்ய குறைந்தது ரூ. 3,000 செலவு செய்ய வேண்டும். அவ்வளவையும் செலவழித்து விட்டு, மழையே இல்லையென்றால், எல்லாம் போய்விடும். வட ஆற்காடு போன்ற பிரதேசமானால், அப்படித்தான். பின்னால் வாங்கின கடனை, நிலத்தை விற்றுதான் அடைக்க வேண்டும். தஞ்சாவூரிலே என்றால் பரவாயில்லையென்கிறார்கள். ஆனால் அங்கும் இப்பொழுது மணல் அடித்திருக்கிறது. கூலி $1\frac{1}{2}$ ரூபாய் வரை கொடுத்து மணல் வாருவதை விட வேறு நிலமே வாங்கிவிடலாம் போல் இருக்கிறது. ஆகவே, எங்கும் சுகமும் துக்கமும் கலந்துதான் இருக்கும். உலகமே வெள்ளத்தால் அவதிப்படும் போது, வட ஆற்காட்டில் தண்ணீரே இல்லையென்கிறார்கள். அவர்கள் குறைந்த செலவில் நிரந்தரமாக மகசூல் செய்து விடுவார்கள். மேலே மழை இல்லையென்றால், தஞ்சாவூரில் ஆடி மாதத்தில் விதைப்பது எங்கே; காணிக்கு 10 கலம் தான் கிடைக்கும். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு உப்புக்காரனும் பருப்புக்காரனும் அழுதானாம்; ஒரு வெற்றிலைக்காரனும் சேர்ந்து அழுதானாம். இவர்கள் மூவரும் வண்டியை ஓட்டிக்கொண்டு போனார்களாம். வழியில் ஆற்றில் மூட்டைகள் நனைந்து போச்சாம். உப்புக்காரன் உப்பு கரைந்துபோயிற்று. அவன் அழுதான். பருப்பும் ஊறிப்போய்விட்டது. அதையாவது வெய்யிலில் காயவைக்கலாம். அவனும் அழுதானாம். வெற்றிலைக்காரனும் ஜாஸ்தியாக விழுந்து விழுந்து அழுதானாம். அப்படி எல்லா பிரச்சினைகளிலும், எல்லாருக்கும் குறை இருக்கிறது. 15 எக்கர் என்கிறார்கள். அதிலும்தான் தகராறு ஏற்படும்.

எலக்ஷன், வருகிறது. எல்லோரும் எலெக்ஷனுக்காகப் பேசுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் தான் எலெக்ஷனைப் பற்றி யோசிக்க வேண்டும். இன்றைக்கு மூன்று நாட்களாக நாம் இந்த உச்ச வரம்பு சட்டத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். இதனால் 7,500 ரூபாய் வரை படிக்காக ஆயிருக்கும். எல்லோரும் அப்படி வந்துவிட்டு கையெழுத்துப் போட்டு விட்டுப் போய்விடுகிறார்கள். வேறு வேலை யென்றால், அப்படி போகிறவன்தான் நானும். ஆக உச்ச வரம்புக்காக 7½ ஆயிரம் செலவாகி விட்டது. ஒரு விதப் பலனும் இல்லை என்று சொல்லிக்கொண்டு என் சிற்றுரையை முடிக்கிறேன். (சிரிப்பு).

SRI N. MARUDACHALAM: உதவி சபாநாயகர் அவர்களே, இன்று சர்க்கார் கொண்டுவந்திருக்கும் மசோதாவிலே, 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 30 எக்கர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 5 பேருக்கு மேல் இருந்தால், ஒவ்வொருவருக்கும் 5 எக்கர் அதிகமாகக் கொடுக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்களில் 5 பேர்கொண்ட குடும்பத்திற்கு 15 எக்கர் போதும் என்றும், 5 பேர்களுக்கு அதிகமானால், ஒவ்வொருவருக்கும் 2 எக்கர் அதிகமாகக் கொடுக்கலாம்; அப்படி மொத்தத்தில் 25 எக்கருக்கு மேல் போகக் கூடாது என்பது எங்கள் திருத்தங்கள். பொறுக்குக் கமிட்டி பல ஜில்லாக்களில் பல விவசாயிகளையும் கேட்கும் போதும் பல தனிப் பட்டவர்களும், ஸ்தாபனங்களும் இந்த அபிப்பிராயத்தைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு 15 எக்கர் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தமாதிரி பொது ஜனங்கள் அபிப்பிராயத்திற்கு மாறாக 30 எக்கர் கொடுக்கலாம் என்று போட்டிருக்கிறது. 30 எக்கர் ஒரு குடும்பத்தில் கொடுத்தால், இந்த நாட்டில் கொஞ்ச நிலமும் சர்க்காருக்குக் கிடைக்காது. கிராமப் பகுதிகளில் தொன்று தொட்டு விவசாயம் செய்து வரும் ஏழை தாழ்த்தப்பட்டவர்களுக்கு, விவசாயத்திலேயே பாடுபட்டுவருபவர்களுக்கு எந்த விதமான நன்மையும் கிட்டாது; அவர்கள் என்றென்றும் அடிமைகளாகவேதான் இருக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு துண்டு நிலமும் கிடைக்காது. ஆகவே, 30 எக்கர் என்பதை 15 எக்கராகச் செய்து, 5 பேருக்கு மேல் இருந்தால் ஒவ்வொருவருக்கும் 2 எக்கர் என்றும், மொத்தத்தில் 25 எக்கருக்கு மேற்படாமலும் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI T. SAMPATH: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன் பேசிய கனம் எம். பி. சுப்ரமணியம் அவர்களும் இந்தப் பிரிவு ரொம்பவும் முக்கியமானது என்று குறிப்பிட்டார். இந்த பிரிவின் பிரகாரம் தனிப்பட்ட ஒரு குடும்பம் எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று நிர்ணயிக்கக் கூடிய பிரிவு இது. இந்தப் பிரிவுக்கு ஏகப்பட்ட திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் குறிப்பாக இரண்டு வித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. சில திருத்தங்கள் இந்த முப்பது ஸ்டாண்டர்ட் எக்கர் என்பதை ஐம்பது எக்கர் என்று உயர்த்த வேண்டும் என்றும், மற்றொரு வித திருத்தம் அந்த முப்பது எக்கரை பதினைந்து எக்கர் என்று குறைக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இந்தத் திருத்தம் அதாவது பதினைந்து எக்கராவாக குறைக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களால் கொடுக்கப்பட்ட திருத்தம். கனம் ஸ்ரீனிவாச அய்யர் சொன்னது போல் அடிக்கடி கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் சட்டத்தினுடைய நோக்கம் என்ன என்று புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். நிலங்களைப் பங்கிட்டுக்கொள்வது, பிரித்துக்கொடுப்பது என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அப்படி பிரிக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறவர்கள்தான் பதினைந்து எக்கராவாக பிரிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இதில் சட்ட ரீதியாக உள்ள கஷ்டங்களை நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். நமக்கு இப்பொழுது அதிகாரம் எப்படி இருக்கிறது என்றால் அரசாங்கத்தின் அரசியல் சட்டத்தில் 19-வது பிரிவைப் பார்க்கவேண்டும். அந்த

1 00 p.m.

[Sri T. Sampath] [21st September 1961

பிரிவில் என்ன சொல்லி இருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதன்படி நிலங்களை பங்கிட்டுக்கொள்வதோ பிரிப்பதோ இல்லை. அந்தச் சட்டப்படி தனிப்பட்டவர்களுடைய சொத்துக்களை கட்டுப்படுத்து வதற்குள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில்தான் கட்டுப்படுத்த முடியும். அந்தப் பிரிவைப் படித்துப் பார்த்தால் இது தெரியும். நியாயமான முறையில் தகுந்த காரணங்களைக்காட்டி அதாவது "ரீசனபிள் ரெஸ்ட்ரிக்‌ஷன்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் சொல்லுகிற மாதிரி பதினைந்து ஏக்கர் என்று பிரித்துவிடலாம், அது சுலபம்தான். சொத்து பாத்யதை என்பது சாதாரணமானது அல்ல. இந்த ஒரு விஷயத்தில் அது உயர் நீதி மன்றங்களுக்குப் போகக் கூடியது. அப்படி உயர் நீதி மன்றங்களுக்குச் சென்றால் அங்கே இந்த 19-வது பிரிவைப் படித்துப்பார்த்தால் அதற்கு நாம் கட்டுப்படக்கூடிய விஷயமாக இருக்கும். அதன்படி கட்டுப்படுத்தக் கூடியதா, அதற்கு தகுந்த காரணங்கள் இருக்கிறதா என்று பார்ப்பார்கள், அதாவது "ரீசனபிள் ரெஸ்ட்ரிக்‌ஷன்" இருக்கிறதா என்று பார்ப்பார்கள். அப்படிப் பார்த்துதான் முடிவுக்கு வருவார்கள். அப்படி இல்லை என்று முடிவுக்கு வந்தால் இந்த மசோதா முழுவதுமே செல்லாமல் போய்விடக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிடும். அந்த அடிப்படையில் 19-வது பிரிவு இருக்கிறது. ஆகவே நேர்மையாக கட்டுப்படுத்த வேண்டும். இதைப்பற்றி பொறுக்குக் கமிட்டியில் நன்றாக ஆராய்ந்து பார்த்துதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது, அதாவது முப்பது ஏக்கர் என்று.

அதோடு மட்டுமல்ல, வருமானத்தின் பேரிலும், நில விஸ்தீரணத்தின் பேரிலும் உச்ச வரம்பை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் யோசிக்காமல் இல்லை. அவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்துதான் கடைசியில் வருமானத்தையும் ஓரளவுக்கு நாம் யோசிக்கவேண்டும் என்றும், விஸ்தீரணத்தையும் ஒருவாறு யோசிக்கவேண்டும் என்று முடிவு செய்து அதன்படி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவும் ஒரு சிக்கலான நிலைதான். அதாவது அதிகமாக வேண்டும் என்று சிலர் கேட்கிறார்கள், அந்த முறையில் திருத்தங்கள் வந்திருக்கின்றன என்று சொன்னேன். கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் குறிப்பிட்டது மாதிரி பதினைந்து ஏக்கர் என்றும் குறைத்திருக்கலாம். பதினைந்துக்குக் கீழும் குறைத்திருக்கலாம். எந்த அடிப்படையில் இப்படி பதினைந்து ஏக்கர் என்று குறிப்பிட்டார்கள் என்பதுதான் தெரியவில்லை. அதற்கு ஆதாரம் இருக்கவேண்டும். வருமானத்தை எடுத்துக்கொண்டாலும் அதை விளக்கக்கூடியதாக இல்லை. இப்பொழுது இருக்கக் கூடிய விவசாயச் செலவையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். இதைப்பற்றியெல்லாம் பொறுக்குக் கமிட்டியில் விவாதிக்கப்பட்டது. அதன் பிறகுதான் எந்த அளவுக்கு நிர்ணயம் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. எல்லாவற்றையும் யோசித்துதான் கடைசியில் முப்பது ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்தால்தான் சரியாக இருக்கும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும் அங்கேயும் இப்படித்தான் வைத்திருக்கிறார்கள். ஆந்திராவை எடுத்துக்கொண்டாலும், அங்கே பாமிலி ஹோல்டிங் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். பாமிலி ஹோல்டிங்கை எடுத்துக்கொண்டால் ஒன்பது ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டு அதற்கு நான்கு மடங்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது 36 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று. யூ.பி.-யை எடுத்துக்கொண்டால் முப்பது ஏக்கர் என்றும், பம்பாயில் ஜாஸ்தியாகவும் அதாவது 48 ஏக்கரும் டில்லியில் முப்பது ஏக்கரும் வெஸ்ட் பெங்காலில் 25 ஏக்கரும் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதனால்தான் நான் இதில் சிக்கல் இருக்கிறது என்று ஏற்கனவே சொன்னேன். நஞ்சை நிலமாக நாம் நிர்ணயிக்க வேண்டும் என்ற அடிப்படையில், கொள்கையில்தான் பொறுக்குக் கமிட்டி முப்பது ஏக்கர் என்று முடிவு செய்திருக்கிறது. அப்படி நிர்ணயம் செய்தால்தான் சரியாக இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. பல சங்கடங்கள் வருவதை தவிர்ப்பதற்குத்தான் இப்படி செய்யப்பட்டது. சாதாரணமாக

சொத்து பாத்தியதையை தவிர்க்க விரும்பமாட்டார்கள். கோர்ட்டுக்குப் போனாலும் "ரிசனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்" இருக்கிறதா என்று பார்ப்பதற்குத்தான் இப்படி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது மிகவும் நியாயமானது என்று கருதிதான் இப்படி செய்யப்பட்டிருக்கிறது.

மற்ற திருத்தங்களைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அதுதான் 74-ஆவது திருத்தம். கனம் ஸ்ரீனிவாச அய்யர் அந்த திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார். அதாவது நிலச்சுவாந்தார்களுக்கு வரம்பு கட்டியிருக்கிறார்கள். எந்த அளவில் ஒரு குடியானவன் சாகுபடிக்குக் கொண்டு வரலாம் என்பதற்கு உச்ச வரம்பு கட்டவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறார். அதை 1-பி-க்கு சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

'The ceiling area in the case of every person other than a tenant shall be . . . .' என்று சொல்லப்படுகிறது. இதில் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. அதாவது **with great respects to him** மிக மரியாதையுடன் அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப் பிரிவில் குடியானவனுக்கு வரம்பு கட்டினால் அது சட்ட ரீதியாக சரியாக இருக்குமா என்ற ஒரு அச்சம் எனக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் இந்தப் பிரிவு ஒரு குறிப்பிட்ட நபர் எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்ற பிரிவு. இந்தப் பிரிவில் அதை எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்படி எடுத்துக் கொண்டால் அரசியல் சட்டப்படி டிஸ்கிரிமினேஷன் என்று சொல்வார்கள், அதாவது பாகுபாடு ஏற்படுவதற்கு இடம் கொடுக்கும் என்ற அச்சம் இருக்கிறது, ஏனென்றால் மிராசுதார்கள் நிலச்சுவான்தார்களுக்கு நிர்ணயிக்கும்போது குடியானவர்களுக்கு இவ்வளவு நிலம் என்றால் அவர்களுக்கு முப்பது எக்கர், டெனண்டுக்கு ஐந்து எக்கர் என்று குறிப்பிட்டால் அநேகமாக சட்ட ரீதியாக அது சரியல்ல. ஒரு வாதத்தைக் கிளப்பக் கூடியதாக இருக்கிறது என்பதை தாழ்மையுடன் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் இந்த மசோதாவில் பின்னால் அதற்கு வழிவகை செய்திருக்கிறோம். குடியானவர்களுக்கு எப்படிப்பட்ட சலுகைகள் கொடுப்பது என்பதைப்பற்றி பின்னாடி சொல்லப்போகிறோம். அந்த நிலைமையில் இங்கேயே குறிப்பிடுவது அவ்வளவு சரியல்ல என்று தோன்றுகிறது. அதற்கு வாதம் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். அவர் என்ன சொல்லப் போகிறார் என்பது தெரியவில்லை. பிறகு சமாதானம் சொல்லுகிறேன் என்று சொல்லுகிறார். என்னைக் கேட்ட பின்பு சமாதானம் சொல்வார் என்று எண்ணுகிறேன். ஆகவே நான் சொன்ன மாதிரி முப்பது எக்கர் என்று பொறுக்குக் கமிட்டி முடிவு செய்திருப்பது சரி என்று நினைக்கிறேன். ஆகவே திருத்தங்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI N. MAHALINGAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, செலக்ட் கமிட்டியினுடைய முடிவுப்படி 5-ஆவது பிரிவில் சீலிங் முப்பது எக்கர் இருக்கவேண்டும் என்று கண்டிருக்கிறது. பூமி சொந்தக்காரருக்கு முப்பது எக்கர் என்று முடிவு செய்துவிட்டு குத்தகைக்காரர்கள் அதாவது இடைதட்டுக்காரர்களுக்கு எவ்வளவு என்று இல்லாமல் இருப்பதால் கனம் அங்கத்தினர் ஸ்ரீனிவாச அய்யர் ஒரு திருத்தம் அதாவது 68-வது திருத்தம் கொடுத்திருக்கிறார். அதாவது "**every person**" என்பதற்கு பிறகு "**other than a tenant**" என்று சேர்க்கவேண்டும் என்று கொடுத்திருக்கிறார். அந்த திருத்தத்தை நான் ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மசோதாவை பொறுக்குக்கமிட்டி மூலம் ஆராய்ந்து ராஜ்யத்தில் இருக்கிற பல்வேறு இடங்களுக்குச் சென்று இது சம்பந்தமாக பல விவசாயிகளைச் சந்தித்து பேசி இறுதியாக முப்பது ஸ்டாண்டர்ட் எக்கர் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள்.

இன்றைய தினம் முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்ச வரம்பு நிர்ணயம் செய்தோம் என்றால், அந்த விவசாயக் குடும்பத்திற்கு அந்த முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரிலே என்ன வருமானம் வரும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பது இரு போக நஞ்சை என்று வைத்துக்கொண்டால், சுமார் 500 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை வருமானம் வரலாம். முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரில் சுமார் 15,000 ரூபாய் முதல் 18,000 ரூபாய் வரையிலும் வருமானம் வரலாம் என்று நான் எண்ணுகிறேன்.

நடுத்தரக் குடும்பமொன்று இந்தக் காலத்தில் வாழ்க்கை நடத்த வேண்டும், அவர்களுடைய குழந்தைகள் கல்லூரி வரையிலும் படிக்கவேண்டும் என்ற விருப்பம் நமக்கு இருக்குமானால், முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இன்றைய வாழ்க்கையில் நாளுக்கு நாள் பொதுத்துறை அதிகமாகிக்கொண்டிருக் கும்போது, அதிலே இருக்கும் அதிகாரிகள், இன்ஜினீர்கள் போன்றவர் களெல்லாம் பொதுவாக ரூ. 1,500 முதல் ரூ. 2,000 வரை மாதச் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய கனம் அமைச்சருக்கு ரூ. 1,500 மாதச் சம்பளமாக நிர்ணயித்திருக்கிறார்கள். உயர் நீதி மன்ற நீதிபதிகளுக்கு மூவாயிரம் ரூபாய் சம்பளமாக இருக்கிறது. ஆக, தொழில் துறையிலும் உத்தியோகத் துறையிலும் இருக்கக் கூடியவர் களெல்லாம் மாதம் 2,000 முதல் 3,000 ரூபாய் வரையில் சம்பாதிக்க வசதி இருக்கும்போது, விவசாயத்தில் இருப்பவர்களுக்கும் அதே மாதிரி யாக வாய்ப்பு இருக்கவேண்டும் என்று நான் இந்தச் சபையிலே முன்னே பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேன். அந்த வகையிலே முப்பது ஸ்டாண் டர்டு ஏக்கர் என்று செலக்ட் கமிட்டியார் நிர்ணயித்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

ஜனநாயக முறையில் இயங்கக் கூடிய அரசாங்கத்தில் நாம் இருக் கிறோம். மசோதாக்கள் சபை முன் வந்து விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப் படவேண்டிய நிலை இருக்கிறது. ஆனால், சபை முன்பு செலக்ட் கமிட்டி யின் அறிக்கை வந்து, அதன் மீது நாம் விவாதிக்கும் நேரத்தில், நாம் பார்ப்பது என்ன? ராஜ்யத்தின் பல்வேறு சர்க்கார்க் காரியா லயங்கள் முன்னிலையில் ஒரு சில கட்சிக்காரர்கள், தங்கள் சார்பாக உள்ளவர்களை அனுப்பி, அங்கு சத்தியாக்கிரகம் செய்யச் சொல்கிறார்கள். சத்தியாக்கிரகம் செய்வதற்குக் காரணமாகச் சொல்லப்படுவது 15 ஸ்டாண் டர்டு ஏக்கர் உச்ச வரம்பாக இருக்கவேண்டும் என்பது. ஜனநாயகத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு இவ்வாறான சத்தியாக்கிரகங்கள் எவ்வளவு தூரம் உபயோகமாக இருக்கும் என்பது எனக்கு மிகவும் சந்தேகமாக இருக்கிறது.

ஜனநாயக அமைப்பை ஏற்றுக்கொண்டு, தேர்தலில் நின்று சட்ட சபையில் ஆளும் கட்சி என்றும் எதிர்க் கட்சிகள் என்றும் அங்கம் வகிக்கிறார்கள் அங்கத்தினர்கள். அவ்வாறு இருக்கும்போது, சட்ட சபையினுடைய இறுதி முடிவுக்குக் காத்திராமல், சட்டசபையையும் சர்க் காரையும் பலவந்தப்படுத்தும் முறையில், நம்முடைய ராஜ்யத்தில் பல்வேறு இடங்களிலும் சத்தியாக்கிரகம் செய்வது என்பது மிகவும் பொருத் தமில்லாத செய்கை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பாக நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய அந்தக் கட்சிக்காரர்கள் உண்மையிலேயே என்ன எண் ணுகிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 15 ஸ்டாண் டர்டு ஏக்கர் என்று சொல்கிற அவர்கள் இன்றையதினம் எண்ணுவ தெல்லாம், சிறு நிலச்சுவாந்தார்களுடைய ஆதரவைத் தாங்கள் தேட

வேண்டும் என்பதற்காகத்தான். அவர்கள் சொல்லக்கூடிய வார்த்தைகளினுல் சிறு நிலச்சுவாந்தார்களுடைய ஆதரவைத்தேட முடியும் என்ற எண்ணத்தில் அவர்கள் இருக்கிருர்கள் . . .

Sri N. MARUDACHALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய சங்கத்தார் சத்தியாக்கிரகம் செய்தால், கட்சி சத்தியாக்கிரகம் செய்ததாக ஆகாது. விவசாய சங்கம் ஒரு கட்சியைச் சார்ந்தது அல்ல. எல்லா மக்களும் விவசாய சங்கத்தில் அங்கம் வகிக்கின்ருர்கள்.

Sri M. KALYANASUNDARAM : கனம் அங்கத்தினருக்கு சத்தியாக்கிரகம் தெரியாது. ஜனநாயகத்தில் சத்தியாக்கிரகம் பண்ண உரிமை உண்டு. ஜனநாயகத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி சத்தியாக்கிரகம் செய்தால், அதில் தவறு இல்லே.

DEPUTY SPEAKER : The hon. Member may continue his speech.

Sri N. MAHALINGAM. சத்தியாக்கிரகத்தில் யாருக்கு நம்பிகை இருக்கிறது என்பது அவருடைய மனச்சாட்சியைக் கேட்டுப் பார்த்தால் தெரியும். சத்தியாக்கிரக நேரத்தில், லட்சக்கணக்கான தேச பக்தர்கள் ஜெயிலுக்குப் போன நேரத்தில், தேசப் போருக்குப் பிரசாரம் செய்து கொண்டிருந்த கட்சிக்காரர்கள் இன்றைக்கு இங்கு வந்து, சத்தியாக்கிரகம் தெரியாது என்று என்னேப் பார்த்துச் சொன்னுல் அது மிக ஆச்சரியமாக இருக்கிறது.

Sri M. KALYANASUNDARAM ; நான் அன்று ஜெயிலில் இருந்த போது கனம் அங்கத்தினர் அப்பொழுது அங்கு இல்லே.

Sri N. MAHALINGAM ; கனம் அங்கத்தினர் திரு. கல்யாண சுந்தரம் அவர்கள் தனிப்பட்ட முறையில் அவ்வாறு இருந்தார் என்பது எனக்குத் தெரியாது. ஆனுல், நான் அவருடைய கட்சியைப் பற்றிச் சொல்கிறேன். இதை அவர் நிச்சயமாக மறுதளிக்க முடியாது.

15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லக் கூடிய கட்சிக்காரர்கள் இன்றைய தினம் என்ன விரும்புகிருர்கள் ? சிறு நிலச்சுவாந்தார்களிடம் தாங்கள் ஏதோ தேர்தல் நேரத்தில் செல்வாக்குப் பெற வேண்டுமென்ற காரணத்தால் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்கிருர்களே தவிர, அவர்களுடைய உண்மையான நோக்கம் அது அல்ல. நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக அவர்களுடைய கட்சிக் கொள்கை என்ன என்பதை உண்மையாகவே அவர்கள் சொல்லியிருந்தால், அது விவாதத்திற்குப் பொருத்தமாக இருந்திருக்கும்.

அவர்களுடைய கட்சி ஆட்சி செய்கின்ற பக்கத்து தேசத்தைப் பார்க்கலாம். சீனதேசத்திலே புதிதாக அந்தக் கட்சி அதிகாரத்திற்கு வந்தபின் நிலங்களேப் பங்குபோட்டு ஐந்து ஏக்கர் வீதம் பிரித்துக்கொடுத்தார்கள். பிற்பாடு, பிரித்துக்கொடுத்த பூமியெல்லாம் கட்டாயமாக ஜாயிண்ட் பார்மிங் என்ற வகையில் கூட்டுறவு சங்கங்களின் கீழ் கொண்டு வந்தார்கள்.

Sri M. KALYANASUNDARAM ; அந்த மாதிரி இங்கு செய்யுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லே.

Sri N. MAHALINGAM : கனம் அங்கத்தினர் பதில் சொல்லும்போது சொல்லட்டும். ஆக, ஜாயிண்ட் பார்மிங் என்ற வகையில் கட்டயமாகக் கூட்டுறவு சங்கங்களின் கீழ் அவைகளேக் கொண்டுவந்தார்கள். அதற்குப் பின்னுல், அம்மாதிரியாக கூட்டுறவு சங்கம் இல்லாமல், கம்யூன் முறையாக, இருபதாயிரம், முப்பதாயிரம் ஜனங்கள் இருக்கும் பிரதேசத்தில் உள்ள பூமி பூராவையும் ஒரே பண்ணேயாகக் கொண்டுவந்து விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இன்றையதினம் சீன தேசத்தில் வந்திருக்கும் கம்யூன் முறையில் ஒருவருக்கும் ஒரு செண்ட் நிலம் கூடச் சொந்தமாகக்கிடையாது

சொந்த வீடு இல்லை. ஆடு, மாடு கூடச் சொந்தமாக இல்லை. அவர்க ளெல்லாம் சர்க்காரின் விவசாயத் தொழிலாளர்களாக இயங்குகிறார்கள். ஆண்கள் ஒரு ஷெட்டிலும், பெண்கள் ஒரு ஷெட்டிலும் இருந்து, அவர்களுடைய வாழ்க்கை நடந்துக்கொண்டு வருகிறது. இவ்வாறு மக்க ளுக்கு விவசாயத்திலே அக்கறை இல்லாத ஒரு நிலை அங்கு ஏற்பட்டிருக் கிறது. அவர்களெல்லோரும் தினசரிக் கூலிக்காரர்களாக வாழ்க்கை நடத் துவதன் காரணமாக சமீபத்தில் அங்கு பெரிய பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கிருந்து போயிருக்கும் டாக்டர் சந்திரசேகரன் போன்ற பொருளாதார நிபுணர்கள் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சீன தேசமானது உலக நாடுகளில்—குறிப்பாக கனடா, ஆஸ் திரேலியா முதலிய நாடுகளில்—தானியங்கள் விலைக்கு வாங்கிக்கொண் டிருக்கும் நிலையைப் பார்க்கிறோம். அந்த அளவுக்கு உற்பத்தி குறை யும்படியான நிலை அந்தத் தேசத்தில் ஏற்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்டுக் கொள்கை இது விஷயத்தில் சீன தேசத்தில் கடைபிடிக்கப்பட்டு அந்தத் தேசத்தில் ஒருவருக்கும் பூமி இல்லாத நிலையை உண்டு பண்ணியிருக் கிறார்கள்.

அதே போல், வேறு கம்யூனிஸ்டு நாடுகளிலும் முயற்சிகள் செய் திருக்கிறார்கள். போலண்டு தேசத்திலும் அம்மாதிரி முதலில் பூமியைப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். பின்னால் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தினார்கள். கட்டாய முறையில் ஐயாயிரம் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தினார்கள், விவசாயத்திற்காக. அவை பலவந்தமாக இருந்ததால் சரியான முறையில் உற்பத்தி ஏற்படவில்லை. அதன் காரணமாக, பஞ்சம் ஏற்படும் நிலை ஏற்பட்டது. அது மாத்திரமல்ல. ஹங்கேரிப் புரட்சி ஏற்பட்டு அந்தத் தேசத்திலே தகராறு ஏற்பட்டபோது, போலண்டு தேசத்திலும், கிழக்கு ஜெர்மனியிலும் விவசாயிகள் மத்தியிலே பெரும் குமுறல் ஏற்பட்டது. அதன் காரணமாக, பல நாட்களாக விலக்கி வைக்கப்பட்டிருந்த திரு கோமுல்கோ என்னும் தலைவர் மறுபடியும் பிரதமராக வந்திருக்கிறார். அவர் வந்த பிற்பாடு, கூட்டுறவு முறையில் கட்டாயம் இருக்கக் கூடாது என்றும், விருப்பப்பட்டவர்கள் பிரிந்து போகலாம் என்றும் உத்திரவு இட்டார்கள். 5,000 சொஸைட்டிகளில் 4,500 சொஸைட்டிகள் கலைக்கப்பட்டு விட்டன. இம்மாதிரி நிலை போலண்டிலே ஏற்பட்டது.

ஆகவே, இன்றையதினம் கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர்கள் 15 ஸ்டாண் டர்டு ஏக்கர் உச்ச வரம்பு இருக்கவேண்டுமென்று சத்தியாக்கிரகம் செய் கிறார்கள் என்றால், அதே கொள்கையை அவர்கள் நிலையாகக் கொண் டிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. இந்த சமயத்தில் இவ்வாறு சொன்னால் தங்களுக்கு ஏதாவது ஒரு சிலருடைய ஆதரவு கிடைக்குமே என்ற எண்ணத்தினால் சொல்கிறார்களே தவிர, இறுதிவரை இதே லட்சியம் நிச்சயமாக இருக்காது என்று நாம் உணரவேண்டும் என்பதற்காக இந்த உதாரணங்களை நான் இங்கு சொல்கின்றேன்.

முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஜாயிண்டு செலக்ட் கமிட்டி நிர்ணயித்திருக்கிறது என்றால், அவர்கள் ஒரு நியாயமான முடிவைத் தான் செய்திருக்கிறார்கள். அதை ஓரளவு நாம் ஏற்றுக்கொள்ளவேண் டியது அவசியம் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

ஜனநாயகம் என்றால், தேர்தல் நடத்தி, அதில் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய பிரதிநிதிகள் அரசாங்கம் நடத்தவேண்டும்.

தேர்தல் என்று சொன்னால் நமக்கு ஏகப்பட்ட செலவு. அந்த அளவுக்குச் செலவிட்டு தேர்தலில் நின்று வெற்றி பெறுவதற்கு ஆட்கள் வேண்டுமென்றால் நடுத்தர மக்கள் அழிந்துபோகாமல் காப்பாற்றப்பட வேண்டும். இல்லாது போனால் எல்லாப் பேர்களுக்கும் கட்சியில் இருந்து பணம் கொடுத்துத் தேர்தலில் நிற்க வைக்கவேண்டிய நிலை ஏற்படும். அல்லது தொழில் பிரமுகர்கள் தான் தேர்தலில் நிற்கலாம் என்ற நிலைதான் ஏற்படும். ஆகவே ஒவ்வொரு பிராந்தியத்திலும் மக்களுடைய

வாழ்க்கையிலே அக்கறை செலுத்துவதற்கு, பொது வாழ்க்கையில் கவனம் செலுத்தக் கூடிய தன்னலமற்றவர்கள் பலர் தேவை. இப்போது அங்கங்கே பஞ்சாயத்து யூனியன்கள் பல அமைத்து வருகிறோம். தலைவர், உபதலைவர் போன்றவர்கள் எல்லாம் தேவை. ஆக ஜனநாயகம் நடக்க வேண்டுமென்று சொன்னால் தங்களுடைய நன்மையை, தங்களுடைய கஷ்டங்களைக் கவனிக்காமல் பொதுவாழ்வில் ஈடுபடக் கூடியவர்கள்—தங்கள் சொத்தையும் செலவிட்டு பணியாற்றவேண்டியவர்கள்—அவசியம். இதற்காகவாவது சொத்து இருக்கவேண்டும்.

ஜனநாயக நாடுகள் எதை எடுத்துப் பார்த்தாலும்—அந்தந்த நாடுகளின் வளர்சிக்கு அந்தந்த நாட்டில் உள்ள நடுத்தர பணக்காரர்கள் தான், நிலக்காரர்கள் தான் பெரிதும் உதவி புரிந்து வந்திருக்கிறார்கள் அதை நாம் அனுபவ பூர்வமாக உணர்கிறோம். ஆக அந்த முறையில் பார்த்தாலும் நம் தேசம் விவசாயிகள் நிறைந்த நாடாக இருப்பதனால் விவசாயத் துறையில் நாம் செய்கின்ற சீர்திருத்தங்கள் அந்த நடுத்தர விவசாய வர்க்கத்தை அழித்துவிடக்கூடியதாக இருக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் இன்றையதினம் ஒரு குறிப்பிட்ட கட்சி சத்தியாகிரகம் என்று சொல்லிக்கொண்டு சீலிங் 15 எக்கர் தான் வைக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்வது ஜனநாயகத்திற்கு விரோதமானது. அவர்கள் எப்போதுமே அத்தகைய காரியங்களைத்தான் செய்து வருகிறார்கள். ஆக அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. பொறுக்குக் கமிட்டியினால் செய்யப்பட்டுள்ள முடிவை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI K. R. NALLASIVAM : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நில உச்ச வரம்பு மசோதாவில் மிகவும் முக்கியமான பகுதியே ஒருவர் எத்தனை ஸ்டாண்டர்டு எக்கர் வைத்துக்கொள்வது என்பது தான். இப்போது 30 ஏக்கர் என்று வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் இந்த நாட்டு பாடுபடும் விவசாய மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பது, இதில் உள்ள அடிப்படையான பிரச்சனை என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் நில உச்ச வரம்பை எந்த அளவுக்கு குறைக்கிறோமோ அந்த அளவுக்கு நிலமில்லாத ஏழைகள் அதிகம் பேர்களுக்கு நிலம் கிடைக்க வாய்ப்பு ஏற்படுவதோடு உற்பத்தியும் அதிகமாகப் பெருக இடமேற்படுகிறது. நிலம் குறைவாக இருப்பதனால் உற்பத்தி அளவு குறைந்துவிடாது. அதிகப்படியான வெள்ளாமை ஏற்படுகிறபோது நிச்சயமாக வருமானம் பெருக இடமுண்டு. உலகத்தில் விவசாயத் துறையில் சீனு போன்ற நாடுகளைவிட ஜப்பான் நாட்டைப் பின்பற்றுவது மேலானது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அதை ஒப்புக்கொள்ளச் செய்கிறோம். அங்கு இருக்கக் கூடிய உச்சவரம்பு என்ன என்பதை நாம் தெரிந்துகொண்டால் தான் மிகவும் பிரயோஜனகரமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். தனி ஒரு விவசாயி $7\frac{1}{2}$ ஏக்கரா வைத்துக் கொள்ளலாம். அதுதான் உயர்ந்த பட்ச அளவு. இங்கும் கூட ஒன்று பார்க்கலாம். குறைந்த அளவு நிலம் வைத்துக்கொண்டிருக்கிற விவசாயி—அதைப்போல மூன்று நான்கு மடங்கு நிலம் வைத்துக் கொண்டிருக்கிற விவசாயியைவிட சராசரி அதிகம் உற்பத்தி செய்கிறான். அதுவும் குறிப்பாக கோயம்பத்தூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் நான் அதை நிச்சயமாகச் சொல்ல முடியும். குறைந்த நிலம் உடையவர்கள் அதிக நிலம் உடையவர்களைக் காட்டிலும் கடலையோ, பருத்தியோ, கரும்போ போட்டு விளைவித்துக் காட்டுகிறார்கள். ஆகவே உச்ச வரம்பு குறைவாக நிர்ணயிப்பதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டுவிடும் என்று சொல்வதற்கில்லை. அதோடு இன்று விவசாய நிலத்திற்கு மட்டும் தான் வரம்பு கட்டப்படுகிறது. மீதியுள்ள சொத்துக்கு வரம்பு கிடையாது என்று தான் சொன்னாலும் கூட இன்னும் கொஞ்சகாலத்தில் வரம்பு கட்டுவதற்கு கிளர்ச்சி ஏற்படும், மீதியுள்ள வருமானத்திற்கும் வரம்பு வந்தே தீரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[Sri K. R. Nallasivam] [21st September 1961

நான் 7½ எக்கர் தான் உச்ச வரம்பு இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. ஒட்டுமொத்தமாக 15 எக்கர் என்ருவது போடலாம். இப்படிக குறைப்பதனல் அவர்கள் சொல்கிற வருமானத்தைவிட அதிகம பெறமுடியும். காரணம் குறைந்த அளவில் இருந்தால் தான் உற்பத்தி அதிகம் செய்ய முடியும். அதிக நிலம் இருக்கிற இடத்தில் சோம்பேறித்தனம் தான் இருக்கும். நியாயமாகப் பார்த்தால் ஒருவருக்கு நஞ்சை பத்து எக்கர் போதுமானது.

கொஞ்சம் நெளிவு சுளுவு இருக்கவேண்டுமென்ருல் 15 எக்கர் என்று நிர்ணயித்துக்கொள்ளலாம். ஆகவே அந்த அடிப்படையில் இதைக கவனிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

1-30 a.m.

The House then adjourned.

IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

359. *Notification issued with G.O. Ms. No.* 2718, *Home ,dated 7th August* 1961 *inserting a new Rule* 303-*B after Rule* 303-*A of the Madras Motor Vehicles Rules*, 1940 *issued with Home Department Notification No.* 357, *dated 29th March* 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette *Extraordinary, dated 30th March* 1940. [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

B. Reports, Notifications and other papers.

207. *The Madras State Aid to Industries (Second Amendment) Bill,* 1961.